விலை : 20.00
பக்கங்கள் :இருபத்து நான்கு

website : www.valampurii.lk

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆடி 19 புதன்கிழமை (03.08.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 228

## போராளிகளுக்கு ஊசி போட்ட விவகாரம்

# மருத்துவ பரிசோதனை நடத்த அரசு தயார்



## அமைச்சர் ராஜித அறிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்ட காலத்தில் உடலியல் ரீதியில் ஏதாவது கெடுதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் அது தொடர்பில் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டால் அவர்களுக்கு உடற்பரிசோதனை நடத்துவதற்கு தயாராக இருக்கின்றோம் என்று அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## பணமோசடி குற்றச்சாட்டில் கைதான
## சந்தேக நபரொருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

காணாமல் போனவரை மீட்டு தருவதாக கூறி, பணம்பெற்று மோசடி செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கைதான நபர் ஒருவர் நேற்று மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

சாவகச்சேரி நுணாவில் மேற்கை பிறப்பிடமாக கொண்ட கந்தசாமி கிருஷ்ணன் (வயது 59) என்ற 6 பிள்ளைகளின் தந்தையே உயிரி


24ஆம் பக்கம் பார்க்க....

## கீரிமலையில் மீன்பிடி துறைமுகம்;
## விக்னேஸ்வரன் கடும் எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

இந்துக்கள் புனிதமாகக் கருதும் யாழ்ப்பாணம் கீரிமலையில் மீன்பிடி துறைமுகம் ஒன்றை அமைப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சி சினத்தை ஏற்படுத்தியுள்ளதாக வடமாகாண முதலமைச்சர் விக்னே

23ஆம் பக்கம் பார்க்க....



## மாணவன் ஒருவன் சடலமாக மீட்பு

## ‘மகிந்தவை தண்டியுங்கள்’

## பணமோசடி குற்றச்சாட்டில் கைதான சந்தேக நபரொருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

காணாமல் போனவரை மீட்டு தருவதாக கூறி, பணம் பெற்று மோசடி செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கைதான நபர் ஒருவர் நேற்று மர்ம மான முறையில் உயிரிழந்துள்ளார்.

சாவகச்சேரி நுணாவில் மேற்கை பிறப்பிடமாக கொண்ட கந்தசாமி கிருஷ்ணன் (வயது 59) என்ற 6 பிள்ளைகளின் தந்தையே உயிரி


24ஆம் பக்கம் பார்க்க....

## கீரிமலையில் மீன்பிடி துறைமுகம்; விக்னேஸ்வரன் கடும் எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

இந்துக்கள் புனிதமாகக் கருதும் யாழ்ப்பாணம் கீரிமலையில் மீன் பிடி துறைமுகம் ஒன்றை அமைப்ப தற்கான அரசாங்கத்தின் முயற்சி சினத்தை ஏற்படுத்தியுள்ளதாக வட மாகாண முதலமைச்சர் விக்னே

23ஆம் பக்கம் பார்க்க....



## மாணவன் ஒருவன் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை நாரந்தனை பகுதியில் மரமொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் பாடசாலை மாணவனின் சடலமொன்று, நேற்று செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்ட தாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மாணவன் நேற்றுமுன்

23ஆம் பக்கம் பார்க்க....

## 'மகிந்தவை தண்டியுங்கள்'

### பூநகரி மக்கள் கோரிக்கை



23ஆம் பக்கம் பார்க்க....

## மனிதபுதைகுழி; நேற்றும் அகழ்வு

(மன்னார்)

மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் உள்ள மனிதப் புதைகுழி அருகே கண்டு பிடிக்கப்பட்ட கிணறைத் தோண்டும் பணி இரண்டாவது நாளாக நேற்று மேற்கொள்ளப்பட்டது. நேற்று காலை 8 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு முற்பகல் 11.30 மணி வரை 3 அடி ஆழம் வரை தோண்டப்பட்டது. இந்தக் கிணறு 37 அடி ஆழம் கொண்டதாக இரு

23ஆம் பக்கம் பார்க்க....

## அரசியல் கைதிகளின் விடுதலைக்காக வெலிக்கட சிறை முன் போராட்டம்

(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட கால மாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடு தலையை வலியுறுத்தியும், அரசி யல் கைதிகளின் படுகொலைக்கு நீதி கோரியும் எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்க ப்படவுள்ளது.

இது தொடர்பில் தகவல் வெளி யிட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய இய க்கத்தின் தலைவர் அருட்தந்தை மாரிமுத்து சக்திவேல், சித்திர வதைக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட அரசியல் கைதி கணே சன் நிமலரூபனின் 4ஆவது வருட நிறைவை முன்னிட்டு இந்த

24ஆம் பக்கம் பார்க்க....

## படை அதிகாரிகளை விசாரிக்க வேண்டும்!

### சட்ட ஆலோசகர் டொமினிக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சுற்றிவளைப்புக்கள், தேடுதல்க ளின் போது கைது செய்யப்பட்டு காணாமற்போனவர்கள் தொடர் பில் அந்தப் பகுதிகளுக்குப் பொறுப் பாக இருந்த படைத்தரப்பின்

24ஆம் பக்கம் பார்க்க....



## தரம் - 5

புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இன்றைய வலம்புரியில்...

## பியசேனவின் மறியல் நீடிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினர் கே.கே.பிய சேனவின் விளக்கமறியல் எதிர் வரும் 5ஆம் திகதி வரை நீடிக்கப்ப ட்டுள்ளது.

அரசாங்கத்துக்கு சொந்தமான வாகனத்தை துஷ்பிரயோகம் செய் தார் என்ற குற்றச்சாட்டின் பேரில்

24ஆம் பக்கம் பார்க்க....

## ஆளுநரின் உறுதிமொழியை அடுத்து வடக்கு தொண்டர் ஆசிரியர்களின் உணவு தவிர்ப்பு போராட்டம் நிறைவு



(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளு நரின் உறுதிமொழியை அடுத்து 2 நாட்களாக உணவு தவிர்ப்பு போரா ட்டத்தில் ஈடுபட்ட வட க்கு தொண்டர் ஆசிரிய ர்கள் நேற்றைய தினம் தமது போராட்டத்தினை நிறைவு செய்துள்ளனர்.

24ஆம் பக்கம் பார்க்க....

## நல்லூர் ஆலய சூழலில் கண்காணிப்பு கமராக்கள்

### பொருத்தப்படவுள்ளதாக அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தன் ஆலயத்தில் பக் தர்களின் பாதுகாப்பு கருதி இம் முறை ஆலய சூழல் கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்படவுள்ளதாக தெரிவித்துள்ள யாழ்.மாநகர சபை யின் ஆணையாளர் பொ.வாகீசன், நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தில் அர்ச்சனைத் தட்டுக்கள் பிளாஸ்ரிக்கில் விற்பனை செய்வதற்கு தடைசெய்யப்பட்டுள்ள தாகவும் ஆலய வளாகத்திற்குள் உக் கலடையாத பொலித்தீன் பாவனை தடை செய்யப்பட்டு உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க....

# முன்னாள் போராளிகளுக்கான விசேட மருத்துவ பரிசோதனை

அண்மைக்காலமாக புனர்வாழ்வுபெற்ற முன்னாள் போராளிகள் பலரும் இனங் காணப்படாத மர்மமான நோய்த் தாக்கங்களி னால் சாவடைவதாக செய்திகள் வருகின்றன.

இதுதொடர்பில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் டாக்டர் ப.சத்தியலிங்கம் சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் கலந்து ரையாடலொன்றை அண்மையில் நடத்தி யுள்ளார்.

இதில் அண்மைக்காலமாக சாவடையும் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ள தாக அமைச்சரின் ஊடகப்பிரிவினால் வெளியிட பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அண்மைக்காலமாக முன்னாள் போரா ளிகள் மர்மான நோய்த்தாக்கத்தினால் சாவ டைவதாக செய்திகள் வந்தவண்ணம் உள் ளன.

இதுதொடர்பில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் கடந்த வாரம் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டுள் ளது.

அதில் இவ்வாறாக புனர்வாழ்வு பெற்றவர் களுக்கான விசேட மருத்துவ பரிசோதனை செயற்திட்டமொன்றை உடனடியாக ஆரம்பிப் பது தொடர்பில் கலந்துரையாடியுள்ளோம்.

மிக விரைவில் இவ்வாறான விசேட மருத் துவ பரிசோதனைகளை ஆரம்பிப்பது தொடர் பில் துறைசார் விசேட வைத்திய நிபுணர்களு டன் கலந்துரையாடவுள்ளோம்.

கலந்துரையாடலின் பின்னர் எவ்வாறான செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படுமென அறிவிக்கப்படுமென அந்த செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-281)

## மோட்டார் சைக்கிள் விபத்து; மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

வீதியில் பயணித்தவேளை வேகக் கட்டுப் பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் விபத்துக் குள்ளானதில் ஒரே மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் மூளாய் திருவடிநிலை பகுதி யில் இடம்பெற்றுள்ளது.

இதில் மூளாய் பிள்ளையார் கோவி லடியை சேர்ந்த குடும் பஸ்தரான ஆறு முகம் ரவிச்சந்திரன் (வயது-30) மற்றும் அதே பகுதியைச் சேர்ந்த இளைஞர் களான தவநேசன் பவீந்திரன் (வயது-19), விதுசன் (வயது-25) ஆகிய மூவருமே படுகாயமடைந்தவர் களாவர். (செ-30)

## மரண தண்டனை விதிப்பு

(கொழும்பு)

கொலைக் குற் றத்துடன் தொடர் புடைய நபரொரு வருக்கு பாணந் துறை நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித் துள்ளது.

குறித்த உத்தர வினை நீதவான் விக்ரம் களுஹா ராச்சி நேற்று பிறப் பித்துள்ளார்.

மொரடுவை - கடொலான பகுதி யில் கடந்த 2007 ஆம் ஆண்டு மே மாதம் இடம்பெற்ற கொலைக் குற்றம் தொடர்பிலேயே குறித்த தீர்ப்பு வழங் கப்பட்டுள்ளது.

குற்றம் சுமத்தப் பட்டவர் மொர டுவை பகுதியைச் சேர்ந்தவரென தெரி விக்கப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த கொலையு டன தொடர்புடைய மற்றுமொரு நபர் விசாரணை நடை பெற்ற காலப் பகுதி யில் உயிரிழந்துள் ளார் என தெரிவிக்கப படுகின்றது. (செ-11)


## கண்ணீர் பூக்கள்

அமரர்

**சு. நிதிஷன்**



இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டப் பணிப்பாளர் எந்திரி **ந.சுதாகரன்** அவர்களின் தவப்புதல்வனின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரினது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்ம சாந்திக்காய் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

உத்தியோகத்தர்கள்
இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்தித்திட்டம்
கிளிநொச்சி.

(சி-5359)

## கணித வகுப்புக்கள் (Gr 6 -11)

தரம் 6 முதல் 11 வரை மற்றும் O/L Repeat மாணவர்களுக்கும் கணித பாடம் தனியாகவும் குழுக்களாகவும் கற்பிக்கப்படும்.

(5507)

தொடர்புகளுக்கு : 077 2627 890

## யப்பான் சயிக்கிள்

விலை 8,500/= லிருந்து



1.லேடீஸ் சயிக்கிள்கள்
2.யென்ஸ் சயிக்கிள்கள்
3.மவுண்டன் சயிக்கிள்
4.மடக்கும் சயிக்கிள்கள்

இலகுவான ஓட்டம்
பாட்ஸ் தாராளமாக உண்டு
கழுவிபூட்டுதல், திருத்த வேலைகள் இல்லை

மின்னுவதெல்லாம் பொன் அல்ல
யப்பான் சைக்கிள் ஒன்றை வாங்கி
நீண்டகாலம் 10 வருடம் பாவிக்கலாம்

**அன்ரன் என்ரபிறைசஸ்**

பலாலி றோட், கோண்டாவில்.
(பாம் ஸ்கூல் முன்பாக)

(5314)

Raajeshwariy Hall

Friday 05 August 2016

இராஜேஸ்வரி அறக்கொடை நிலையத்தினரால்
ஆதரவற்றவர்களுக்கு அன்புக்கரம் கொடுக்கும்
நோக்குடன் நடாத்தப்படும்



சிரிக்கலாம் வாங்க...

கலைமாமணி நகைச்சுவைத் தென்றல்

திண்டுக்கல்

# ஐ. லியோனி

குழுவினர் வழங்கும்

## "நகைச்சுவை பட்டிமன்றம்"

காலம்: ஆகஸ்ட் 5ஆம் திகதி
மாலை 5.30 மணிக்கு

இடம்: இராஜேஸ்வரி மண்டம்(A/C)
கே.கே.எஸ் வீதி, தெல்லிப்பளை.
(தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவில் அருகாமையில்)

T.P: 021 222 3999

## கண்ணீர் காணிக்கை



செல்வன்

**சுதாகரன் நிதிஷன்**

வவுனியாவைப் பிறப்பிடமாகவும் 537/6, நாவலர் வீதி,யாழ்ப் பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும் எமது இல்லக் குழந்தைகளின் நல்வாழ்வுக்காகவும் குழந்தைகளின் நலனுக் காகவும் அயராது உழைத்துவரும் கிளிநொச்சி மாவட்ட நீர்ப் பாசனத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் திரு.சுதாகரன் அவர்களின் அன்பு மகன் செல்வன் நிதிஷன் அவர்களின் இவ்வுலக பிரிவால் யாமும் எமது இல்லமும் மிகுந்த துயரில் மூழ்கியிருக்கின்றோம்.

நீ பாரினிலே அவதரித்த பொழுதிலே - யாம்
பாக்கியங்கள் பல பெற்றோம் - என
எண்ணியிருந்த வேளையிலே - பார்போற்றும்
வாழ்வின் பட்டாம் பூச்சியாய் சிறகடித்து
பறக்குமுன்னே - உன் வாழ்வை சிறகொடித்து
பறித்த காலன் ஏமாற்றத்தை விதைத்ததேனோ?
இனி எம் வாழ்வில் உன் நிழலை காண்பதெப்போ?

இவர் தம் பிரிவால் மீளாத் துயரில் ஆழ்ந்திருக்கும் தந்தை சுதாகரன், தாய் திருமதி எஸ்.சுதாகரன் மற்றும் குடும்பத்தினர் உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித் துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல உருத் திரபுரிசுவரனின் சந்நிதியில் சங்கமமாகி நித்திய வாழ்வு பெற இறையருளினை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தலைவர் - தி.இராசநாயகம், பணிப்பாளர்கள், பணியாளர்கள், இல்லக் குழந்தைகள்
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம், ஜெயந்திநகர், கிளிநொச்சி.

(C-5361)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532




# பதினைந்து இலட்சம் பேர் பாதயாத்திரையில் பங்கேற்பு

## தினேஷ் குணவர்த்தன கூறுகிறார்

பாதயாத்திரையில் பதினைந்து இலட்சம் பேர் பங்கேற்றதாக கூட்டு எதிர்க் கட்சியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சியின் பாதயாத்திரையின் நிறைவில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கண்டியில் ஆரம்பிக்கப்பட்ட மக்கள் போராட்டம் கொழும்பை அடைந்த போது அதில் 15 இலட்சம் பேர் பங்கேற்றிருந்தனர்.

இந்த அரசாங்கம் வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்பதனையே மக்கள் ஒருமித்த குரலில் இவ்வாறு வலியுறுத்துகின்றனர்.

ஜெனிவாவிற்கு சென்று வெளிவிவகார அமைச்சர் இந்த நாட்டை காட்டிக் கொடுத்துள்ளார். அந்த துரோகச் செயலுக்கு எதிராகவே மக்கள் வீதியில் இறங்கி போராட்டம் நடத்துகின்றனர்.

அரசாங்கத்திற்கு எதிராக நடத்தப்பட்ட இந்தப் போராட்டம் வரலாற்றுச் சிறப்பு மிக்கது. வீதியை, பாலமொன்றை அமைக்க. முடியாத அரசு இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்க முடியாது, திக்கு திசை அறியாது திணறிப் போயுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். இந்த அரசாங்கத்தை விரட்டியடிக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.(இ-7-10)

# மகிந்தவைக் கண்டு அஞ்சுகின்றோம் அதில் எந்தவித சந்தேகமும் இல்லை

## அமைச்சர் டிலான் பெரேரா விளக்கம்



(கொழும்பு)

**நாம் இன்றும் மகிந்த ராஜபக்ஷவைக் கண்டு அஞ்சுகின்றோம். அதில் எந்தவித சந்தேகமும் இல்லை என இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

உண்மையில் மகிந்த ராஜபக்ஷவைக் கண்டு அஞ்சுவதற்கு சில காரணங்கள் இருக்கின்றன. அவர் எங்களுடைய கட்சியை உடைத்து விடுவார் என அஞ்சுகின்றோம், எமது கட்சி உறுப்பினர்களை ஏமாற்றி விடுவார்கள் என அஞ்சுகின்றோம். அதேபோல நாட்டு மக்களுக்கு நிறைவேற்ற முடியாத சில வாக்குறுதிகளை அளித்து விடுவார் என அஞ்சுகின்றோம் என மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# ‘போதையிலிருந்து விடுதலையான நாடு’ முன்னாயத்த கலந்துரையாடல் யாழில்



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியின் தலைமையில் “போதையிலிருந்து விடுதலையான நாடு” எனும் தொனிப்பொருளில் யாழ். மாவட்டத்தில் நடைபெறவுள்ள மாவட்ட நிகழ்வுக்கான முன்னேற்பாட்டு கலந்துரையாடல் நேற்றைய தினம் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் போதைப்பொருளை கட்டுப்படுத்துவது தொடர்பாக அதிகாரிகள் மட்டத்தில் உள்ள பிரச்சினைகள் மற்றும் தீர்வுகள் தொடர்பாக ஆராயப்பட்டன.

அத்துடன் ஜனாதிபதி தலைமையில் யாழ். மாவட்டத்தில் “போதையிலிருந்து விடுதலையான நாடு” எனும் மாவட்ட நிகழ்வு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அந்த நிகழ்வு தொடர்பான முன்னாயத்த நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இக் கலந்துரையாடலில் போதைப்பொருள் ஒழிப்பின் ஜனாதிபதி செயலக ஒருங்கிணைப்பாளர் வைத்தியர் சமந்த அதிலஆராட்சி, பொலிஸ் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், கடற்படை அதிகாரிகள், மதுவரித் திணைக்களத்தினர், சுகாதாரத்துறையினர், பிரதேச செயலர்கள், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் உட்பட பலர் கலந்து கொண்டு தமது கருத்துக்களை வழங்கியிருந்தனர். (இ-9)

# மகிந்த உரையாற்றிய போது 2000பேர் குழுமியிருந்தனர்

## சிங்கள ஊடகம் தகவல்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் உரையாற்றிய போது சுமார் 2000 பேரே லிப்டன் சுற்று வட்டத்தில் குழுமி இருந்தார்கள் என சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐந்து நாட்களாக கூட்டு எதிர்க்கட்சியினால் முன்னெடுக்கப்பட்டு வந்த பாதயாத்திரை போராட்டம் நேற்று முன்தினம் கொழும்பு லிப்டன சுற்று வட்டத்திற்கு அருகாமையில் நிறைவடைந்தது.

அதன் பின்னர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்டவர்கள் உரையாற்றியிருந்தனர்.

பாதயாத்திரை லிப்டன் சுற்று வட்டத்தை அண்மித்த போது 15 ஆயிரம் பேர் வரையில் குழுமியிருந்த போதிலும், மகிந்த உரையாற்றத் தொடங்கிய போது அந்த எண்ணிக்கை இரண்டாயிரமாக குறைவடைந்தது என தெரிவிக்கப்படுகிறது.

கூட்டம் ஆரம்பமான சந்தர்ப்பத்தில் வீதிகள் மூடப்பட்டிருந்த காரணத்தினால் வீதிகளில் பெருந்திரளான மக்கள் குழுமியிருந்தனர்.

எனினும் மகிந்த உரையாற்றத் தொடங்கிய போது வீதிகள் போக்குவரத்திற்காக திறக்கப்பட்டன. அதன் பின்னர் மகிந்தவின் உரையை கேட்பதற்கு சுமார் இரண்டாயிரம் பேர் வரையிலேயே திரண்டிருந்தனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்பார்த்தளவு மக்கள் கூட்டம் திரளாத காரணத்தினால் கூட்டு எதிர்க்கட்சியினர் கெம்பல் மைதானத்தை நிராகரித்து. லிப்டன் சுற்று வட்டத்திலேயே கூட்டத்தை நடத்தியதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.(இ-7-10)

# அ’புரத்தில் ஆயுதக்களஞ்சியசாலை அமைக்க அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

முப்படையினருக்கு உரித்தான வெடிபொருட்கள் மற்றும் வர்த்தக வெடிபொருட்களை களஞ்சியப்படுத்துவதற்காக மக்கள் நடமாட்டம் குறைந்த பிரதேசத்தில் ஆயுதக் களஞ்சிய சாலை தொகுதியொன்றை அமைக்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன **தெரிவித்தார்.**

இதனடிப்படையில் அநுராதபுரம் மாவட்டத்தில் மக்கள் நடமாட்டம் குறைந்த ஓயாமடுவ பிரதேசத்தில் சர்வதேச தரத்திலான குறித்த களஞ்சியசாலை தொகுதியினை அமைப்பதற்கு நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் எனும் ரீதியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என **தெரிவித்தார்.(இ-7-10)**

# அழகுக்கலை நிலையங்களை பதியுமாறு யாழ்.மாவட்டஅரசாங்க அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில்அமையப்பெற்றுள்ள அழகுக் கலை நிலையங்களின் விபரங்கள் தொடர்பான பதிவு ஒன்று யாழ்ப்பாண மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு அலுவலகத்தில் இடம்பெற்று வருகின்றது. இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாத யாழ்.மாவட்டத்திலுள்ள அழகுக்கலை நிலைய உரிமையாளர்கள் தங்கள் அழகுக்கலை தொடர்பான விபரத்தினை யாழ். மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவில் இம் மாதம் 14 ஆம் திகதிக்கு முன்பதாக பதிவினை மேற்கொள்ளுமாறும் மேலதிக விபரங்கள் தேவைப்படின் மாவட்ட சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் 021 221 3861 இலக்க தொலைபேசியுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறு அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ

# நகர்கோவில் பகுதியில் கஞ்சா விற்றவர் கைது

(கரணவாய்)

நாகர் கோவில் பகுதியில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டிருந்த வேளை பருத்தித்துறைப் பொலிஸாரால் குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் நான்கு கிராம் கஞ்சாவும் மீட்கப்பட்டது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை நாகர் **கோவில் பகுதியில் நபர் ஒருவர் கஞ்சா விற்பனை செய்வதாக** பருத்தித்துறைப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் அங்கு சென்றபோது உடுத்துறை கிழக்கைச் சேர்ந்த 35 வயதுடைய நபர் கஞ்சா விற்பனை செய்யும் போது கைது செய்யப்பட்டதுடன் 4 கிராம் கஞ்சாவும் மீட்கப்பட்டது. **அவரை நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.(இ-60)**

# குற்றத் தகவல் தருபவர்களுக்கு விரைவான நன்கொடை அவசியம்

## காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

குற்றச்செயல் தொடர்பாக எமக்கு தகவல் தருபவர்களுக்கு விரைவாக நன்கொடை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஏனெனில் நாம் அன்பளிப்பாக கொடுக்கும தொகையை விட அதிகளவான தொகையை குற்றச்செயலில் ஈடுபடுபவர்கள் கொடுப்பதற்கு தயாராக இருக்கிறார்கள். இதனால் நாளுக்கு நாள் எமது தொடர்பில் இருந்து அவர்கள் விலகிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளதாக காங்கேசன்துறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எம்.ஜவ்பர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் தலைமையில் "போதையிலிருந்து விடுதலையான நாடு" எனும் தொனப்பொருளில் யாழ் மாவட்டத்தில நடைபெறவுள்ள மாவட்ட நிகழ்வுக்கான முன்னேறபாட்டு கலந்துரையாடல் நேற்றைய தினம் யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடததில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ் மாவட்டத்தில் பொலிஸார் மிகவும் சிறப்பான முறையில் சேவைகளை வழங்கி வருகின்றனர். சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கில் தான் பொதுமக்களின் உதவியுடன எமது கடமையை செய்து வருகிறோம்.

பாரிய குற்றச்செயலில் ஈடுபடுகிறவர்கள் மிகவும் சூட்சுமமான முறையில் கடத்தலில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் அவர்களுடைய திட்டங்களை விரைவில் முறியடிப்பதற்கு பொலிஸார், இராணுவத்தினர், கடற்படையினர் சிறந்த முறையில் உதவி வழங்கி வருகின்றனர்.

குற்றச்செயல் தொடர்பாக எமக்கு தகவல் தருபவர்களுக்கு எமது சம்பளத்தில் தான் நன்கொடைகள் வழங்கி வந்துள்ளோம். எமது திணைக்களத்தில் இருந்து நன்கொடையை விரைவில் பெற்றுக்கொள்ள முடியாது.

ஆனாலும் குற்றச்செயல் தொடர்பாக தகவல் தருபவர்கள் எம்மை விட்டு பிரியும் சந்தர்பங்கள் நிலவிவருகின்றன. ஏனெனில் நாம் அன்பளிப்பாக கொடுக்கும் தொகையை விட அதிகளவான தொகையை குற்றச் செயலில் ஈடுபடுபவர்கள் கொடுப்பதற்கு தயாராக இருக்கிறார்கள். எனவே எம்மிடம் இருந்து தகவல் தருபவர்கள் நாளுக்கு நாள் விலகி செல்கிறார்கள்.

எனவே ஜனாதிபதியின் திட்டத்தின் கீழ் உடனடியாக அன்பளிப்பு போய் சேரக் கூடியவாறு நடைமுறையை செயற்படுத்த வேண்டும்.

தற்போது பெரிய அளவில் திட்டமிட்டு குற்றச்செயல்களை மேற்கொள்கிறார்கள். கைது செய்பவர்களிடம் இருந்து மேலதிக தகவல்களை பெறாத அளவு அவர்கள் மிகவும் நுணுக்கமான முறையில் செயற்படுகிறார்கள்.

ஆனால் அவர்களை அடையாளம் கண்டு குற்றச்செயலின் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டு மிகவிரைவில் கைதுசெய்யப்படவுள்ளனர்.

பொலிஸ், இராணுவத்தினர், மற்றும் கடற்படையினரின் புலனாய்வு பிரிவினருடன் ஒன்று சேர்ந்து குறித்த கடத்தல் மேலும் நடைபெறாத வகையில் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி வருகிறோம்.

யுத்தத்தின் பின்னர் இளைஞர்கள் தொழில் இல்லாமல் வருவாய் இல்லாமல் தீய நடத்தைகளில் ஈடுபடுவதற்கு தள்ளப்படுகிறார்கள். ஆகவே இவ்வாறு நடைபெறும் இடங்களை இனம் கண்டு குற்றச் செயல்களை தடைசெய்து வருகிறோம்.

மேலும் யாழில் ஐரோப்பிய கலாசாரம் பலாத்காரமாக புகுத்தப்படுகிறது. அது நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. அதனுடன் இணைந்து தற்போது போதைபொருள் பாவனை அதிகரித்துள்ளது.


இவை தொடர்பாக பொலிஸார் என்ற ரீதியில் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். குற்றச்செயல்களை விரைவில் கட்டுப்படுத்துவதற்காக செயற்படுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## ஆஸியுடன் அடுத்த போட்டியில் பிரதீப் விளையாடுவதில் சந்தேகம்

ஆஸி அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டி காலியில் இடம்பெறவுள்ளது.

இந்த போட்டியில் இலங்கை அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் நுவான் பிரதீப் விளையாடுவதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

பயிற்சியின் போது தொடைப்பகுதியில் அவருக்கு ஏற்பட்ட உபாதை காரணமாக பிரதீப் விளையாடுவதில் சந்தேகம ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கபடுகின்றது.



எவ்வாறாயினும் இன்று இடம்பெறும் உடற்தகுதி பரிசோதனையின் பின்னரே இவர் விளையாடுவதா? இல்லையா? என தீர்மானிக்கப்படும்.

இந்நிலையில் இவர் அடுத்த போட்டியில் விளையாடாத சந்தர்ப்பத்தில் உபாதையிலிருந்து குணமாகியுள்ள வேகப்பந்து வீச்சாளர் சுரங்க லக்மால் அல்லது புதுமுக வேகப்பந்து வீச்சாளர்களான விஷ்வ பெர்னாண்டோ அல்லது அஷித பெர்ணாண்டோ விளையாடலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (க)

# பிக் பாஷ் இருபது – 20 பெர்த் ஸ்கோர்செர்ஸ் அணியில் மிட்செல் ஜோன்சன் ஒப்பந்தம்


அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான மிட்செல் ஜோன்சன் பிக் பாஷ் இருபது-20 லீக் தொடரில பெர்த் ஸ்கார் செர்ஸ அணிக்காக ஒப்பந்தம் செய்யப் பட்டுள்ளார்.

பிக் பாஷ் இருபது-20 லீக்:

பெர்த் ஸ்கோர்செர்ஸ் அணியுடன் மிட்செல் ஜோன்சன் ஒப்பந்தம் அவுஸ்திரேலியா அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளராக இருந்தவர் மிட்செல் ஜோன்சன். கடந்த வருடம் நியூசிலாந்துக்கு எதிராக பெர்த்தில் நடைபெற்ற போட்டியில் அதிக அளவில் ரன்கள் விட்டுக் கொடுத்தார். இதனால் அவர மீது விமர்சனம் எழும்பியது. ஆகவே, அவுஸ்திரேலியா அணியில் இருந்த ஓய்வு பெற்றார்.

ஜோன்சன் இந்தியாவில் நடைபெற்று வரும் ஐ.பி.எல். தொடரில் விளையாடி வருகிறார். இதைத்தவிர வேறு எந்த இருபது-20 லீக் தொடரில் விளையாடாமல் இருந்தார்.

தற்போது 2016-17 சீசனில் பிக் பாஷ் இருபது-20 லீக் தொடரில் விளையாடுவதற்காக அவரை, பெர்த் ஸ்கோர்செர்ஸ் அணி ஒப்பந்தம் செய்துள்ளது.



34 வயதாகும் ஜோன்சன் அவுஸ்திரேலியா அணிக்காக 73 டெஸ்ட், 153 ஒருநாள் மற்றும் 30 இருபது-20 போட்டிகளில் விளையாடியுள்ளார். டெஸ்ட் போட்டியில் 313 விக்கெட்டும், ஒருநாள் போட்டியில் 239 விக்கெட்டும், இருபது-20 போட்டியில் 38 விக்கெட்டுக்களும் வீழ்த்தியுள்ளார். (க)

## பாகிஸ்தான் – இங்கிலாந்து 3ஆவது டெஸ்ட் இன்று ஆரம்பம்

பாகிஸ்தான்- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 3-வது டெஸ்ட் எட்ஜ்பாஸ்டனில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

பாகிஸ்தான்- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. லோர்ட்ஸில் நடைபெற்ற முதல் டெஸ்டில் பாகிஸ்தான் 75 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இன்று ஆரம்பமாகும் 3-வது டெஸ்ட் பேர்மிங்காமில் உள்ள எட்ஸ்பாஸ்டன் மைதானத்தில் நடக்கிறது. இது இங்கிலாந்துக்கு மிகவும் ராசியான மைதானம். இந்த மைதானத்தில் இங்கிலாந்தை வீழ்த்துவது மிக்வும் கடினம். ஆடுகளம் முதலில் பந்து வீச்சுக்கு சாதமாக இருக்கும்.

நாணய சுழற்சியில் வென்ற அணி களத்தடுப்பை முடிவு செய்யும். பாகிஸ்தான்



நாணய சுழற்சியில் தோல்வியடைந்து துடுப்பாட்டத்தை தெரிவு செய்ய நேர்ந்தால் அண்டன், பிரோட், வோக்ஸ் ஆகியோரின் வேகத்தை பாகிஸ்தான் துடுப்பாட்ட வீரர்கள் எதிர்கொள்வது சிரமம். இதைத்தாண்டி அவர்கள சிறப்பாக விளையாடினால் பாகிஸ்தான் முன்னிலை பெற வாய்ப்புள்ளது. பந்து வீச்சில் மொகமட், அமிர், ரஹறத் அலி மற்றும் வாஹறாப் ரியாஸ் ஆகியோர் கூடுதல் கவனம் செலுத்துதல் அவசியம். (க)

# ரோஜர்ஸ் கோப்பை டெனிஸ் நோவாக் ஜேகோவிக் சம்பியன்

ரோஜர்ஸ் கோப்பை டென்னிஸ் போட்டியில ஜோகோவிச் 6-3, 7-5 என்ற நேர்செட்டில் நிஷிகோரியை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார்.

ரோஜர்ஸ் கோப்பை டென்னிஸ் போட்டி கனடாவில் உள்ள ரொரனடோவில் நடந்தது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதிப்போட்டியில் உலகின் முதல் நிலை வீரர் நோவாக் ஜோகோவிச் (செர்பியா), உலக தர வரிசையில் 6-வது இடத்தில் இருக்கும் ஜப்பான் வீரர் நிஷிகோரியை சந்தித்தார்.

90 நிமிடம் நடந்த இந்த ஆட்டத்தில் ஜோகோவிச் 6-3, 7-5 என்ற நேர்செட்டில் நிஷிகோரியை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார். ரோஜர்ஸ் கோப்பை சம்பியன் பட்டத்தை ஜோகோவிச் வெல்வது இது 4-வது முறையாகும். அவர் வென்ற 66-வது சர்வதேச



பட்டம் இதுவாகும்.

பெண்கள் ஒற்றையர் இறுதிப்போட்டியில் உலக தர வரிசையில் 3-வது இடம் வகிக்கும் சிமோனா ஹாலெப் (ருமேனியா) 7-6 (7-2). 6-3 எனற நேர்செட்டில் அமெரிக்க வீராங்கனை மேடிசன் கெய்சை தோற்கடித்து சம்பியன் பட்டத்தை தனதாக்கினார். (க)

# அரசிடம் வாகனங்கள் கோரும் அதிபர்கள்

(கொழும்பு)

வரி விலக்களிப்பு வாகன அனுமதிப் பத்திரத்தை பாட சாலை அதிபர்களுக் கும் பெற்று தருமாறு கோரப்பட்டுள் ளது.

குறித்த கோரி க்கை அடங்கிய கடி தமானது இலங்கை ஆசிரியர் சங்கத்தி னால்ஜனாதிபதி மைத் திரிபால சிறி சேன வுக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

6-2006 சுற்று நிருபத்திற்கு அமைய அதிபர் பதவியானது பதவிநிலை உத்தி யோகத்தர் தரத்தில் உள்வாங்கப்பட்டுள் ளதாகவும் இலங்கை ஆசிரியர் சங்கம் சுட் டிக்காட்டியுள்ளது.

எனினும் குறித்த வாகன அனுமதிப் பத்திரம் வழங் கும் திட்டமானது 1998 ஆம் ஆண்டிலிருந்து அதிபர்களுக்கு மறுக் கப்பட்டு வருவதாக வும் சங்கம் குறிப்பிட் டுள்ளது.

எனவே இந்த நல் லாட்சியிலாவது அதி பர்களுக்கு குறித்த வாய்ப்பு மீண்டும் பெற்றுத்தர வேண் டும் எனவும்ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.(இ-7-10)

# நாமலின் நடவடிக்கை சரியில்லை

கூட்டு எதிர்க் கட்சி யினால் முன்னெடுக் கப்பட்ட பாதயாத் திரையின் போது பாராளுமன்ற உறுப் பினர் நாமல் ராஜபக் ஷவின் நடவடிக்கை கள் மிகவும் கவலை யடைச்செய்துள்ளதாக இராஜாங்க அமைச் சர் லக்ஸ்மன் சென விரத்ன தெரிவித் துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியா ளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரி வித்த போதே அவர் இதனை தெரி வித்தார்.

இளம்பாராளுமன்ற உறுப்பினரான நாமல் ராஜபக்ஷ இளைய சமூகத்திற்கு முன்னு தாரணமாக இருக் காமல், பாதயாத்திரை யின் போது தவறான வார்த்தைப் பிரயோ கங்களை பயன்படுத்தி யுள்ளார்.

கடந்த ஆட்சியின் போது நாட்டின்பெரும் பாலான அபிவிருத்தி கள் மற்றும் நிலங் கள் என்பன வெளி நாடுகளுக்கு தாரை வார்த்து கொடுக்கப் பட்டன.

எனினும், நல் லாட்சி அரசாங்கத் தில் அந்த செயலை முன்னெடுக்காமல் சகல நாடுகளுடனும் கைகோர்த்து செய ற்படுவதாக அவர் தெரிவித்தார்.

பாதயாத்திரை மேற் கொள்வதன் மூலம் ஆட்சியை கவிழ்க்க முடியாது. கடந்த கால ங்களிலும் இதனை போன்று பல பாத யாத்திரைகள் முன் னெடுக்கப்பட்டன.

எனினும், ஆட்சி மாற்றத்தை கொண்டு வர முடியவில்லை என்றும் இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் செனவிரத்ன தெரி வித்தார்.

இதேவேளை கூட்டு எதிர்க் கட்சியில் உள்ள தினேஷ் குண வர்தன, உதய கம்மன் பில உள்ளிட்டவர்கள் சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்துவதையே ஒரே இலக்காக கொண் டுள்ளதாக அவர்மேலும் தெரிவித்துள் ளார். (இ-7-10)


## வைத்தியம்

உடல் பருமன் கூட்டுதல்/ குறைத்தல், தலைமுடி உதிர்தல், ஆஸ்துமா, சலரோகம், பாரிசவாதம், குழந்தையின்மை, ஆண் மைக் குறைபாடுகள், தாம்பத்திய திருப்தி யின்மை, மாதவிடாய் குறைபாடுகள், வெள் ளைபடுதல், தழும்புகள் மறைய, முள்ளந் தண்டு நசிவுகள் குணமாக. (5472)

தொடர்பு:- Shan's Health Care, 255, K.K.S. Road, Kokuvil, Jaffna.
T.P: 077 035 7307(முன் பதிவு அவசியம்)


## கூறுவிலை கோரல்

மேற்படி எமது சங்கத்திற்கு 625 ml கொள்ளளவுடைய 500g நிறை கொண்ட வெற்று பியர் போத்தல்கள் தேவை யாக உள்ளதால் அதனை வழங்கவுள்ளோர் கூறுவிலைகளை கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

முகவரி:- தலைவர்,
சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுற வுச் சங்கம்,
பிரதான வீதி, சங்கானை,
தொ.பே- 021 3735403
(5504)

## வல்வெட்டித்துறை நகராட்சிமன்றம் பெறுகை அறிவித்தல்
## கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்- 2016

கேள்விப் பத்திரம் வழங்குதல் : 03.08.2016 இலிருந்து 16.08.2016 நண்பகல் 12.00 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளுதல் : 16.08.2016 பி.ப. 02.00 மணிவரை
கேள்வி திறக்கும் காலம் : 16.08.2016 பி.ப. 02.30 மணி

| இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூபாய் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | இக்ராட் பதிவு தரம் | கேள்விப் பிணை வைப்பு (ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| 1 | வல்லை வீதி 3ஆம் ஒழுங்கை திருத்தம். | 789,345.76 | 02 மாதங்கள் | C8 | 7,900.00 |
| 2 | கொம்மந்தறை கிராமத்திற்கு வடிகாலமைத்தல் | 195,392.50 | 02 மாதங்கள் | C8 | 2,000.00 |
| 3 | சிதம்பராக் கல்லூரி மைதான வீதிக்கு கால்வாய் அமைத்தல் | 444,252.69 | 02 மாதங்கள் | C8 | 4,500.00 |
| 4 | ப.நோ.கூ.ச.வீதி கால்வாய் அமைத்தல் | 542,691.20 | 02 மாதங்கள் | C8 | 5,500.00 |
| 5 | கடற்கரை வீதி கால்வாய் அமைத்தல்-01 | 98,976.45 | 02 மாதங்கள் | C8 | 1,000.00 |
| 6 | கடற்கரை வீதி கால்வாய் அமைத்தல்-02 | 77,622.02 | 02 மாதங்கள் | C8 | 800.00 |
| 7 | நேதாஜி ச.ச.நிலைய திருத்தம் | 245,377.26 | 02 மாதங்கள் | C8 | 2,500.00 |
| 8 | வாணி ச.ச.நிலைய திருத்தம் | 244,757.46 | 02 மாதங்கள் | C8 | 2,500.00 |
| 9 | சிவபுர வீதிக்கு கால்வாய் அமைத்தல் | 687,309.80 | 02 மாதங்கள் | C8 | 6,900.00 |
| 10 | கரந்தன்கணி வீதி திருத்தம் | 288,236.50 | 02 மாதங்கள் | C8 | 2,900.00 |
| 11 | வேவில் வீதி கடற்றடுப்பு அணைச்சுவர் அமைத்தல் | 392,399.95 | 02 மாதங்கள் | C8 | 4,000.00 |
| 12 | நாவலடி வீதி திருத்தம் | 327,525.55 | 02 மாதங்கள் | C8 | 3,300.00 |
| 13 | உலகுடைய பிள்ளையார் வீதி திருத்தம் | 435,527.00 | 02 மாதங்கள் | C8 | 4,400.00 |

மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கு பெறுகைகள் **"தலைவர், பெறுகைக்குழு, வல்வெட்டித்துறை நகராட்சிமன்றம்"** அவர்களால் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

பெறுகைக்குத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் பெறுகைதாரர் கறுப்புப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப் படாதவராகவும் அட்டவணையில் காட்டிய பொருத்தமான தரத்தில் இக்ராட் பதிவுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

பெறுகைதாரர்கள் நகராட்சி மன்ற அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். (அலுவலக நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 02.00 மணிவரை.)

ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் பெறுகை ஆவணங்களை அலுவலக நாட்களில் மீளளிக்கப்படாத பணமாக ரூபா 1000.00 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

பெறுகை ஆவணங்களின் மூலப்பிரதி, இணைப்பிரதி என்பவற்றை 16.08.2016 ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியவாறு **"தலைவர், பெறுகைக்குழு, வல்வெட்டித்துறை நகராட்சிமன்றம்"** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

பெறுகைதாரர்கள் வேலையின் பெறுகை விபரத்தை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடல் வேண் டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகை தாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.

கேள்விப் பிணை வைப்புத் தொகையானது அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமைவதுடன் குறித்த தொகை அலுவலகத்தில் பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

கிடைக்கப்பெற்ற பெறுகைகள் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக்குழுத் தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

**தலைவர், பெறுகைக்குழு,**
**வல்வெட்டித்துறை நகராட்சிமன்றம்.**
**03.08.2016**

(சி-5358)

## இராசி பலன்

03.08.2016
(ஆடி 19, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
பிரதமை பின்னிரவு 2.51 மணிவரை
ஆயிலியம் பின்னிரவு 3.50 மணிவரை
சுப நேரம் 4.34- 6.04மணிவரை
இராகுகாலம் 12.04- 1.34மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் பூராடம் இரவு 3.41மணிக்கு சிங்-சந் | | சூரி சந் |
| | | | ராகு சுக் புத |
| | சனி செவ் | | குரு |

**மீனம்**



அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர் வீர்கள், வியாபார விருத்தி யுண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு, குடும்பத்தினரின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**மேடம்**



புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தொலை பேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்**



குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், கொடு க்கல்-வாங்கல்கள் ஒழுங் காகும், அரசு வழியில் அனு கூலமுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்**



உறவினர்கள் வழியில் நல்ல செய்திகள் வந்து சேரலாம், பேச்சில் கனிவு பிறக்கும், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கும்பம்**



ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், உள்ளொன்று வைத்து புறமொ ன்று பேசுபவர்களை இனங் கண்டு கொள்வீர்கள், தொழில் வளர்ச்சி கருதி புதிய திட்ட ங்கள் தீட்டுவீர்கள்.

**கடகம்**



பயணங்களால் பலனுண்டு, செய்தொழிலில் அதிக அக் கறை காட்டுவீர்கள், ஆழ்ந்த சிந்தனையுண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மகரம்**



உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து பேசுவார்கள், பேச்சில் கனிவு பிறக்கும், எடுத்த கருமங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்**



தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்ய முற்படு வீர்கள், ஆசைப்பட்ட பொரு ளொன்றை வாங்கி மகிழ் வீர்கள், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள்.

**தனுசு**



விட்டுக்கொடுத்துச் செய்வதன் மூலம் நிம்மதி காண வேண்டிய நாள், நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் அற்பத்தன மாக நடந்து கொள்ளலாம், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை.

**விருச்சிகம்**



எதிர்பார்த்த காரியமொன்று இன்று நடைபெறலாம், பய ணங்களால் பலனுண்டு, ஆன்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாய முண்டு.

**துலாம்**



ஆற்றல் மிக்கவர்களின் ஒத்து ழைப்பு கிடைக்கும், எதிர் பாராத தனவரவுகள் வந்து சேரலாம், செய்தொழில் மேன் மையுண்டு, சுபசெய்திகள் மகிழ்ச்சி தரும்.

**கன்னி**



தொலைபேசி வழியில் சுபதக வல்கள் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், எந்தக்காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், கௌரவமான நாள்.

# நல்லூர்க் கந்தனின் உற்சவத்தினை முன்னிட்டு யாழ்.மாநகர சபையின் முக்கிய அறிவிப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 8 ஆம் திகதி (08.08.2016) ஆரம்பமாகவுள்ளது.

இதனை முன்னிட்டு வீதித் தடையில் கடமையாற்றுபவர்களுக்கானதும் பொதுமக்களுக்குமானதுமான அறிவித்தல்கள் யாழ். மாநகர சபையில் விடப்பட்டுள்ளன.

1.அனைவரும் கோவிலுக்கு வரும் போது கலாசாரமாக உடையணிந்து வரும்படி கேட்கப்படுகின்றீர்கள்.

2. உங்கள் பாதணிகளை மாநகர சபையினால் வைக்கப்பட்டுள்ள றாக்கை மற்றும் பொருத்தமான பாதுகாப்பான இடங்களில் வைத்து விட்டு வரவும்.




3. சுவாமி வெளி வீதி வரும் வேளை அடியார்களின் வாகனங்கள் உள்வர அனுமதியில்லை.

4. வியாபாரிகள் (நிரந்தர, தற்காலிக)மதியம் 12-2 மணி வரை பொருட்களை ஏற்றி இறக்க முடியும்.

5. தூக்குக் காவடி நேர்த்தி செய்யும் அடியார்கள் சுவாமி வெளிவீதி வரும் நேரத்தில் உள்வராமல் அந்நேரங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

6. அனைத்து முதலாவது, இரண்டாவது வீதித்தடைகளுக்குள் வீதி ஓரமாக உள் நுழைவு அனுமதிப்பத்திரம் மீள் பரிசீலனை செய்யப்படும்.

7. இரண்டாவது வீதித்தடைப்பகுதிக்குள் எந்தவொரு தற்காலிக வியாபாரத்திற்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

8. வீதித்தடைகளில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள், மாநகர சபை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் தொண்டு நிறுவன உதவியாளர்கள் பண்பாகவும் உதவும் மனப்பான்மையுடனும் நடந்து கொள்வது அவசியம்.

9.பொதுமக்களும் அடியார்களும் வியாபாரிகளும் கடமையில் ஈடுபடும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் நட்புடன் ஒத்துழைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

10. பொலிதீன் பாவனை தடைசெய்யப்பட்டுள்ளது.

11. அடியார்கள் ஆலய வீதிகளில் வந்து போகும் நேரங்களில் மோட்டார் சைக்கிள், ஆட்டோ போன்ற வாகனங்கள் வேகமாகச் செல்வதை தவிர்க்கவும்.

12. அடியார்கள் அங்கப் பிரதிஷ்டை செய்யும் பகுதிகளில் வாகனம் செலுத்தல், துப்புதல், அசிங்கப்படுத்தல், பாதணிகளுடன் உட்செல்லுதல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளன.

13. அடியார்களின் வசதிக்காக மாநகரசபையால் அமைக்கப்பட்டிருக்கும் மலசலகூடம், ஆடைமாற்றும் பகுதிகளை பயன்படுத்தி துப்புரவாக வைத்துக்கொள்ளுங்கள்.

14. அவசர தேவைகளுக்குத் தெற்கு பகுதியில் அமைந்துள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியை நாடுகள்.

15.அடியார்கள் கோவிலுக்கு வரும்போது தங்களது ஆபரணங்கள் தொடர்பாக அவதானத்துடன் இருக்கவும்.

16. முறைப்பாடுகள், தேவைகள் போன்றவற்றிக்காக யாழ். மாநகர சபையின் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

ஆணையாளர் -021 222 8874,பிரதம கணக்காளர்- 021 222 5619,பிரதம பொறியியலாளர்- 021 222 2019, பொதுசனத்தொடர்பு அலுவலகம்- 021 222 2275, சுகாதார வைத்திய அதிகாரி அலுவகம்- 021 222 2645.(இ-4)

## நல்லூர்க்கந்தன் ஆலயச் சூழலில்

# அமைதியைப்பேணி உதவி புரியுங்கள்

(யாழ்ப்பாணம்)

**நல்லூர்க்கந்தன் ஆலயத்தின் உள் வீதியும் வெளிவீதியும் அடியவர்களின் தியான பூமியாகும்.அவற்றின் அமைதியைப் பேணி பக்தர்களுக்கு உதவி புரியுங்கள் என யாழ். மாநகர சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.**

அருள்மிகு நல்லூர்க் கந்தனின்திருவிழாவிற்குவருகை தரும் அடியார்கள் இலங்கைக்கான கலாசார உடையணிந்து எம் சமய, சமுதாய விழுமியங்களைக் கடைப்பிடித்து ஆன்மீக உணர்வை மேம்படுத்த உதவிடுவீர்.

யாழ். மக்களை மட்டுமின்றி உலகம்வாழ்மக்கள் அனைவரையும் தன் அருட் கண் பார்வையினால் இரட்சித்துக் கொண்டிருக்கும் முருகப் பொருமானை அடியார்கள் இறைசிந்தனையுடன்மனதை ஒரு நிலைப்படுத்தி வணங்குவதற்கு ஏதுவாக ஆலயச் சூழலில் உணவகங்கள், ஒலிபெருக்கிகள், உணவு தயாரிக்கும் போது ஏற்படும் ஒலிகள் என்பவற்றைக் கட்டுப்படுத்தி அமைதியைக் காத்திடுவீர்.

ஆலய வெளி வீதிகளில் புனிதம் பேணும் பொருட்டு விளம்பரப் பதாகைகள் அமைப்பதையும் அலங்கார விளக்குகள் அமைத்துக் காட்சிப்படுத்துவதையும் தவிர்த்திடுவீர்.

ஆலய சூழலில் மாமிச உணவு, மதுபானம், புகைப்பிடித்தல் என்பன தவிர்க்கப்படல் வேண்டும்.

தேர்,தீர்த்தம் ஆகிய திருவிழாநாட்களில்தூக்குக்காவடி நேர்த்திக் கடன் செய்வோர் சுவாமி இருப்பிடத்திற்கு சென்ற பின்னர் வீதித்தடையின் ஊடாக செல்ல முடியும். ஆதலால் தூக்குக் காவடி நேர்த்திக்கடன் செய்யும் அடியார்கள் நேரத்தைக் கவனத்திற் கொண்டு அதனால் ஏற்படும் காலதாமதங்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

ஆண்டவன் முன் அனைவரும் சமம்.அலங்காரக் கந்தனின் அருள் அகிலமெங்கும் பரவி சிறப்புற வேண்டுமென இறைவனை வணங்குவோமாக என யாழ்.மாநகர சபை மேலும் தெரிவித்துள்ளது. (இ-4)

# ஆடிப்பூரத் திருவிழா

கற்குளம் ஸ்ரீதேவி கரு மாரி அம்மன் ஆடிப்பூர விழா நாளை மறுதினம் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு அம்பாளுக்கு விசேட அபிஷேகத்துடன் ஆரம்ப மாகி கொட்டடி முத்துமாரி அம் மன் ஆலயத்திலிருந்து பாற் குடம் எடுத்து ஊர்வலமாக கற் குளம் ஸ்ரீ கருமாரி அம்மன் ஆலயத்திற்கு சென்று பாற் குட அபிஷேகம் நடைபெறும்.

நண்பகல் 12 மணிக்கு அன்னதானமும் இரவு 7 மணி க்கு கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (இ-7)

---

புங்குடுதீவு-10 கண்ணகைபுரம் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள்(கண்ணகி அம்மன்) ஆலய ஆடிப்பூர பெருவிழா நாளை மறுதினம் 05 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு புங்குடுதீவு கலட்டி வரசித்தி விநாயகர் ஆலயத்திலிருந்து அடியவர்களால் பாற்குடம் பவனியாக எடுத்து வரப்பட்டு 8.30 மணி தொடக்கம் அம்பாளுக்கு விசேட ஸ்நபன அபிஷேகம், விசேட பூசை என்பன நடைபெற்று அம்பிகை வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும். (இ-3)

---

சித்தன்கேணி ஸ்ரீநாக கன்னி அம்பாள் ஆலயத்தில் நாளை மறுதினம் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10மணி முதல் ஆடிப்பூர அபிஷேகம் ஆராத்திகள் நடைபெற்று அம்பிகையின் திருவுலாவும் இடம்பெறும்.நண்பகல் 12 மணிக்கு சைவப்புலவர் செ.கந்த சத்தியதாசன் **அம்பிகையின் திரு அவதாரம்** எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (இ

# கஞ்சாவுடன் கைதானவர் விளக்கமறியலில்

பருத்தித்துறை நகர்ப்பகுதியில் 2 கிலோ 10 கிராம் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட இளைஞரை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி பெ.சிவகுமார் உத்தரவிட்டார். 31.07.2016 அன்று இரவு பருத்தித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 28 வயதுடைய இளைஞரை நேற்று முன்தினம் முதலாம் திகதி பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போதே அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (இ-60)

# கால்நடை வைத்தியர் கடமையில் இல்லை

கரவெட்டி கால்நடை வைத்தியசாலையில் வைத்தியர் இன்மையால் கால்நடைகளை சிகிச்சைக்காக கொண்டு செல்வோர் திரும்பிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஒருவார காலமாக அங்கு வைத்தியர் கடமையில் இல்லை எனவும் ஊழியர்கள் மட்டுமே கடமையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது வெப்பமான காலநிலை நிலவுவதனால் பெருமளவான கோழிகள் நோய் வாய்ப்படுவதாகவும் அதனை அங்கு கொண்டு செல்லும் போது வைத்தியர் இன்மையால் திரும்பிச் செலகின்றனர்.

இதனால் கோழிகள் இறப்பதற்கான சூழ்நிலை காணப்படுகிறது. கோழி வளர்ப்பினைப் பிரதான தொழிலாகக் கொண்டவர்கள் பாதிப்புக்குள்ளாவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ-60)

# அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

தீவக வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ள பாடசாலைகளுக்கு அதிபர் நியமனம் செய்வதற்காக தீவக வலயத்தில் கடமையாற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.


யா/புங்குடுதீவு ஸ்ரீ சித்தி விநாயகர் வித்தி வகை II,யா/நயினாதீவு ஸ்ரீ கணேசா வித்தி வகை II ,யா/மண்டைதீவு மகா வித்தி வகைII ,யா/சரவணைநாகேஸ்வரிவித்திவகை II , யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தி வகை II ,யா/எழுவைதீவுமுருக வேள் வித்தி வகை II,யா/நெடுந்தீவு ஸ்ரீஸ்கந்தா வித்தி வகை III, யா/நெடுந்தீவு மாவலித்துறை றோ.க வித்தி வகை III ,யா/காரை.ஊரி அ.மி. த.க.பாடசாலை வகைIII,யா/காரை மெய்கண்டான் வித்தி. வகைIII ,யா/செட்டிபுலம் அ. த.க. பாடசாலை வகைIII , யா/அனலைதீவு தெற்கு அ.த.க. பாடசாலை வகைIII ,யா/சரவணை சின்னமடு றோ.க.வித்தி.வகைIII.

வகைII பாடசாலைகளுக்கு வகுப்பு 2 அதிபர்களும் வகுப்பு 2 அதிபர்கள் விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்தில் பதில் அதிபர்களாக ஏற்கனவே சேவையிலுள்ள தற்போது அதிபர் போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று நியமனத்தை ஏற்றுக்கொண்ட அதிபர் வகுப்பு 3 இனைச் சேர்ந்தவர்களும் வகை III பாடசாலைக்கு தற்போது அதிபர் சேவை 3 போட்டிபரீட்சையில்சித்தி பெற்று நியமனத்தை ஏற்றுக்கொண்ட அதிபர்களும் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்களை வலயக்கல்வி அலுவலகத்தில்பெற்றுபூர்த்திசெய்த விண்ணப்பங்களை 12. 08 . 2016 ஆம் திகதிக்கு முன்னதாக வலயக்கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ




சாரணர்களின் நூற்றாண்டு நிறைவினை முன்னிட்டு யாழ்.இந்துக் கல்லூரி சாரணர்களால் ஒழுங்கமைக்கப்பட்ட ஆவணக் கண்காட்சி கடந்த வாரம் கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது. இக் கண்காட்சியினை விருந்தினர்கள் இணைந்து திறந்து வைப்பதனையும் இப்பாடசாலை சாரணர் துறையில் பெற்ற வெற்றிக்கிண்ணங்கள் ,உயர் விருதுகள் மற்றும் தமிழர்களின் தொன்மை கலாசாரத்தை உணர்த்தும் பொருட்கள் ஆகியனவும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதையும் படங்களில் காணலாம்.













யாழ். மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு பரிசளிப்பு தின விழாவும் நிறுவுநர் தினமும் நேற்று முன்தினம் (ஓகஸ்ட் முதலாம் திகதி ) திங்கட் கிழமை காலை 9 மணியளவில் கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவரும் லண்டன்வாழ் வைத்திய நிபுணருமான சேர். சபாரட்ணம் அருள்குமரன், மெதடிஸ்த திருச்சபையின் கொழும்பு ஆயர் பெரேரா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.


## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா:17<br>தகைமை/தொழில்:BS பொறியியலாளர்<br>தொ.இ: B/6188 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 24செவ் 12 இல்<br>c auk; 5'1"<br>தகைமை/தொழில்:HND, BA/ தனியார் தொழில்<br>தொ.இ: G/5867 |
| பிறப்பு:1981 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 23<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/6190 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 32செவ் 4 இல்<br>உயரம்: 150cm<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: G/5870 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 25செவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/6191 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 37செவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:HND, BMS<br>தொ.இ: G/5871 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 60செவ் 8 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:B.Engலண்டன் NOT PR<br>தொ.இ: B/6193 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 77சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:MSc/அரசதொழில் கனடா<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/5872 |

# கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:-021 720 1005,021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


# பொருளாதார பிரச்சினைகளின் விளைவை மக்கள்தான் அனுபவிக்க வேண்டியுள்ளது

## ஜனாதிபதி மைத்திரி கவலை

(கொழும்பு)

**மேடைகளில் கற்பனைக் கதைகளைக் கூறிக் கொண்டு சிலர் வீதிவலம் வருகின்றபோதும் கடந்த அரசாங்கம் நாட்டில் ஏற்படுத்தியிருந்த பொருளாதாரப் பிரச்சினைகளின் விளைவுகளை தற்போது மக்கள் அனுபவிக்க வேண்டியுள்ளதாக ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தெரிவித்தார்.**

நேற்று முற்பகல் கொழும்பு சினமன் கிரேன்ட் ஹோட்டலில் நடைபெற்ற இலங்கை பொருளாதார மாநாட்டின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி,

இலங்கை தற்போது 9000 மில்லியன் ரூபா கடன் சுமையை எதிர் கொண்டிருப்பதாகவும் இந்த பொருளாதார நிலைமையை அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் பொது மக்களும் விளங்கிக் கொள்ள வேண்டியது அவசியமாகும் என்றும் தெரிவித்தார்.

சிறிய மற்றும் நடுத்தர தொழிற்றுறைகளிலிருந்து தற்போது நாட்டின் பொருளாதாரத்திற்கு கிடைக்கும் பங்களிப்பு 8வீதம் முதல் 10வீதம் வரையிலாகும் என்றும் அதனை 20வீதமாக உயர்த்த முடியு மாயின் நாட்டின் தேசிய பொருளாதாரத்தை மேலும் பலமான நிலைக்கு கொண்டு வரக்கூடியதாக இருக்கும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கடன் சுமைகள் இருந்த போதும் அரசாங்கத்தினால் மக்களுக்கு வழங்கும் உதவிகள் ஒருபோதும் நிறுத்தப்படாது எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, உதவிகளுக்காக செலவிடப்படும் நிதியை ஈட்டிக் கொள்வதற்காக உற்பத்தித் துறையில் குறிப்பிட்ட வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும் என்றும் தெரிவித்தார்.

பொதுமக்களுக்குசுமையை ஏற்படுத்தாத வகையில் அரச நிதி முகாமைத்துவத்தையும் நிதி ஒழுங்குகளையும் பேணி வரவேண்டியதன் அவசியத்தை சுட்டிக் காட்டிய ஜனாதிபதி, இதற்கு அரசாங்கத்துறையும் தனியார் துறையும் ஒன்றாக செல்லும் ஒரு புதிய பயணத்தை ஆரம்பிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அண்மைக்காலத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளில் இருந்து அரசாங்க பொருளாதாரத்திற்கு கிடைத்த பங்களிப்பு தொடர்பில் திருப்தியடையக் கூடியதாக இல்லை என்றும் இலங்கையை சுற்றி இருக்கும் கடல் மற்றும் நாட்டில் உள்ள ஏனைய வளங் களில் இருந்து நாம் சரியான பயனைப் பெற்றுக்கொள்கிறோமா என்பதில் பிரச்சினைகள் உள்ளதாகவும் ஜனாதி பதி தெரிவித்தார்.


நாட்டில் உள்ள வளங்களை பயன்படுத்துவதில் ஆசிய வலயத்தில் உயர்ந்த மட்டத்தில் உள்ள ஒரு நாடு என்று இதுவரை அடைந்து கொள்ள முடியாதுபோன கனவை நனவாக்குகின்ற நோக்குடன் பிரச்சினை களில் இருந்து வெளியேறி அவற்றுக்கு தீர்வுகளை தேடுவதிலும் சொற்களுக்குள் வரையுண்டு போகாது செயற்படுவதன் அவசியத்தையும்ஜனாதிபதி இங்குவலியுறுத்தினார்.(இ-7-10)

# வவுனியா பொது வைத்தியசாலையின் அபிவிருத்திக்குழு அங்குரார்ப்பணம்



(குருமன்காடு)

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழு அங்குரார்ப்பண நிகழ்வு, கூட்டம் என்பன நேற்று முன்தினம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தலைமையில் மன்னார் வீதியில் அமைந்துள்ள வவுனியா பிராந்திய சுகாதார பணிப்பாளர் பணிமனையில் நடைபெற்றது.



வடக்கு மாகாணத்தில் சகல மாவட்ட வைத்தியசாலைகளிலும் செயற்படுத்தப்பட இருக்கும் வைத்தியசாலைகளின் அபிவிருத்தி குழுக்களின் செயற்பாடானது முதற்கட்டமாக நேற்று முன்தினம் வவுனியாவில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாணசபையின் சுகாதார அமைச்சின் நியதிச்சட்டத்தின் அடிப்படையில் 14 உறுப்பினர்களைக் கொண்ட வைத்தியசாலை அபிவிருத்திக் குழு நியமிக்கப்பட்டது.

இதில் 4 பேர் வவுனியாவில் துறைசார் பதவிவழி உத்தியோகத்தர்களாகவும். 4 பேர் வைத்தியசாலையின் உத்தியோகத்தர்களாகவும் மற்றும் 6 பேர் வடக்கு மாகாண சுகாதார அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பொது மக்களாக இருப்பர்.

வவுனியா பொது வைத்தியசாலையின் அபிவிருத்தி குழுவின் தலைவராக அவ் வைத்தியசாலையின் பணிப்பாளரும், செயலாளராக பொது மகன் ஒருவரும் செயற்படுவார்கள். (2-250)





# சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டவர்கள் கைதாகினர்

## தடயப்பொருட்களும் கைப்பற்று

(மல்லாவி)

**முல்லைத்தீவு மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசங்களில் ஐந்து சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டதுடன் அவற்றிற்கு பயன்படுத்தப்பட்ட தடயப் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக மாங்குளம் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.**

மாங்குளம் பொலிஸ் நிலைய உப- பொலிஸ் பரிசோதகர்களான கே.ஜசிந்தன், எ.சியான் ஆகியோர் தலைமையிலான பொலிஸ் அணியினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போதே மேற்படி நபர்களும் பொருட்களும் சிக்கிக் கொண்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கடந்த 30, 31, முதலாம் திகதி ஆகிய தினங்களில் பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவல்களை அடுத்து சுற்றி வளைப்பை மேற்கொண்ட மாங்குளம் பொலிஸார் காட்டு விலங்கானபன்றியை வேட்டையாடி அதனை இறைச்சியாக்கி, விற்பனை செய்து கொண்டிருந்த இருநபர்களை, தலா நான்கு கிலோ இறைச்சியுடன் மாங்குளம் புதிய குடியிருப்பு கிராமத்தில் வைத்து கைது செய்தனர்.

இதேவேளை பனிக்கன்குளம் கிராமத்தில் அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் , மணல் ஏற்றிய டிப்பர் வாகனங்கள் இரண்டைக் கைப்பற்றியதுடன் அதன் சாரதிகள் இருவரையும் கைது செய்தனர்.

அத்துடன் மாங்குளம் 100 ஏக்கர் பகுதியிலுள்ள அரசாங்கத்திற்கு சொந்தமான காட்டை சட்டவிரோதமான முறையில் ஜே.சி.பி. என்ற இயந்திரத்தின் மூலம் காடழிப்பை மேற்கொண்டிருந்த வேளை மேற்படி இயந்திரம் கைப்பற்றப்பட்டதுடன் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி குற்றச் சாட்டுகளின் பேரில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இன்று புதன்கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் தடயப் பொருட்கள் அனைத்தும் மேற்படி நீதிமன்றில் பாரப்படுத்தப்படவுள்ளதாகவும் மாங்குளம் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அண்மைக் காலமாக மாங்குளம் பொலிஸ் பிரதேசத்தில் இடம் பெறும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் பொலிஸார் துரிதமாக ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-15)

# உள்ளக விசாரணையில் எமக்கு நம்பிக்கையில்லை; சர்வதேச கண்காணிப்புடன் விசாரணை அவசியம்

## நல்லிணக்க செயலணியிடம் வலியுறுத்து

இறுதி யுத்தத்தின்போது இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் சென்ற மக்களில் பெண்களை ஆண் இராணுவத்தினரே சோதனை செய்தனர் என நேற்று முன்தினம் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற நல்லிணக்கப் பொறிமுறைக்கான மக்கள் கருத்துக்களை கேட்டறியும் அமர்வில் கருத்து பதிவு செய்யப்பட்டது.

இதன்போது கருத்துப் பதிவுகளை மேற்கொண்ட மக்கள் கூறுகையில்,

வவுனியாவில் நலன்புரி முகாம்களில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் சென்ற மக்களில் பெண்களை பெண் இராணுவத்தினர் சோதனையிடாது, ஆண்இராணுவமே சோதனையிட்டதாகவும் தகாத முறையில் நடந்து கொண்டதாகவும் கருத்து பதிவு செய்யப்பட்டது.

இவ்வாறு பல்வேறு குற்றச்சாட்டுக்கள் உள்ள நிலையில் சர்வதேச விசாரணையை மேற்கொள்வதே சிறந்தது என வலியுறுத்தப்பட்டது.



புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளமை தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இரசாயனம்கலந்த உணவுகள் வழங்கப்பட்டதாக முன்னாள் போராளி குறிப்பிட்டமை தொடர்பில் ஊடகங்கள் ஊடாக அறிந்து கொண்டதாக கருத்துக்களை பதிவு செய்த இளைஞர்கள் இவ் விடயம் சர்வதேச ரீதியில் ஆராயப்பட வேண்டும் எனவும் உள்ளக விசாரணையில் நம்பிக்கை இல்லை எனவும் குறிப்பிட்டனர்.

அத்துடன் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் விசாரணை இடம்பெற வேண்டும். சிறையில் உள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்யப்பட வேண்டும் என இளைஞர்கள் குறிப்பிட்டனர்.

நல்லிணக்கம் ஏற்படுத்தப்படுவதற்கு பல்வேறு விடயங்கள் சீர் செய்யப்பட வேண்டியுள்ளமையை மேற்குறித்த விடயங்கள் வலியுறுத்தும் எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

வடக்கில் குறிப்பாக யாழ். மாவட்டம் போதைப்பொருள் பாவனையில் முன்னிலையில் இருப்பதாக புள்ளி விபரம் காட்டுவதாக இளைஞர்கள் தெரிவித்தனர்.

வடக்கில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் வெளியேற்றப்பட்டு சிவில் நிர்வாகம் உருவாக்கப்பட வேண்டும் எனவும் அவர்களால் கருத்து முன்வைக்கப்பட்டது.

நல்லிணக்கத்திற்கு வடக்கு கிழக்கு இணைந்த சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும் எனவும் அனைத்து விட யங்களும் பக்கச்சார்பில்லாமல் சர்வதேச கண்காணிப்புடன் செய்தாலே நல்லிணக்க பொறிமுறையை கட்டியெழுப்ப முடியும் என இளைஞர்கள் செயலணியிடம் வலியுறுத்தினர். (2-15)



**வவுனியா தமிழ்ச் சங்கத்தில், திருமலை, கவிச்சுடர் சிவரமணியின் அவள் ஒரு தனித் தீவு எனும் நூல் அறிமுக விழா அண்மையில் தமிழருவி த. சிவகுமாரன் தலைமையில் இடம் பெற்றபோது...**

# விவசாயிகளின் வயற்காணி பதிவேடு இறுதித்தரவு விபரங்கள் பார்வைக்கு

## ஒலுமடு கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் அறிவிப்பு

ஒலுமடு கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட கமக்கார அமைப்புக்களின் கீழ் உள்ள விவசாயிகளினுடைய வயற்காணிப் பதிவேடு இறுதித்தரவு விபரம் விவசாயிகளின் பார்வைக்காக மாங்குளம், பனிக்கன்குளம், ஒலுமடு ஆகிய கிராமசேவையாளர் அலுவலகத்தின் விளம்பர பலகைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக ஒலுமடுகமநலசேவைநிலைய பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

அண்மைக்காலமாக விவசாயிகள் வயற்காணிப் பதிவேடு மேற்கொள்ளப்பட்டு இறுதிப்பதிவு விபரம் விளம்பரப் பகுதிகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

விவசாயிகள் இதனை பார்வையிட்டு ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் இன்று புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை வரையான காலப்பகுதிக்குள் எழுத்துமூலமாக ஒலுமடு கமநல சேவை நிலையத்திற்கு தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

அத்துடன் வயற் காணிகளின் பதிவேடுகளை மேற்கொண்ட விவசாயிகள் அப் பதிவேட்டின் மூலப் பிரதிகள், நிழற்பிரதிகள் ஆகியவற்றுடன் குறித்த காலப்பகுதிக்குள் ஒலுமடு கமநல சேவை நிலையத்தில் ஒப்படைக்க வேண்டும்.

பதிவுகளை மேற்கொள்ளத் தவறிய விவசாயிகள் குறித்த கால எல்லைக்குள் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு வயற்காணிப் பதிவுகளை மேற்கொள்ளத் தவறும் விவசாயிகள் எதிர்காலத்தில் உர மானியக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ள முடியாது என அவர் மேலும் அறிவித்துள்ளார். (2-15)



முல்லைத்தீவு கெருடமடு பிள்ளையார் கோவில் தீர்த்தக்கரையில் ஆடி அமாவாசை நிகழ்வு நேற்று நடைபெற்றது. அயல் பிரதேசங்களில் இருந்து தங்கள் நேர்த்திக் கிரியைகளைச் செய்வதற்கு பெருந்திரளான மக்கள் வருகை தந்து தீர்த்தமாடுவது வழக்கம். இந்த ஆண்டும் பெருந்திரளான மக்கள் கிரியைகள் செய்து தீர்த்தமாடியதைப் படத்தில் காணலாம்.

(படம்: மல்லாவிச் செய்தியாளர்)





நல்லிணக்க பொறிமுறை செயலணி குழுவின் கிளிநொச்சி மாவட்டத்திற்கான இறுதி அமர்வு நேற்றுக் காலை 9.30 மணியளவில் ஆரம்பமாகி பூநகரி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற போது...........

(படங்கள்:- மல்லாவிச் செய்தியாளர்)





நல்லிணக்க பொறிமுறை செயலணி குழுவின் மக்கள் கருத்தறியும் அமர்வு நேற்றுக் காலை 9.30 மணியளவில் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெற்ற போது.........

(படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# வடக்கு,கிழக்கு இணைந்த அதிகாரப்பகிர்வு தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்

## நல்லிணக்க செயலணியிடம் வலியுறுத்து



முன்னாள் போராளிகளுக்கு மட்டுமல்ல, இவ்வாறான சாட்சிப் பதிவுகளுக்கு வருகை தருகின்ற அனைவருக்கும் இராணுவ அச்சுறுத்தல் என்பது தொடர்கதையாகவே உள்ளது. குறித்த அச்சுறுத்தல் கலைக்கப்பட வேண்டும். இராணுவத்தினர் குறைக்கப்பட்டு பொலிஸ் அதிகாரம் அதிகரிக்கப்பட வேண்டுமென பொதுமக்கள் தமது கருத்துப் பதிவுகளை முன்வைத்தனர்.

நல்லிணக்க பொறிமுறை செயலணி குழுவின் மக்கள் கருத்தறியும் அமர்வு நேற்றுக் காலை 9.30 மணியளவில் ஆரம்பமாகி பூநகரி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இந்த அமர்வில் நண்பகல் வரை 43 பேர் வருகை தந்து தமது கருத்துப் பதிவுகளை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போதே பொதுமக்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர். அவர்கள் தொடர்ந்து கூறுகையில்,

போராளிகளுக்கான நினைவுத் தூபிகள் அமைப்பதற்கு அரசு அனுமதி அளிக்க வேண்டும். பயங்கரவாதிகள் என குறிப்பிடுவதனால், உலகில் பல்வேறு அமைப்புக்கள் மக்களுக்கு எதிராகவும் திரும்பியிருந்தன. ஆனால் அந்த அமைப்புக்கள் இன்றும் தமது போராளிகளை நினைவு கொள்ளும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் ஜே.வி.பியினர் நினைவுகூறுகின்றனர். அவர்கள் அரசுக்கும், மக்களுக்கும் எதிராக செயற்படவில்லையா? இலங்கை இராணுவம் கம்பஹாவில் தண்ணீர் கேட்டமைக்காக மூன்று பொதுமக்களைச் சுட்டு கொன்றது. அப்படியானால் இராணுவமும் பயங்கரவாதிகளா? அவர்கள் நினைவு கூற முடியுமானால், அனைத்து போராட்ட இயக்கங்களும் தமது போராளிகளை நினைவுகூற சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என கருத்து முன்வைக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு இணைந்த அதிகாரப்பகிர்வு மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். அது மட்டுமல்லாது சமயம் சார்ந்த நாடாக பிரகடனப் படுத்தக் கூடாது. இந்தியா, நேபாளம் ஆகிய நாடுகள் அதிகளவில் இந்துக்களை கொண்ட நாடாக இருக்கும் போதிலும், தன்னை இந்து நாடாக அறிவித்தது கிடையாது. அவ்வாறான சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும் என கருத்துப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் காணாமற் போனோர் கண்டறியப்பட வேண்டும். அரசியல் கைதிகளின் விடுதலை. இராணுவம் ஆக்கிரமித்துள்ள காணிகளை விடுவித்தல். முன்னாள் போராளிகளின் மரணம் தொடர்பில் கண்டறிதல், சர்வதேச விசாரணையை முன்னெடுத்தல் என பல்வேறு கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டன. (2-15)

# பெற்றோரை இழந்த எமக்கு நட்டஈடு வழங்கவேண்டும்

## கண்ணீர்மல்க வேண்டுகோள்

பெற்றோரை இழந்த தமக்கு நட்டஈடு வழங்க வேண்டும் என பெண் ஒருவர் உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளார். நேற்று பூநகரியில் இடம்பெற்ற நல்லிணக்க மக்கள் கருத்தறியும் குழு முன்பாக குறித்த பெண் கண்ணீர் மல்க குறித்த வேண்டுகோளை முன்வைத்தார்.

பெற்றோரை இழந்த சகோதரர்கள் எனது பொறுப்பின் கீழ் உள்ளனர். அவர்களிற்கு ஒரு தாயாக நான் பார்த்து வருகின்றேன். வைத்தியசாலைக்கு எனது கடைசி சகோதரனை அழைத்து சென்றிருந்தேன். அங்கு அவன் அழுத போது, அழுகின்ற பிள்ளைக்கு பால் கொடுக்குமாறு கூறினார்கள். என்னால் அது முடியாமல் போனது. அவர்களிற்கு குறித்த குழந்தையின் சகோதரி நான் என்பது தெரியாது. இந்த நிலையை கொண்டு வந்தது யார்? இதற்கு அரசே பொறுப்பு கூற வேண்டும்.



பெற்றோரை இழந்த எமக்கு அரசாங்கமே முழு பொறுப்பையும் சகோதரர்களின் கல்வி உட்பட அனைத்து வசதிகளிற்கும் அரசே முழு பொறுப்பையும் ஏற்க வேண்டும் என பரிந்துரை விடுத்தாள்.

குறித்த பெண்ணின் கண்ணீரை பார்த்த நல்லிணக்க குழுவினரும், வருகை தந்திருந்த மக்களும் கண்ணீருடன் சில மணிநேரங்கள் கழித்தனர். (2-15)




### நல்லிணக்கம் ஏற்படவேண்டுமெனில்

# பொதுமக்களின் சொந்தக் காணிகளை விட்டு ராணுவம் வெளியேற வேண்டும்



(மல்லாவி)

நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டுமெனில் பொதுமக்களின் சொந்தக் காணிகளை விட்டு இராணுவம் வெளியேற வேண்டும் என பூநகரி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கருத்துப் பதிவில் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் கருத்தை பதிவு செய்த நபர் கூறுகையில்,

இரணைதீவு பகுதியில் இருந்து 1992 ஆம் ஆண்டு நாம் வெளியேறினோம். இன்றுவரை சொந்த ஊருக்கு செல்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. அண்மையில் வடக்கு மாகாண சபைமுதலமைச்சர் உள்ளிட்ட குழுவினர் குறித்த பகுதிக்கு செல்ல முயற்சி எடுத்த போதிலும் அது கடற்படையினரால் தடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலை தொடர்வதனால் எவ்வாறு நல்லிணக்கத்தை எதிர்பார்க்க முடியும். மக்கள் குடியிருப்புக்களில் இருந்து இராணுவம் வெளியேறி, ஆரம்ப காலங்களில் எந்தெந்த இராணுவ முகாம்களில் இருந்தார்களோ அங்கே செல்ல வேண்டும் என தெரிவித்தார்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளின் தொடர்ச்சியான மரணம் தொடர்பில் சர்வதேச மருத்துவ குழுவினால் ஆராயப்பட வேண்டும். இதேவேளை தொடர்ச்சியான இராணுவ அச்சுறுத்தகளுக்குள் உள்ள முன்னாள் போராளிகளின் நிலை மாற்றப்பட வேண்டும். மட்டுமல்லாது தமிழ் மக்களுக்கான உரிமைகள் மறுக்கப்படாது, அதிகாரப் பகிர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் கருத்து முன்வைக்கப்பட்டது. (2-15)

# சரணடைந்தவர்களுக்கு நடந்தது என்ன? சர்வதேச விசாரணை நடத்த வேண்டும்

## நல்லிணக்க செயலணியிடம் இளைஞன் கருத்துப்பதிவு



நல்லிணக்கம் ஏற்படுத்தப்படுவதற்கும் பல்வேறு விடயங்களுக்கும் சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்படுவதன் மூலமே தீர்வு எட்டப்படும் என இடம்பெற்ற கருத்துப் பதிவில் இளைஞன் ஒருவர் கருத்து தெரிவித்தார்.

நல்லிணக்கப் பொறிமுறை செயலணி குழுவின் மக்கள் கருத்தறியும் அமர்வு நேற்றுக்காலை 9.30 மணியளவில் பூநகரி பிரதேச செயலகத்தில் ஆரம்பமாகி நடைபெற்றது.

இதில் கருத்துப்பதிவை மேற்கொண்ட இளைஞன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், யுத்தம் இடம்பற்ற போது இராணுவ கட்டுப்பாட்டிற்குள் வந்த பெண்களை இராணுவம் நிர்வாணமாக சோதனையிட்டது. குறித்த சம்பவம் இன்றும் மக்கள் மத்தியில் ஆளமாக பதிந்துள்ளது.

காணாமற் ஆக்கப்பட்டவர்களின் உண்மை நிலையை வெளிப்படுத்தவும், அரசியல் கைதிகளின் விடுதலையை உறுதிப்படுத்தவும் வேண்டும். சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பிலும் நீதியான சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும். இராணுவ கட்டுப்பாட்டிற்குள் எம்மால் விட்டு செல்லப்பட்ட வாகனங்களுக்கு என்ன நடந்தது. ஆவணங்கள் அனைத்தும் எம்மிடம்இருக்கும் அதே வேளை பல்வேறு படிவங்கள் நிரப்பி கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்று வரை வாகனங்களை கையளிக்கவோ, அல்லது நட்ட ஈடுகளை வழங்கவோ பரிந்துரைக்கப்படவில்லை.

உயிரிழந்த போராளிகள், பொதுமக்களை நினைவு கூர்வதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும். நல்லிணக்கம் ஏற்படுத்தப்படவேண்டுமானால் குற்ற செயல்களில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என கருத்து முன்வைக்கப்பட்டது.(2-281)

# புற்றுநோய் சிகிச்சைக்காக ரூ.1200 கோடி ஒதுக்கீட்டுக்கு அமைச்சரவைப்பத்திரம்



(கொழும்பு)

புற்றுநோயாளிகளுக்கான இலவச மருந்துகளை கொள்வனவு செய்வதற்காக 1200 கோடி ரூபா மேலதிக நிதி ஒதுக்கீடு செய்யக் கோரி அமைச்சரவைப் பத்திரம் ஒன்று தாக்கல் செய்யப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை சுகாதார, சுதேச மருத்துவத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன மேற்கொண்டுள்ளார்.

புற்றுநோய்க்கான சிகிச்சையின்போது பயன்படுத்தப்படும் ஒருசில மருந்துகள் இரண்டரை இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான விலை கொண்டவையாகும்.

புற்றுநோயினால் பீடிக்கப்பட்ட ஒருசிலர் தங்களுடைய சிகிச்சைகளுக்காக ஐம்பது தொடக்கம் அறுபது இலட்சம் வரை செலவழிக்க நேரிடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் புற்றுநோயினால பீடிக்கப்பட்டுள்ள அனைத்து நோயாளிகளுக்கும் இவ்வாறான விலை உயர்ந்த மருந்துப் பொருட்களைப் பயன்படுத்தவோ, பெருந்தொகை செலவழித்து சிகிச்சை பெற்றுக் கொள்ளவோ போதுமான பொருளாதார வசதி இல்லை.

இதனைக் கருத்திற் கொண்டு புற்று நோயாளிகளுக்குத் தேவையான அனைத்து சிகிச்சைகளையும் இலவசமாக வழங்கும் வகையில் தேவையான மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்ய இந்த மேலதிக நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது. (இ-7-10)

# அறிக்கையை சமர்ப்பிக்க அழைப்பை எதிர்பார்க்கும் பரணகம ஆணைக்குழு

(கொழும்பு)

இலங்கையின் போர்க் காலத்தில் காணாமற்போனோர் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகளின் முழுமையான அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளிக்க எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக மக்ஸ்வெல் பரணகமவின் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த ஆணைக்குழுவின் ஆயுட்காலம் கடந்த 15ஆம் திகதியுடன் முடிவடைந்தது.

இந்த நிலையில் தமது குழுவுக்கு இரண்டாம் கட்டப்பணிகளை மேற்கொள்வதற்கு மேலும் கால அவகாசம் இருக்கவில்லை என்று ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இந்த ஆணைக்குழு இதுவரை மேற்கொண்ட விசாரணைகளின்படி 400 பேர் தொடர்பில் முழுமைத் தரவுகள் திரட்டப்பட்டுள்ளன.

இந்த நிலையில் குறித்த அறிக்கையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்க அனுமதியை எதிர்பார்த்துள்ளதாக பரணகம ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (இ-7-10)

# கிரிக்கெட் போட்டியில் பங்கேற்பதற்கு பெற்றோர் மறுப்பு;மாணவன் தற்கொலை

கிரிக்கெட் போட்டியொன்றில் கலந்து கொள்ள பெற்றோர் அனுமதியளிக்க மறுத்த காரணத்தால் பாடசாலை மாணவன்ஒருவன்தற்கொலை செய்து கொண்டுள்ள சம்பவம் ஒன்று நேற்று இடம் பெற்றுள்ளது.

காலி மாவட்டத்தின் அம்பலாங்கொடை பிரதேசத்தில் உள்ள முன்னணி பாடசாலை ஒன்றில் கல்வி கற்ற 16 வயதான மாணவன் ஒருவனே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளான்.

குறித்த மாணவன் தன் பெற்றோரிடம் கிரிக்கெட் போட்டியொன்றுக்குச் செல்ல அனுமதி கோரியுள்ள நிலையில் பெற்றோர் அதற்கு மறுப்பு தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து தனது அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்ட மாணவன் தற்கொலை செய்து கொண்டுள்ளான். மாணவனின் உடல் அம்பலாங்கொடை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு, பெறறோரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7-10)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## காட்டாத்தி

**Botanical Name**-Bauhinia tomentosa

**Family Name**-Caesalpiniaceae

**English Name**-Holy mountain ebony

இது ஒரு பெருஞ்செடி. அல்லது சிறிய மரவகையைச் சேர்ந்ததாகும். இது சிறிய பல கிளைகளுடன் நன்கு படர்ந்து சுமார் 15 தொடக்கம் 20 அடி உயரம் வரைக்கும்வளரக்கூடியது.இம்மரம்சுமார் 6 அங்குலம் வரைக்கும் குறுக்களவுள்ளதாக இருக்கும். இரண்டாகப் பிரிந்த இலைகளையும் மஞ்சள் நிறப்பூக்களையும் கருநிறக் கட்டையினையும் உடைய மரம். இதன் இலை,மொட்டு,பூ, பிஞ்சு,காய் ஆகிய அனைத்து உறுப்புகளும் மருத்துவப்பயன் உடையவை.

**பரம்பலும் இனவிருத்தியும்**

எல்லா வகை மண்ணிலும் இலகுவில் பயிராகும்.பொதுவாக கோவில்களில் இதன் பரம்பலைக் காணலாம்.

**மருத்துவப் பயன்கள்**

**பொதுக்குணம்**

"வெடிப்பை மே கப்படையை வீறிவரு குட்டத்தடிப்பை முளைரணத்தைச் சாடும்-படிக்குண்மயிலென்ன வொளிர் மாதரசே! எங்குஞ் சுணைகணிறைப் பன்னமுறு பேயத்தில் பால்"

இதன் பாலானது பாத வெடிப்பு,மேகசொறி,குட்டரோகத் தடிப்பு,முளைவிரணம் இவற்றை விலக்கும்.



இதன் முழுத் தாவரப் பகுதிகளும் சீதக்கழிச்சல் போக்கியாகவும் நுண்புழுக்கொல்லியாகவும் செயற்படும்.பூ இரத்தம்,சீழ்க்கசிவைத் தடுத்து தாதுபலத்தை கூட்டும்.காய் சிறுநீர் பெருக்கும்,விதை உடல்பலத்தைக் கூட்டும்.

உலர்ந்த காட்டாத்தி இலை அல்லது பூ 20 கிராம்,200 மில்லி நீரிலிட்டு 100மில்லி லீற்றராக காய்ச்சி இரண்டு அல்லது மூன்று வேளையாகக் குடித்துவர சீதக்கழிச்சல் குணமாகும்.

காட்டாத்திப்பூ,வில்வவேர்ப்பட்டை, கோரைக் கிழங்கு,வெட் பாலை அரிசி, வெள்ளிலோத்திரப்பட்டை, இலவங்கப் பட்டை இவற்றைச்சம அளவாக எடுத்து உலர்த்திப் பொடித்துச் சமனெடைச் சர்க்கரைப் பொடி கலந்து வைத்துக்கொண்டு வேளைக்கு 5 கிராம் மோரில் கலக்கி காலை, மாலை கொடுத்துவர சீதக்கழிச்சல், நீடித்த கழிச்சல் ஆகியவை குணமாகும்.

காட்டாத்தி விதையை காடியில் அரைத்து பற்றுப்போட கடி நஞ்சுப்புண்கள் ஆறும்.(காடி-அரிசி கழுவிய நீர்)

காட்டாத்திப் பட்டையை காடி நீரில் ஊறவைத்து இடித்து பின் அதனுள் நீர்விட்டு குடிநீர் காய்ச்சி வடித்து பின் சக்கையையும் பிழிந்து பின் அவற்றை பாணியாக வற்றக் காய்ச்சி அதனுள் துணியை தோய்த்து எடுத்து வீக்கம்,நாட்பட்ட வலிகள் உள்ள இடங்களில் பற்றிட தீரும்.

பட்டையை இடித்து நீர்விட்டு குடிநீராக காய்ச்சி அருந்திவர அதிகரித்த Blood Cholesterol ஐ தீர்க்கும். பட்டையை சிதைத்து நீரிலிட்டு கொதிக்க வைத்து வடித்து வாய் கொப்பளித்து வர பல்வலி,வாய்ப்புண் குணமாகும்.

40 கிராம் காட்டாத்திப் பட்டையைப் பஞ்சுபோல் இடித்து 1/2 லீற்றர் நீரிலிட்டு 125 மில்லியாக காய்ச்சி 40 மில்லி லீற்றராக காலை, மதியம், மாலை கொடுத்துவர மண்ணீரல் வீக்கம் தீரும்.வயிற்றுப் போக்கு, பசியின்மை ஆகியன குணமாகும்.குடற்புழுக்கள் மடியும்.

10 கிராம் காட்டாத்தி இலையும் 5 கிராம் வில்வமிலையும் 5 கிராம் துளசி இலையையும் ஒன்று சேர்த்து அரைத்து சாறு பிளிந்து சிறிது தேன் சேர்த்து 15-30 மில்லி லீற்றர் சாற்றை சிறு குழந்தைகளுக்கு ஏற்படும் சகல நோய்களுக்கும் கொடுக்கலாம்.

இதன் கொழுந்து இலைகளை மென்று உண்ணலாம். நோய்கள் வராமல் தடுக்க உதவும்.அல்லது 50 கிராம் இலைகளை 100 கிராம் தானிய மாவுடன் சேர்த்து அடையாகவும் செய்து பயன்படுத்தலாம்.

இதன் விதைகளை சேகரித்து நன்கு உலர்த்திப் பொடி செய்து 1-2 கிராம் அளவு தூளை 150 மில்லி லீற்றர் காய்ச்சிய பசும்பாலுடன் சேர்த்து அருந்த உடலுக்கு பலத்தை கொடுக்கும்.

இதன் இலைகள்,மொட்டுக்கள் மற்றும் பூக்கள் ஆகியவற்றை நிழலில் உலர்த்தி பொடித்து வினாகிரி விட்டரைத்து நஞ்சுக்கடி புண்களுக்கு பசைபோல் பூச (Paste) விஷக் கடி, புண்கள் விரைவில் குணமடையும்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

பருமனான உடல் உடையவர்கள் இதன் வேர்களை சேகரித்து சிறுசிறு துண்டுகளாக வெட்டி நிழலில் உலர்த்தி பொடி செய்து வைத்துக்கொள்ள வேண்டும்.தினமும் இரவில் 4 கிராம் அளவு வெந்நீரில் அருந்த பருத்த உடற்பருமன் நன்றாக குறைவடையும்.பக்க விளைவுகளும் இல்லை.

காட்டாத்திப்பட்டை,வேலம்பட்டை, மாதுளம்பூ, இவைகள் ஒவ்வொன்றும் 20 கிராம் அளவு எடுத்து 300 மில்லி லீற்றர் நீர்விட்டு 1/4 ஆக காய்ச்சி வாய் கொப்பளித்து வர வாய்ப்புண், தொண்டைப்புண் தீரும்.

இதன்பழத்தையும் பட்டையையும் வெந்நீரில் குளித்து வர சொறி,படை நீங்கும்.

# குருப்பெயர்ச்சி பலன்கள்



### எவரிடமும் எளிதாக நெருங்கிப் பழகும் மிதுன ராசி அன்பர்களே!

அடுத்தவர் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்பவர்கள் நீங்கள். பிறரைப் புகழ்ந்து சொல்லியே காரியம் சாதிப்பதில் வல்லவர்கள். மற்றவர்களைப் பார்த்த மாத்திரத்தில் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு விடுவீர்கள். யாரேனும் சிறிய உதவி செய்தால்கூட அதை அவர்களிடம் அடிக்கடி எடுத்துக் கூறி நன்றிகாட்டுவீர்கள். சமூகத்தில் உங்களுக்கென்று ஒரு தனி அந்தஸ்து இருக்கும். ஆரம்ப காலத்தில் நீங்கள் சாதாரணமாக இருந்தாலும், அனுபவத்தில் நீங்கள் சாமர்த்தியசாலியாக மாறி விடுவீர்கள். பேச்சுத்திறமையால் உயர்ந்த மனிதர்களையும் உங்கள் வசமாக்குவீர்கள். எத்தனை பேரிடம் ஆலோசனை கேட்டாலும், கடைசியில் உங்கள் முடிவையே செயற்படுத்துவீர்கள்.

களத்திர ஸ்தானாதிபதியாக குரு விளங்கினாலும், உபய ராசியாக உங்கள் ராசி அமைவதால் பொருத்தம் பார்த்து திருமணம் செய்தால் தான் பொன்னான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள இயலும். குருபலம் நன்றாக இருந்தால் தான் குழந்தைகளால் பிரச்சினைகள் ஏற்படாது. தனாதிபதியாக சந்திரன் விளங்குவதால் எப்பொழுதும் உங்கள் கரங்களில் யாருடைய பணமாவது புரண்டு கொண்டுதான் இருக்கும்.

நண்பர்கள் புடை சூழ இருக்கும் பொழுது நகைச்சுவையாகப் பேசி எதிரிகளை மடக்கி விடுவீர்கள். மன உறுதி மிக்கவர்களாக நீங்கள் இருப்பதால் எதையும் சாதித்துக் காட்டும் திறமை உங்களுக்கு உண்டு. ஒருவர் எதைச் செய்ய முடியாது என்று சொல்கிறார்களோ, அதைச் செய்து காட்டுவீர்கள்.

உங்கள் ராசியைப் பொறுத்தவரை வரவிருக்கும் குருப்பெயர்ச்சி, அர்த்தாஷ்டம குருவாக அமைகிறது. அதன் விளைவு எப்படியிருக்கும் என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**வந்து விட்டது குருப்பெயர்ச்சி!**

உங்கள் ராசிக்கு 3 இல் சஞ்சரித்து வந்த குருபகவான், 2.8.2016 முதல் 4 ஆம் இடமான சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். அஷ்டமத்தில் பாதி வலிமையைப் பெறுவதால், அர்த்தாஷ்டம குரு என்ற பெயரைப் பெறுகின்றது. இந்த நேரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். விரயம் அதிகமாகும். மன உளைச்சல் கூடும். மாற்றங்களும், ஏமாற்றங்களும் வந்து சேரும் என்றெல்லாம் நீங்கள் நினைக்க வேண்டாம்.

ஏனெனில் 7.10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு 4ஆம் இடத்தில் சஞ்சரித்து, கேந்திராதிபத்ய தோஷத்தை உண்டாக்கினாலும், அதன் பார்வை அதற்குரிய சொந்த வீட்டின் மீதே பதிகிறது. எனவே தோஷத்தை யோகமாக மாற்றும் தன்மை உருவாகப் போகிறது. அதுமட்டுமல்ல, அதன் பார்வை 8,10,12 ஆகிய இடங்களிலும் பதியப் போகிறது. எனவே நான்காமிடத்தில் சஞ்சரிக்கும் குரு முட்டுக்கட்டைகளுக்கு மத்தியில் முன்னேற்றத்தைக் கொடுப்பார். கட்டுக்கடங்காத எதிர்ப்புகள் வந்தாலும் கடைசியில் வெற்றியை வழங்குவார். விட்டுக் கொடுத்துச் செல்வதும், விவேகத்தோடு நடந்துகொள்வதும், சிலரிடம் பட்டும்படாமல் பழகுவதும் தான் இந்தக் காலத்தில் உங்கள் முயற்சிக்கு அனுகூலம் தரும்.

உங்கள் சுய ஜாதகத்தில் குரு இருக்குமிடம், அதை பார்க்கும் கிரகம், சாரபலம் அனைத்தும் பார்த்து யோகபலம் பெற்ற நாளில் நீங்கள் பரிகாரங்களைச் செய்தால் வாய்ப்புகள் வாசல் தேடி வரும். வருமானமும் திருப்திகரமாக இருக்கும். ஆரோக்கியத் தொல்லை அகன்று ஆதாயத்தை அதிகரிக்க வைக்கும்.

அர்த்தாஷ்டம குருவாக வரும் பொழுது ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். 'கொடுத்த கடனை வாங்க முடியவில்லையே.




## 02.08.2016 முதல் 01.09.2017 வரை

வாங்கிய கடனைக் கொடுக்க முடியவில்லையே!' என்று கவலைகொள்வீர்கள். அடுத்தடுத்து விரயங்கள் வந்தால் யாரிடம் போய் உதவி கேட்பது என்ற சிந்தனை மேலோங்கும். கட்டடப்பணி பாதியிலேயே நிற்கலாம். கடல் தாண்டிச் சென்றவர்கள், அங்கு வேலை கிடைக்காமல் தடுமாறக் கூடும். பத்திரப் பதிவில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். வாங்கிய பூமியை விற்கும் சூழ்நிலை உருவாகும். எதிர்பார்த்த இலாபம் கிடைக்குமா? என்பது சந்தேகம்தான். தாய்வழிப் பிரச்சினையை வளரவிடாமல் பார்த்துக்கொள்வது நல்லது. தொழிலில் புதிய பங்குதாரர்களை சேர்த்துக் கொள்ளும் முயற்சியில் திடீர் மாற்றங்கள் உருவாகலாம். நல்ல மாற்றங்களாக அமைய வாரம் தோறும் குருவை வழிபடுவது நல்லது.

அர்த்தாஷ்டம குருவாக இருந்தாலும் அதன் பாதசார பலன் உங்களுக்கு நன்மை

## அர்த்தாஷ்டமத்தில் குரு! தேவை அவரது அருள்!

தரும் விதத்தில் அமையும் பொழுது, எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். பகை கிரகத்தின் பாதத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது எதிர்பார்ப்புகள் நிறைவேறுவதில் எண்ணற்ற தடைகள் ஏற்படும்.

**குதூகலம் தரும் குருவின் பார்வை!**

உங்கள் ராசிக்கு 4 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு, 8,10,12 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். எனவே அந்த இடங்களெல்லாம் புனிதமடைகின்றன. 'குரு பார்க்கக் கோடி நன்மை' என்பதால் அந்த மூன்று இடங்களுக்கும் உள்ள ஆதிபத்யங்கள் சிறப்பாக நடைபெறும் என்றே சொல்லலாம். குருவின் பார்வை ஒன்றுதான் குழப்பங்களை அகற்றி, குதூகலத்தை வரவழைத்துக் கொடுக்கும். வெற்றிகளை கொண்டு வந்து சேர்க்கும். நல்ல திருப்பங்களை உருவாக்கும். திருமணத்தை முடித்து வைக்கும். பொறுப்புகளும், பதவிகளும் அளிக்கும்.

குரு பார்வையால் 8 ஆம் இடம் புனிதமடைகிறது. எனவே ஆரோக்கியம் சீராகும். சென்ற ஆண்டில் தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை இந்த ஆண்டு ஈடுகட்டுவீர்கள். இடமாற்றம், ஊர் மாற்றத்திற்கான விண்ணப்பம் செய்தவர்கள், இதுவரை இருந்த தடை அகன்று நினைத்த ஊருக்கே மாறுதல் பெறுவர்.

பத்தாமிடத்தை குரு பார்ப்பதால் தொழில் ஸ்தானம் புனிதமடைகிறது. எனவே, வருமானம் அதிகரிக்கும். மூடிக்கிடந்த தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். தீட்டிய திட்டங்கள் வெற்றியாகும். புதிய ஒப்பந்தங்கள் அதிகரிக்கும். பொன்னான வாய்ப்புகளை எதிர்பார்த்திருந்த உள்ளங்களுக்கு, மனை வாங்கும் யோகம் வாய்க்கும்.


பன்னிரெண்டாம் இடத்தை குரு பார்ப்பதால் விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். வெற்றி கரமாக சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும். முக்கிய புள்ளிகள் இல்லம் தேடி வந்து சிக்கல்கள் தீர வழிவகுத்துக் கொடுப்பர். 12 ஆம் இடம் விரய ஸ்தானம் என்பதால் சுப விரயங்களைச் செய்வது பற்றி சிந்திப்பீர்கள். வெளிநாட்டு அழைப்பு வரலாம். ஆனால் பயன்படுத்திக்கொள்ள முடியுமா? என்பது சந்தேகம் தான்.

குரு, சூரிய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (2.8.2016 முதல் 19.9.2016 வரை): உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர். கடன் சுமை குறைய புதிய யுக்திகளைக் கையாளுவீர்கள். வழக்குகளில் திசை திருப்பம் ஏற்படும். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். பழைய கூட்டாளிகளை விலக்கி விட்டு, புதிய கூட்டாளிகளை இணைத்துக் கொள்ள முன்வருவீர்கள்.

குரு, சந்திர சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (20.9.2016 முதல் 24.11.2016 வரை): எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும். புண்ணிய காரியங்களுக்கு கொடுத்து உதவுவீர்கள். புதிய நண்பர்களின் ஒத்துழைப்போடு பொருளாதார நிலை உயரும். புகழ்மிக்கவர்கள் உங்களுக்கு உறுதுணையாக விளங்குவர். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். தகராறு செய்தவர்கள் தானே விலகுவர். தனவரவு திருப்திகரமாக இருக்கும்.

குரு, செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (25.11.2016 முதல் 21.2.2017 வரை மற்றும் 2.6.2017 முதல் 1.9.2017 வரை): எதிலும் விழிப்புணர்ச்சி தேவை. எதிர்பாராத விரயங்களைச் சந்திக்க நேரிடும். சொத்துக்கள் கையை விட்டுப் போகலாம். சொந்தங்களின் பகை உருவாகும்.

உத்தியோ கத்தில் நீண்ட தூரத்திற்கு மாறுதல் கிடைக்கும். சக ஊழியர்கள் ரகசியத்தைக் காப்பாற்றமாட்டார்கள். சலுகைகள் கிடைப்பதில் கூட தாமதம் ஏற்படும். அங்காரகனையும், குருவையும் வழிபடுவதன் மூலம் அல்லல்கள் தீரும். விரயங்கள் அதிகரிக்கும் நேரம் இது.



### அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!

குரு வக்ரம் பெறும் நேரத்தில் வளர்ச்சி கூடுதலாக இருக்கும். உங்கள் ராசிக்கு 7.10 ஆகிய இடங்களின் அதிபதியாக குரு விளங்குவதால், வாழ்க்கை துணையிடம் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். வருமானம் திருப்தியாக இருக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வு கிடைக்கலாம். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வக்ரம் பெறும் பொழுது, நன்மைகளையே அதிகம் வழங்கும். பிள்ளைகள் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இழப்புகளை ஈடு செய்ய புதிய யுக்திகளைக் கையாளுவீர்கள். எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை மட்டுமன்றி வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை எல்லாம் வாங்கி மகிழ்வீர்கள். குரு அதிசாரமாக செல்லும் பொழுது வீடு கட்டும் முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

### செல்வம் தரும் சிறப்பு வழிபாடு!

இராசிநாதன் புதன் என்பதால் புதன் கிழமை தோறும் பெருமாள் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. யோகபலம் பெற்ற நாளில் முருகப்பெருமானை வழிபட்டு வந்தால் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும்.

**ஜோதிடக் கலைமணி சிவல்புரி சிங்காரம்**

### மங்கையருக்கான மகத்தான பலன்கள்!

மிதுன ராசியில் பிறந்த பெண்களுக்கு பொருளாதாரப் பிரச்சினை அகலும். புதிய திருப்பங்கள் ஏற்படும். கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். அர்த்தாஷ்டம குரு ஆதிக்கத்தால் அடிக்கடி உடல் நிலை தொல்லை உருவாகலாம். மாற்று மருத்துவத்தால் உடல் நலத்தை சீராக்கிக் கொள்ளுங்கள். கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. அதுமட்டுமல்ல குடும்பத்தினர்களின் ஆலோசனைகளைக் கேட்டுச் செயற்பட்டால் பிரச்சினை ஏற்படாது. குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் உயரதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவர்.

(நாளை கடகம்)

## முக்கிய மின்னஞ்சல்களை வடகொரியா பார்க்கிறது

### தென் கொரியா குற்றச்சாட்டு

தங்கள் நாட்டின் அரசு ஆவணங்கள் தொடர்பான மின்னஞ்சல்களை வட கொரியா இரகசியமாக பார்க்கிறது என்று தென் கொரிய சட்டத்தரணிகள் குற்றம் சாட்டியுள்ளனர். தென் கொரியாவின் தலைநகரான சியோலை சேர்ந்த, உச்ச நீதிமன்ற சட்டத்தரணிகள் வட கொரியா அரசாங்கம் சைஃபர் க்ரைம் குற்றத்தில் ஈடுபடுவதாக குற்றம்சாட்டி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் வடகொரிய அரசாங்கத்தால் மறைமுகமாக இயக்கப்படும் ஒரு நிறுவனம் தென் கொரியாவின் பத்திரிக்கையாளர்கள், அரசு அலுவலர்களுக்கு அரசாங்கம் தகவல்களை அனுப்பும் மின்னஞ்சலின் கடவுச் சொல்லை கண்டறிந்து உளவுபார்த்து வருகிறது. ஏறக்குறைய 56 மின்னஞ்சல்களின் கடவுச் சொல்கள் வட கொரியாவால் களவாடப்பட்டுள்ளன.


மேலும் அதில் உள்ள தென் கொரிய அரசாங்கத்தின் இரகசிய தகவல்களை வட கொரியாவின் அரசாங்க தளங்களில் இயங்கும் முக்கிய நபர்களுக்கு அனுப்ப திட்டமிடப்பட்டிருந்ததாகவும் குற்றம் சுமத்தியுள்ளனர். இதுவரை தென் கொரிய அரசாங்கம் சார்ந்து எந்த ஒரு முக்கிய ஆவணங்களும் வெளியாகவில்லை எனவும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தென் கொரியாவை உளவு பார்ப்பதற்காகவே 6000 பேர் கொண்ட சைஃபர் படைக் குழுவை வடகொரியா நியமித்துள்ளது எனவும் தென்கொரியா குற்றம் சாட்டியுள்ளது. தென் கொரியாவின் இந்த குற்றச்சாட்டை வட கொரியா முற்றிலுமாக மறுத்துள்ளது. (இ-7-10)

# ஹொங்கொங் நகரை

(பீஜிங்)

**சீனாவை மிரட்டிவரும் சக்தி வாய்ந்த "நிடா" புயல் தன்னாட்சி உரிமம் கொண்ட ஹொங் கொங் நகரை மணிக்கு 150 கிலோ மீற்றர் வேகத்தில் தாக்கி பெருத்த சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.**





சீனாவை நோக்கி நகர்ந்துவரும் "நிடா" புயல் பலத்த மழையையும், வெள்ளப் பெருக்கையும் உண்டாக்கும் என நேற்று முன்தினம் அறிவித்திருந்த சீன வானிலை ஆய்வு மையம் எட்டாம் எண் கொண்ட எச்சரிக்கை விடுத்திருந்தது. இந்நிலையில், தன்னாட்சி உரிமம் கொண்ட ஹொங்கொங் நகரை மணிக்கு 100 கிலோமீற்றர் வேக

த்தில் தாக்கிய இந்தப் புயல் பெருத்த சேதத்தை

உள்ளூர் நேரப்படி நேற்று அதிகாலை 5.20

வெள்ளப் பெருக்கை ஏற்படுத்திய நிடா புயல

வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. பிரதான வீ

## ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு ஐ.எஸ். தீவிரவாதிகள் மிரட்டல்




ஐ.எஸ் அமைப்பு, தற்போது ரஷ்ய நாட்டிற்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. சுமார் 9 நிமிடங்கள் ஓடக்கூடிய அந்த வீடியோவில், ரஷ்ய ஜனாதிபதி புடின் அவர்களே சற்று கவனியுங்கள், நாங்கள் ரஷ்யாவுக்கு வருகிறோம். அங்கு உங்கள் வீட்டில்வைத்து உங்களை கொலை செய்யப் போகிறோம் என்று கூறுகின்றனர். இந்த வீடியோவுக்கு ஐ.எஸ் தீவிரவாதிகள் பொறுப்பேற்கவில்லை, ஆனால் இந்த வீடியோவானது இத்தீவிரவாதிகள் இதற்கு முன்னர் பயன்படுத்தி வந்த இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் எதற்காக, ரஷ்யாவை குறிவைத்துள்ளோம் என்பது குறித்து அவர்கள் விளக்கம் அளிக்கவில்லை, இதற்கு முன்னர், ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் தாக்குதல் நடத்தி வந்தனர்.

இதனால், பதில் தாக்குதல் நடத்துவோம் என ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு, அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு எச்சரிக்கை விடுத்தது குறிப்பிடத்தக்கது. இதற்கிடையில் திடீரென ரஷ்ய நாட்டிற்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (இ-7-10)

### உலகிலேயே அதிகம் கைதிகள் உள்ள

## பிலிப்பைன்ஸ் சிறையில் 3,800 பேர் அடைப்பு



பிலிப்பைன்ஸ் நாட்டில் உள்ள ஒரு சிறையில் உலகிலேயே அதிகமாக 3800 கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் தலைநகர் மணிலாவில் குயேஷான் புறநகர் பகுதி உள்ளது. அங்கு மத்திய சிறைச்சாலை உள்ளது. உலகிலேயே அதிக கைதிகள் அடைக்கப்பட்டுள்ள சிறை என அழைக்கப்படுகிறது.

இங்கு மொத்தம் 3800 கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். இது கடந்த 60 ஆண்டுகளுக்கு முன்பு 800 கைதிகளை அடைக்க மட்டுமே கட்டப்பட்டது. இது 4 அடுக்கு மாடிகளைக் கொண்டது.

தற்போது அங்கு நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு ஏராளமானவர்கள் அடைக்கப்படுகின்றனர். இங்குள்ள 130 கைதிகளுக்கு ஒன்று என்ற விகிதத்தில் கழிவறைகள் உள்ளன. இரவு நேரத்தில் கைதிகள் நிம்மதியாக தூங்க முடியாது. அவர்கள் சிறை வளாகத்துக்குள் உள்ள கூடைப்பந்து மைதானத்தில் உடைந்து குன்றும் குழியுமாக கிடக்கும் தரையில்தான் உறங்க வேண்டும். அதுவும் 'ஷிப்டு' முறையில்தான் தூங்க முடியும். இங்கு அடைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு தலா 1.10 டொலர் (ரூ.70) மதிப்புள்ள உணவு மற்றும் மருந்து வழங்கப்படுகிறது. எனவே கைதிகளின் கோரிக்கைக்கு இணங்க தற்போது சிறையில் சில புனரமைப்பு திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. (இ-7-10)

# சிரியாவில் உள்நாட்

## மூன்று லட்ச

## உணவின்றி



சிரியாவில் உள்நாட்டுப் போர் மீண்டும் தீவிரமடைந்துள்ளது. இதனால் சுமார் 3 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் உணவின்றி பரிதவித்து வருகின்றனர்.

சிரியாவில் மிதவாத எதிர்கட்சிகளுக்கு அமெரிக்காவும் ஜனாதிபதி ஆசாத்துக்கு ரஷ்யாவும் ஆதரவு அளித்து வருகின்றன. சிரியாவின் 2ஆவது பெரிய நகரான அலெப்போ, அல்கொய்தா ஆதரவு தீவிரவாதிகளின் வசம் இருந்தது. அந்த நகரை அண்மையில் ஜனாதிபதி ஆசாத் படைகள் கைப்பற்றின.

இந்தப் பின்னணியில் அல்கொய்தாவில் இருந்து ஒரு தரப்பினர் கடந்த வாரம் பிரிந்து ஜபாத் பத்தா அல்-ஷாம் என்ற பெயரில் புதிய அமைப்பை உருவாக்கினர். அந்த அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகள் கடந்த சில நாட்களாக அலெப்போ நகரை முற்றுகையிட்டு தீவிர தாக்குதல் நடத்தி வருகின்றனர். நகரின் கிழக்குப் பகுதியில் அவர்கள் வேகமாக முன்னேறி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்த நகரில் சுமார் 3 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் உணவு, மருந்துப் பொருட்கள் இன்றி தவித்து வருகின்றனர். நகரை சுற்றி தீவிரவாதிகள் முற்றுகையிட்டிருப்பதால் அலெப்போ நகருக்குள் உணவுப் பொருட்களை கொண்டு செல்ல முடியவில்லை என்று செஞ்சி

# ர சூறையாடிய 'நிடா'







த்த சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.
திகாலை 5.20 மணியளவில் பெருமழையுடன் ிய நிடா புயலால் அங்கு மக்களின் இயல்பு ு. பிரதான வீதிகள் மற்றும் கடை வீதிகள் வெறிச்சோடி காணப்படுகின்றன. வாகன போக்குவரத்து முடங்கியுள்ளது. ஹொங் கொங் நகரில் இருந்து சீனாவின் பிறபகுதிகளுக்கும், வெளிநாடுகளுக்கும் செல்லும் 150 விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. சுமார் 300 விமானங்களின் வருகை மற்றும் புறப்பாடு தாமதமாக நடைபெற்று வருகிறது. (இ-7-10)

## மலேசியாவில் புதிய பாதுகாப்புச் சட்டம்



மலேசியாவில், பிரதமர் நஜிப் ரஜாக்குக்கு பரந்துபட்ட புதிய அதிகாரங்களைத் தரும் பாதுகாப்பு சட்டம் ஒன்று அமுலுக்கு வந்துள்ளது. நாட்டில் எந்தப் பகுதியையும் பாதுகாப்புப் பிரதேசமாக அறிவிக்க நஜிப்புக்கு இந்தச் சட்டம் அதிகாரம் வழங்குகிறது.

அவ்வாறு அறிவிக்கப்பட்ட பகுதியில், பொலிஸார், மக்கள் வாழும் பகுதிகள் மீதும்; வாகனங்களிலும் கட்டடங்களிலும், நீதிமன்ற உத்தரவில்லாமல் தேடுதல் வேட்டை நடத்த முடியும். இந்த சட்டம் பயங்கரவாதத்தை முறியடிக்கத் தேவையானது என்று பிரதமர் நஜிப் ரஜாக் தெரிவித்தார். ஆனால் இந்த சட்டம் அரசின் எதிர்ப்பாளர்களை ஒடுக்கவே பயன்படுத்தப்படும் என்று பலர் அஞ்சுகின்றனர்.

பிரதமர் ரஜாக்கின் கட்டுப்பாட்டில் இருக்கும் மலேசிய அரசு நிதியம் ஒன்றின் மீது நடந்து வரும் சர்வதேச மோசடி விசாரணை ஒன்று காரணமாக , ரஜாக் அதிகரித்து வரும் அழுத்தத்துக்குள்ளாகியிருக்கும் நிலையில் இந்த சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (இ-7-10)

# ாட்டுப் போரால்

# சம் பேர்

# ி தவிப்பு



னர்.
கை
குள்
ண்டு
ஞ்சி

வை சங்கம் தெரிவித்துள்ளது.

இதனிடையே ரஷ்ய இராணுவ ஹெலிகொப்டர் உணவு, மருந்து ாருட்களுடன் நேற்று முன்தினம் லெப்போ நகருக்கு சென்றது. அந்த ஹெலிகொப்டரை தீவிரவாதிகள் சுட்டு வீழ்த்தினர். இதில் விமானி உட்பட 5 ரஷ்ய வீரர்கள் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# எல்லையில் அமைதியை நிலைநாட்ட இந்திய-சீனப் படையினர் சந்திப்பு

(லடாக்)

இந்தியா-சீனா படைகள் லடாக் எல்லைப் பகுதியில் சந்தித்து கொண்டனர். எல்லைப் பகுதியில் அமைதியை நிலைநாட்ட இருதரப்பினரும் உறுதி மேற்கொண்டனர்.

இந்தியா, சீனா ஆகிய இரு நாடுகளின் எல்லைப் பாதுகாப்பு படையினர் அவ்வப்போது எல்லைப் பகுதியில் சந்தித்து பேசுவதும் கூட்டுப்பயிற்சிகளை மேற்கொள்வதும் வழக்கம்.

இந்நிலையில் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் லடாக் எல்லைப் பகுதியில் இந்தியா, சீனா ஆகிய இருநாடுகளின்எல்லைப் பாதுகாப்பு படையினர் நேற்றுச் சந்தித்துப் பேசினர்.

இது குறித்து பாதுகாப்புச் துறைச் செய்தி தொடர்பாளர் கூறுகையில்,

இரு அரசாங்கங்களை சேர்ந்தவர்களும் இருதரப்பிலும் அமைதியை நிலைநாட்டும் பொருட்டு பரஸ்பர உணர்வை உருவாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான உடன்படிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டனர்.

சீன மக்கள் விடுதலை





இராணுவ தினத்தை முன்னிட்டு சடங்கு ரீதியான எல்லை பாதுகாப்பு படை வீரர்களின் சந்திப்பு கிழக்கு லடாக்கில் உள்ள சுசூல் பகுதியில் நடைபெற்றது. இந்திய இராணுவகுழுவினர் உயர்அதிகாரி நவ்நீட் குமார் தலைமையிலும், சீனக் குழுவினர் மூத்த கலோனல் பேன்ஜன்தலைமையிலும் பங்கேற்றனர் என அவர் தெரிவித்தார். (இ-7-10)

# ஹிலாரி ஒரு சாத்தான்; டிரம்ப் கடும் தாக்கு

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தில் ஹிலாரி கிளின்டனை சாத்தான் என டிரம்ப் கடுமையாகத் தாக்கி பேசியுள்ளார்.

எதிர்வரும் நவம்பர் 8 ஆம் திகதி நடைபெறும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளராக ஹிலாரி கிளின்டனும், குடியரசு கட்சி வேட்பாளராக டொனால்டு டிரம்பும் போட்டியிடுகின்றனர். அதிகாரபூர்வ வேட்பாளராக அறிவிக்கப்பட்டதும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் பிரசாரம் சூடு பிடித்தது.

ஹிலாரி கிளின்டனும், டொனால்டு டிரம்பும் தீவிரமாக பிரசாரம் செய்து வருகின்றனர். அவர்கள் ஒருவரை ஒருவர் கடுமையாக குற்றம் சாட்டி வருகின்றனர்.

இந்த நிலையில் டொனால்டு டிரம்ப் பென்சில்வேனியாவில் உள்ள ஒரு உயர் நிலைப்பள்ளியில் ஏற்பாடு செய்யப்பட்ட தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் நேற்று முன்தினம் பேசினார்.

அப்போது ஹிலாரி கிளின்டனை 'சாத்தான்' என வர்ணித்தார். வேட்பாளர் தேர்வில் ஹிலாரிக்கு எதிராக போட்டியிட்டு கடைசி நேரத்தில் விலகிய பெர்னி காண்டர்சையும் கடுமையாக சாடினார். ' சாத்தானுடன் அவர் உடன்படிக்கை செய்து கொண்டு போட்டியில் இருந்து விலகி அவருக்கு வழி விட்டார்' என்றார்.

இதற்கிடையே டிரம்ப்பின் பேச்சுகளுக்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. ஈராக் போரில் மரணம் அடைந்த முஸ்லிம் இராணுவ அதிகாரியின் பெற்றோர் குறித்த டிரம்ப் பேச்சுக்கு ஜனநாயக கட்சி குடியரசு கட்சியினர்கண்டனம் தெரிவித்துள்ளனர். குடியரசு கட்சியின் முன்னாள் வேட்பாளர் ஜான் மெக்கேனும் டிரம்புக்கு எதிரான கருத்துக்களை தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் பிரபல வர்த்தகரும், கோடீஸ்வரருமான வாரன் பப்பெட் டிரம்ப் மீது கடும் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார். டிரம்ப் தாக்கல் செய்த தனது வரிகணக்கை பொதுமக்களிடம் வெளியிட தயாரா? என கேள்வி எழுப்பியுள்ளார். (இ-7-10)


## அரசியலமைப்பு பிரேரணை

# ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரம் மற்றும் 13 ஆவது திருத்தம் போன்றவை மட்டில் முரண்படும் தரப்புக்கள்

**ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரம் எனும் தலைப்பில் சண்டே லீடரில் வெளியான ஈஸ்வர ரட்ணம் எழுதிய அரசியல் கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரிக்கப்படுகிறது.**

அரசியலமைப்புக்கான திருத்தம் அல்லது புதிய அரசியலமைப்புக்கான பிரேரணை பற்றிய கலந்துரையாடல்களில் ஜனாதிபதி பதவிக்கான அதிகாரக் குறைப்புடன் கூடிய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை தொடரப்படவேண்டுமென்ற சில தரப்பு வலியுறுத்தல்களுடன் முரண்பாட்டு விரிசல்களும் ஆரம்பமாகிற்று.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிக்கப்போவதாகவே கடந்த வருட ஜனாதிபதி தேர்தலுக்கு முந்திய தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஜனாதிபதி மைத்திரிபால



சிறிசேன வாக்குறுதியளித்திருந்தார்.

எப்படியும் புதிய அரசியலமைப்புக்கான வரைபு ஒன்றினை மேற்கொள்வதா அல்லது நடைமுறையிலிருக்கும் அரசியலமைப்புக்கே திருத்தங்களை மேற்கொள்வதா? என்ற பேச்சுக்களில் ஈடுபட்டிருந்த அநேகமான அரசியல் கட்சிகள் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை தொடரப்படவேண்டுமென்ற தமது கருத்தினையே வலியுறுத்தினர்.

அரசியலமைப்பு வரைபு பற்றி கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருந்ததும் பாராளுமன்ற உறுப்பி னர்களை உள்ளடக்கியதுமான செயற்குழுவானது, இலங்கை சுதந்திரக் கட்சியே (SLFP) நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை தொடரப்பட வேண்டுமென்ற தரப்பு அழுத்தங்களுக்கு தலைமை தாங்குவதாக சண்டே லீடருக்கு கூறியது.

செயற்குழு உறுப்பினராக இருக்கும் அமைச்சர் மனோ கணேசனை சண்டே லீடர் தொடர்பு கொண்ட போது, இதுவரை நடைபெற்ற கலந்துரையாடல்களில் அதிகாரப் பகிர்வும் தேர்தல் சீர்திருத்தங்களுமே பேச்சிற்கான மையப்பொருட்களாக இருந்ததாக அவர் கூறினார். செயற்குழுவும் ஆறு உப குழுக்களும் ஒவ்வொரு நாளும் ஒழுங்காகக் கூடி மேற்படி பேச்சிற்கான மையப் விடயங்கள் மட்டில் விரிவான கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறி னார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை தொடரப்பட வேண்டுமென்பதற்கே கடுமையான அழுத்தங்கள் இருப்பது பற்றி உறுதிப்படுத்திய அமைச்சர் இந்நிலைப்பாட்டிற்கு சிறுபான்மைக் கட்சியினர்களது குறிப்பிடத்தக்க ஆதரவும் இருப்பதாக தெரிகிறது எனவும் கூறியிருந்தார்.

காலமாகிய வண.சோபித தேரர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு அறைகூவல் விடுத்து ஆரம்பித்த முன்னைய பிரசார இயக்கத்திற்கு சிறுபான்மைக் கட்சிகள் ஏற்கனவே ஆதரவு அளித்திருந்ததுடன் அவரது அழைப்பிற்கான இந்த விடயமே பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் சேர்த்துக்கொள்ளப்பட்டு உள்ளூர் சிவில் சமூக மற்றும் ஏனைய பல அமைப்புக்களதும் பரந்த ஆதரவினையும் பெற்றிருந்தது.

எப்படியும் முக்கியமான பெரிய கட்சிகள் இப்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையையே தொடர்வதற்கு விரும்புகின்ற படியால் தாம் 2015 ஜனவரி 8 ஆம் திகதித் தேர்தலுக்கு முன்னர் ஓர் அன்பளிப்புப் போன்று வழங்கியிருந்த அந்த பழைய ஆதரவு தற்போது பொருட்படுத்தத்தக்க ஒரு விடயமாக இருக்கப்போவதில்லை என்ற எண்ணமே அவர்களுக்கு ஏற்பட்டிருக்கலாம் என்பதே அது பற்றிய அமைச்சர் கணேசனது கருத்தாகும்.

அதேநேரம் புதிய அல்லது திருத்தப்படவிருக்கும் அரசியலமைப்பின் ஒரு பகுதியாகவும் இருக்கப்போகும் உத்தேச தேர்தல் சீர்திருத்தமும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது. தற்போது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான தொகையாக இருக்கும் 225 என்ற எண்ணிக்கை உத்தேச தேர்தல் சீர்திருத்தம் மூலம் 240 இற்கும் அதிகமாகும் சாத்தியமிருப்பதாகவும் அவர் கூறுகிறார்.

ஆரம்பத்திலிருந்த பழைய தேர்தல் முறையின் (FPTP- First Past -The post System) 60 வீதத்தையும் விகிதாசார பிரதித்துவ முறையின் (PR-Proportional- Representation System) 40 வீதத்தையும் உள்ளடக்கும் விதமான தேர்தல் சீர்திருத்த முறைக்கும் பரவலான ஆதரவு எட்டப்பட்டுள்ளது.

உத்தேச தேர்தல் சீர்திருத்தத்தில் பொதுமக்கள் தமது விருப்பத் தெரிவாக தமது வாக்கினை ஒரு கட்சிக்கும் அபேட்சகருக்கும் அளிக்கக் கூடியதாக ஒரு இரட்டை வாக்குப் பதிவுச் சீட்டு ஏற்பாடும் உள்ளடங்குகிறது. இந்த உத்தேச ஏற்பாட்டில் ஒரு வாக்காளர் தனது வாக்கினை அந்த இரட்டை வாக்குப் பதிவுச் சீட்டில் தான் விரும்பும் கட்சிக்கும் அதற்கான அடையாளச் சின்னத்தைக் கொண்டிராத வேறு ஓர் சின்னத்தைக் கொண்டுள்ள அபேட்சகருக்கும் அளிக்க முடியுமெனவும் அமைச்சர் கணேசன் விளக்குகிறார்.

புதிய அரசியலமைப்பு அல்லது அரசியலமைப்பு திருத்தங்களுக்



கான சட்ட வரைபுகளின்போது அநேகமாக, அதிகாரப் பகிர்வுக்கான பேச்சுக்களே கையாளப்படவிருக்கும் மிகக் கடினமான விடயமாக இருக்கும் எனலாம். அரசியலமைப்பில் மாகாண சபைகளுக்கான அதிகாரப் பகிர்வு விடயங்களை உள்ளடக்குகின்ற 13 ஆவது திருத்தச்சட்டம் மட்டில் தரப்புகளிடையே முரண்பாடுகள் உள்ளதாகவே கணேசன் கூறுகிறார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியில் (UPFA) உள்ள சில சக்திகள் சமஷ்டி முறையினை ஆதரிக்கும் அதேநேரம் அதனை எதிர்க்கும் ஏனைய சக்திகளும் அதற்குள் இருப்பதாக அவர் கூறுகிறார்.

**அரசியல் கட்சிகள் சில அரசியலமைப்பிற்கான 13 ஆவது திருத்தத்தினை அதனது தற்போதைய வடிவத்தில் விரும்பாத அதே நேரத்தில் சிறுபான்மைக் கட்சிகள் அதனை வரவேற்பதாக அவர் கூறுகிறார்.**

பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்ற அரசியலமைப்பு சபையின் ஒரு பகுதியாகவே அதனது செயற்குழு அமைந்துள்ளது.

பாராளுமன்றத்தின் சபாநாயகரே அரசியலமைப்புச் சபையின் தலைவராகவும் இருக்கிறார். அரசியலமைப்புச் சபைக்கு 7 உப தலைவர்களும் இருக்கிறார்கள்.

கலந்துரையாடல்களின் இறுதியில் அரசியலமைப்புச் சபைக்கு அதனது செயற்குழுவினால் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படும். அரசியலமைப்பிற்கான கருத்துக்களுடன் அதுமட்டிலான உத்தேசப் பிரேரணைகளும் அத்துடன் இணைக்கப்பட்டிருக்கும்.

சமர்ப்பிக்கப்படும் இந்த அறிக்கைகளுடன் அரசியலமை ப்பிற்கான புதிய கருத்துக்களின் அடிப்படையில் அதனாலாகும் நன் மைகள் தீமைகள் (பொருத் தமாயிருப்பின்) பற்றி விவாதத்திற்கெடுத்துக் கொள்ளும் அரசியலமைப்புச் சபை அவைமட்டில் பிரேரிக்கப்பட்ட திருத்தங்களையும் விவாதத்திற்கெடுத்து ஆராயும். இந்த விவாதங்களின் இறுதியில் சபையின் செயற்குழுவினால் இறுதி அறிக்கையுடன் அரசியலமைப்பிற்கான சட்ட வரைபும் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று சபைத் தலைவரால் கோரப்படும்.

விவாதங்களின்போது பிரேரிக்கப்பட்ட திருத்தங்கள், யோசனைகள் போன்றவற்றைக் கருத்திற்கொள்ளும் செயற்குழு அதனைத் தொடர்ந்து இறுதி அறிக்கை ஒன்றுடன் அரசியலமைப்புக்கான பிரேரணை ஒன்றுடன் கூடிய தீர்மானம் ஒன்றிணையும் அரசியலமைப்புச் சபையின் பார்வைக்கு சமர்ப்பிக்கும் இந்த இறுதி அறிக்கையுடன் அரசியலமைப்பு வரைபு கொண்ட பிரேரணைக்கான தீர்மானத்தையும் அரசியலமைப்புச் சபையின் அங்கீகாரத்திற்கென சபைத் தலைவர் முன்வைப்பார்.

அரசியலமைப்பிற்கான உத் தேச வரைபு மட்டிலான இத்தீர்மா னத்தினை 3 இல் 2 பெரும் பா ன்மை ஆதரவுடன சபை அங்கீக ரிக்குமானால் அறிக்கையுடன் கூடிய தீர்மானம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும். அதனைத் தொடர்ந்து அவையிரண்டும் பாராளு மன்றத்திலும் சமர்ப்பிக்கப்படும். உத்தேச அரசியலமைப்பு சீர்திருத்தங் களுக்கான மக்கள் கருத்துக்களை பெறுவதற்கென பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் அமைச்சரவை அங்கீகாரத்துடன் ஏற்கனவே நியமிக்கப்பட்ட 20 உறுப்பினர் கொண்ட மக்கள் பிரதிநிதித்துவக் குழுவின் (PRC) அறிக்கையினையும் அரசியலமைப்புச் சபையின் செயற்குழு அதேநேரம் நன்கு ஆராயும்.

**அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் மட்டிலான மக்கள் கருத்துக்களை வரவேற்பதற்கான தனது ஆரம்ப அமர்வுகளை கொழும்பில் 2016 ஜனவரியில் 5 நாட்கள் நடத்திய PRC மக்கள் குழு தனது ஏனைய மாவட்ட அமர்வுகளை பெப்ரவரியில் நடத்த ஆரம்பித்திருந்தது.**

மக்கள் கருத்துக்கான இந்தப் பிரசித்த அமர்வுகள் கம்பஹா, மாத்தளை, களுத்துறை, கண்டி, வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை போன்றவை உட்பட்ட பல பிரதேசங்களிலும் நடத்தப் பட்டன. புதிய அரசியலமைப்பிற்கான வரைபொன்று இதுவரை தயாரிக்கப்படவில்லையென்று அண்மையில் பிடிவாதமாகவே கூறியிருந்த அரசாங்கம் கலந்துரையாடல்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாகவே கூறுகிறது.

புதிதான உத்தேச அரசியலமைப்பொன்று தயாரிக்கப்பட்டு விட்டதான அண்மைய அறிக்கைகளை பிரதமரது அலுவலகம் நிராகரித்திருந்தது. புதிய அரசியலமைப்பிற்கான சரத்துக்கள் உள்ளடக்கப்பட்டு வருவதாக உரிமை பாராட்டி வெளிவரும் தகவல்களில் எதுவித உண்மையு மில்லை என பிரதமரது அலுவலக அறிக்கைகள் மேலும் கூறுகின்றன.

அரசியலமைப்பில் தற்போது இருந்து வரும் பௌத்தம் பற்றிய சரத்துக்கள் அகற்றப்படுவதாகவோ அல்லது திருத்தப்படப்போவ தாகவோ வெளிவரும் உண்மைச் செய்திகள்போன்றதகவல்களில்உண்மை எதுவுமில்லை என்று கூறும் அரசாங்கம் இலங்கையில் தற்போது நடந்து கொண்டிருக்கும் அரசி யலமைப்பு சீர்திருத்தங்களுக்கு ஆதரவ



ளிக்கும் படி வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த தமிழர்கள் ஊக்கப்படுத்தப்படுவதான செய்திகள் வெளிவருவதாகவும் கூறுகிறது.

பாராளுமன்ற பிரதிநிதியும் அரசியலமைப்புச்சபை உபகுழு உறுப்பினருமான டாக்டர் ஜயம்பதி விக்கிரமரட்ண லண்டனில் இருக்கும் தமிழ் இணையத்திற்கு அண்மையில் வழங்கியிருந்த செய்திக்குறிப்பில்,

புதிய அரசியலமைப்பினை வரையும் போது சகலரதும் அபிலாஷைகள், உரிமைகோரல்கள் போன்ற அனைத்தும் அதில் உள்ளட க்கப்படுவது முடியாத காரியம் என்பதுடன் அது முழுமையானதொரு எதிர்பார்ப்புக்கும் எதார்த்தத்திற்கும் அப்பாற்பட்டதுமேயாகும் என்றும் கூறியுள்ளார்.

தற்போது இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களூடாக இலங்கையின் மிகச்சிறந்தவித அரசியலமைப்பு உருவாக்கப்பட்ட தென்றாகிவிடாது என்பதால் இலங்கையின் தற்போதைய நிலைவரம்- எதார்த்தம்-சூழ்நிலைகளை சீர்தூக்கி ப்பார்த்து இலங்கைக்கு உண்மையில் மிகச்சிறந்த விதமானதொரு அரசியலமைப்பினை ஏற்படுத்திக் கொள்வதற்கான அழுத்தம்- வலியுறுத்தம்- நிர்ப்பந்தம் தொடர்ந்தும் இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

**(தமிழில் யோகர்)**

# இந்திய குடியுரிமை வழங்கக்கோரி ஈழத்தமிழ் அகதிகள் அமைதிப் பேரணி!

(கொழும்பு)

**தமக்கு இந்தியக் குடியுரிமை வழங்கக் கோரியும், நாடு திரும்ப விரும்புவோருக்கான தண்டப்பணத்தைக் குறைக்க வேண்டும் என்று கோரியும் சென்னையில் நேற்று முன்தினம் இலங்கை தமிழ் அகதிகள் அமைதிப் பேரணி ஒன்றை நடத்தியுள்ளனர்.**



சுமார் 600 இலங்கைத் தமிழ் அகதிகள் பங்கேற்றிருந்த இந்தப் பேரணியின் முடிவில், தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவொன்றை முதலமைச்சர் பணியகத்தில் கையளித்தனர்.

அந்த மனுவில், தமிழ்நாட்டில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என்றும், முகாம்களுக்கு வெளியே வசிக்கும் அகதிகள் நாடு திரும்பும் போது செலுத்த வேண்டிய தண்டப்பணத்தைக் குறைக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

இந்தப் பேரணியில் பங்கேற்ற ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் செயலர் ஞானராஜ். முகாம்களுக்கு வெளியில் உள்ள அகதிகள் நாடு திரும்பும் போது. இந்தியாவில் தங்கியிருந்த காலம் தொடக்கம் ஆண்டு ஒன்றுக்கு 3600 ரூபாவைத் தண்டப் பணமாகவும். நுழைவிசைவுக் கட்டணமாக 13.500 ரூபாவையும் செலுத்த வேண்டியுள்ளது. நீண்டகாலமாக இந்தியாவில் தங்கியுள்ளவர்கள் இதற்காக இலட்சக்கணக்கான ரூபாவைச் செலுத்த வேண்டியிருக்கும்.

நாடு திரும்புவதற்கு விரும்பும் பலர், தண்டப்பணம் செலுத்த வசதியில்லாததால், தமிழ்நாட்டிலேயே தங்கியிருக்கின்றனர்" என்று கவலை வெளியிட்டார். (இ-7-10)

# இலங்கையில் ஐ.எஸ். பயங்கரவாதி; இந்திய உளவுத்துறை எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் ஐ.எஸ் . பயங்கரவாதி ஒருவர் செயற்படுவதாக இந்திய உளவுத்துறையை மேற்கோள் காட்டி கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தென்னிந்திய நகரான திருப்பூரில் வைத்து மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் அண்மையில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மஜ்னு என்ற பெயரைக் கொண்ட குறித்த நபருக்கும் ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கும் இடையில் தொடர்பு இருக்கலாம் என்ற அடிப்படையில் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் விசாரணைகள் பூர்த்தி அடைய முன்பதாகவே குறித்த நபரை ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பின் முக்கிய நபர் என குறிப்பிட்டு கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன் குஹுஸ்ல்லாவனாய் என்ற பெயரைக் கொண்ட இலங்கையர் ஒருவரும் குறித்த மஜ்னு என்பவருடன் தொடர்பில் இருப்பதாகவும் குஹுஸ்ல்லாவனாயும் ஐ.எஸ் பயங்கரவாதிகளில் ஒருவர் எனவும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை. கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை தமிழக பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன், குறித்த சந்தேகநபரின் இலங்கைத் தொட ர்புகள் குறித்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7-10)

# சீனாவுக்கு 55 சதுர கி.மீ. நிலத்தை வழங்குவதற்கு இலங்கை இணக்கம்

சிறப்பு பொருளாதார வலயத்தை உருவாக்குவதற்கு. சீனாவுக்கு 55 சதுர கி.மீ நிலப்பகுதியை இலங்கை வழங்கவுள்ளதாக பீஜிங்கில் உள்ள இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளதாக சைனா டெய்லி நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

அம்பாந்தோட்டையில் சிறப்புப் பொருளாதார வலயத்தை உருவாக்குவதற்குச் சீனர் கள் 55 சதுர கி.மீ காணிகளை கோரியுள்ளனர். அதற்கான நிலங்களைப் பெற்றுக் கொடுக்கும் செயல்முறைகளை ஆரம்பித்திருப்பதாக. இலங்கை அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்துள் ளதையும். இலங்கை தூதரகம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதேவேளை. சிறப்புப் பொருளாதார வலயம் எங்கு அமையவுள்ளது என்று இன்னமும் முடிவு செய்யப்படவில்லை என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இதனிடையே. சிறப்புப் பொருளாதார வலயத்தை அமைப்பது தொடர்பாக பேச்சுக்களை நடத்துவதற்காக சீன அதிகாரிகள் குழுவொன்று அடுத்தவாரம் கொழும்பு செல்லவுள்ளதாகவும். சைனா டெய்லி மேலும் தெரிவித்துள்ளது. (இ-7-10)

# ஒரே சீனா கொள்கையைத்தான் பௌத்தர்கள் ஆதரிக்கின்றனர்

## அஸ்கிரிய பீடாதிபதி தெரிவிப்பு

இலங்கை பௌத்தர்கள் ஒரே சீனா என்ற கொள்கையையே ஆதரிக்கின்றனர் என்று அஸ்கிரிய பீடாதிபதி வண. வரகாகொட ஞானரதன தேரர் தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம், கொழும்பில் உள்ள சீனத் தூதுவர் ஜி ஷியான்லியாங். அஸ்கிரிய பீடாதிபதியைச் சந்தித்த போதே. ஒரே சீனா என்ற கொள்கையில் உறுதிப்பாட்டில் இருப்பதாக அவர் குறிப்பிட்டதாக. சீனத் தூதரக பேச்சாளர் ஷாங் நய்கி கூறினார்.

மதம் என்ற போர்வையில் சீனாவைப் பிளவுபடுத்த எந்த சக்திகளையும் மகா சங்கம் அனுமதிக்காது என்றும் அஸ்கிரிய பீடாதிபதி வாக்குறுதி அளித்துள்ளார்.

அதேவேளை. பொருத்தமான தருணம் ஒன்றில். சீனாவுக்குப் பயணம் செய்யுமாறு. அஸ்கிரிய பீடாதிபதிக்கு சீனத் தூதுவர் அழைப்பு விடுத்துள்ளார். (இ-7-10)

# இன்று ஒரு தகவல்

## பிரதிபலிப்பது உண்டா?

உங்களைத் தேடி வேண்டியவர்கள் யாரோ வந்தார்கள், அல்லது போன் செய்தார்கள். நீங்கள் வீட்டில் இல்லை. வெளியே ஒரு வேலையாய்ப் போயிருந்தீர்கள். வீட்டில் இருந்தவர்கள் நீங்கள் வெளியே போயிருப்பதாகச் சொல்லித் திருப்பி அனுப்பி விட்டார்கள். நீங்கள் நுழைந்ததும் இன்னார் வந்தார்கள் என்கிறார்கள். எதற்காக அவர் வந்திருப்பார் என்று ஒரு கணம் யோசிக்கிறீர்கள். இதற்காகத் தான் வந்திருப்பார் என ஊகிக்கிறீர்கள் அல்லது காரணம் புரியவில்லை.

முதல்கட்டமாக, அவராக மீண்டும் வரட்டும் அல்லது போன் செய்யட்டும் என விட்டுவிடுவீர்களா? அல்லது அவரைத் தேடிப் போவீர்களா அல்லது போனில் பேசுவீர்களா?

தேடிப்போவேன்; பேசுவேன், தொலை தூரம் என்றால் என்ன ஏது என்று கேட்டுக் கடிதம் போடுவேன் என்பது பதிலாக இருந்தால் அது தான் உயரும் வழி; பலரும் விரும்பும் முறை. எல்லாவற்றிற்கும் மேலாக உயரிய பண்பும் மனிதத் தன்மையும் கூட.

அவனுக்கு/அவளுக்குக் காரியம் என்றால் மீண்டும் வரட்டுமே! நாம் ஏன் தேடிப்போய் வலையில் சிக்க வேண்டும் என்பது எடுபடாத வாதம்.

நாமே தேடிப் போகும் போது நம் பக்கம் பலம் அதிகம். அப்படியே அவர்கள் உதவி கேட்டாலும் மறுக்க நேர்ந்தால் அவ்வளவு தவறாகத் தெரியாது. காரணம், உதவ எண்ணம் இருந்தும் இயலாத சூழ்நிலை போலும் என்பதாக அவர்கள் நம்புவார்கள்.

நாம் கிணற்றில் எறிந்த கல்லாக இருந்து விட்டு மீண்டும் அவர்களைத் தேடி வரும் போது மறுக்க நேர்ந்தால், இவருக்கு உதவும் எண்ணம் கொஞ்சம் கூட இல்லை என்பதாக எண்ணுவார்கள்.

இங்கே ஒரு மனோதத்துவமும் உண்டு. உதவி மறுப்பை அவர்கள் வீட்டிற்குப் போய் அல்லது நாமாகப் போன் செய்து சொன்னால் அது அவர்களை– குறிப்பாக –நல்லுறவைப் பாதிப்பதில்லை. ஆனால், நம் சூழ்நிலையில் அல்லது அவர்கள் போன் செய்யும் போது நாம் மறுத்தால் அது அவர்களை வெகுவாகப் பாதிக்கும்.

ஒருவேளை, தேடிவந்தவர்கள் நமக்குச் சாதகம் செய்ய வந்திருந்து, நாம் பிரதிபலிக்காவிட்டால் நாம் தான் நல்ல வாய்ப்புகளை இழந்தவர்கள் ஆகிறோம்.

தேடி வந்தீர்களாமே, என்ன விடயம்? போன் செய்தீர்களாமே என்ன விடயம்? என்று நாம் கேட்க ஆரம்பித்துவிட்டால் நம் வட்டத்தில் நாம் இத்தகையதொரு நல்ல பழக்கத்தை விதைத்தவர்களாவோம்.

மற்றவர்கள் விடயத்தில் அவர்கள் வேறு விதமாக நடந்து கொண்டாலும், நம் விடயத்தில் அவர்கள் வித்தியாசமாக நடந்து கொள்வார்கள்.

எனக்குத் தெரிந்து என் எண்ணற்ற நண்பர்களுள் இரண்டு பேரிடம் மட்டுமே இந்தப் பண்பு இருக்கிறது. இத்தகைய பண்பு உள்ளவர்கள் அனைவரின் அன்புக்கும் பாத்திரமானவர்கள் என்பதற்காகவே இதைக் குறிப்பிடுகிறேன்.

அப்படிச் செய்வதைவிட்டுவிட்டு மீண்டும் அவர்களைத் தற்செயலாகச் சந்திக்கும் நேரத்தில் அவர்களாக நினைவூட்டும் நேரத்தில் ஆமாம் ஆமாம் சொன்னவர்கள் என்ன விடயம்? என்று கேட்பதைக் காட்டிலும் கண்ணியக் குறைவான செயல் வேறு இல்லை.

நாம் பிரதிபலிக்கும் பட்சத்தில்

நாம் மற்றவர்களை மதிக்கிறோம், அன்பு செலுத்துகிறோம் என்றெல்லாம் நம்மைப்பற்றி நல்ல அபிப்பிராயம் ஏற்படும் வாய்ப்புகள் உருவாகின்றன.

நம்மைப்பற்றி நல்லபிப்பிராயத்தை ஏற்படுத்த இதைவிட வேறு எளிய வழி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்

1485

# குயிலின் குரல் இரகசியம்!

(30ஆம் திகதி தொடர்ச்சி)

..."மன்னா! இதோ இந்த கொலைகாரன்!" என்று கூறினார். வேலு என்ன சொல்லியும் அரசன் அவனை நம்புவதாக இல்லை.

"என்னடா என்னை அத்தனை முட்டாள் என்று நினைத்துவிட்டாயா? எந்த கொலைகாரன் தான் நான்தான் கொலை செய்தேன் என்று ஒப்புக் கொள்வான்? சரி இவனைக் கொண்டு போய் சிறையில் தள்ளுங்கள்," என்று சொல்லிவிட, பாவம் ஒரு குற்றமும் செய்யாத அப்பாவி வேலு சிறையில் அடைக்கப்பட்டான்.

கையைக் கட்டிக் கொண்டு அந்த சின்ன இருட்டு அறை மூலையில் எத்தனை நேரம்தான் உட்கார்ந்திருப்பது? குப்பை நிறைந்திருந்த அந்த அறை மூலையில் கிடந்த மூங்கில் குச்சிகளைப் பொறுக்கி, மிகவும் பிரயாசையுடன் ஒரு புல்லாங்குழல் தயாரித்தான். அக்குழலின் நேர்த்தியான அமைப்பைக் கண்டு இவனுக்கே ஆச்சரியம் தாங்கவில்லை. தன் மனைவியை நினைத்துக் கொண்டு மிக சோகமாக இசை எழுப்பினான்.

"ஓ! என்ன இசை இது?' சிறைச்சாலையை சுற்றியிருந்த மரங்களிலும், மரப்பொந்துகளிலும் வசித்து வந்த பறவை இனங்களுக்கு ஒரே மகிழ்ச்சி. வேலு இசையெழுப்பும் போதெல்லாம், கூட்டமாக பறந்து வந்து அங்குமிங்குமாய் அமர்ந்து கொண்டு அந்த இசை வெள்ளத்தில் அப்படியே மூழ்கிவிடும்.

"அட இந்த புல்லாங்குழல் மட்டும் நம் கையில் இருந்தால், இவனை விட மிக அழகாக பாடலாமேஏ' என்று மனப்பால் குடித்தன. அத்தனை பறவை இனங்களும் மற்றும் சின்ன சின்ன மிருகங்களும். ஒருநாள் மிகவும் வஞ்சகமாக ஒரு காக்கை வேலுவை அணுகி, "சகோதரா! உன் கவலையும், ஏக்கமும் எனக்கு புரிகிறது. நீதான் உன் சோகங்களை எத்தனை அழகாக இந்த குழல் மூலம் வெளிப்படுத்துகிறாய். சரி உன்னை இங்கிருந்து தப்பிக்க வழி செய்து, உன் மனைவியிடம் சேர்த்துவிடுகிறேன். அதற்கு பதிலாக இந்த குழலை எனக்குக் கொடுத்து விடு!" என்று கெஞ்சியது.



வேலுவும் அதன் வார்த்தைகளை நம்பி தன் குழலை அதனிடம் கொடுக்க, அந்த நயவஞ்சக காக்கை, விடு ஜுட் காக்கையின் வருகைக்காக காந்திருந்து அலுத்துப்போனவன், மறுபடியும் ஒரு புல்லாங்குழல் தயாரித்து அதில் வாசிக்க ஆரம்பித்தான். அவனின் அந்த நெஞ்சை அள்ளும் இசையைக் கேட்க வழக்கம்போல் ஏக கூட்டம் என்று சொல்லத் தேவையில்லை அல்லவா?

மிகவும் பரிவோடு அவனை நெருங்கியது ஒரு முள்ளம்பன்றி. "தம்பி! உன்னைப் போன்ற தொரு இசைமேதையை இதுவரை யாருமே பார்த்ததில்லை. இதுபோன்ற இசையைக் கேட்டதும் இலலை. உன் நிலையைக கண்டு நான் வருந்துகிறேன். உன் மனைவி எங்கு இருக்கிறாள் என்று எனக்கு மிக நன்றாகத் தெரியும். நான் அவளை சந்தித்து விபரத்தை கூறி, தைரியப்படுத்திவிட்டு, நாளை காலை வந்து மிக சமத்காரமாக உன்னை இங்கிருந்து அழைத்துப் போய் அவளிடம் சேர்த்து விடுகிறேன். ஓகேயா?" என்றது.

வேலுவின் மகிழ்ச்சிக்குக் கேட்கவா வேண்டும்.

"சகோதரா! நான் உன்னை முழுமையாக நம்புகிறேன். நானும் என் மனைவியுமாக சேர்ந்து நீ என்ன பரிசு கேட்டாலும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்!" என்றான்.

"அட போடா தம்பி! பரிசு என்னடா பரிசு. நீயும், உன் மனைவியும் ஒன்று சேர்ந்துவிட்டால் அதுவே எனக்குப் போதும்!" என்று சொல்லி பாகாய் உருகிற்று.

"தம்பி! என்னை தப்பாய் புரிந்து கொள்ளாதே. நான் உன் மனைவியை சந்திக்க செல்லும் போது. வெறுங்கையுடன் சென்றால் அவள் என்னை நம்புவாளா? ஆகையால் நீதான் என்னை அனுப்பினாய் என்பதற்கு அடையாளமாக, அந்த புல்லாங்குழலை என்னிடம் கொடு. அதனை எடுத்துச் சென்று அவளிடம் காண்பித்தால் மட்டுமே அவள் என்னை நமபுவாள் அல்லவா?" என்றது. (தொடரும்...)

## 03 07.2016 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 435 - கொன்ஸ்டண்டினபோலின் ஆயர் நெஸ்டோரியஸ் (நெஸ்டோரியனிசத்தை ஆரம்பித்தவர்) பைசண்டைன் பேரரசன் இரண்டாம் தியோடோசியசினால் எகிப்துக்கு நாடுகடத்தப்பட்டார்.
- 1492 - கொலம்பஸ் ஸ்பெயினைவிட்டுப் புறப்பட்டார்.
- 1492 - ஸ்பெயினில் இருந்து யூதர்கள் கத்தோலிக்கர்களினால் வெளியேற்றப்பட்டனர்.
- 1645 - முப்பதாண்டுப் போர்: ஜெர்மனியில் ஆலர்ஹைம் என்ற இடத்தில் பிரெஞ்சுப் படைகள் புனித ரோமப் பேரரசுப் படைகளைத் தாக்கி வெற்றி பெற்றனர்.
- 1678 - அமெரிக்காவின் முதலாவது கப்பல், லெ கிரிஃபோன் ரொபேர்ட் லசால் என்பவரால் அமைக்கப்பட்டது.
- 1783 - ஜப்பானில் அசாமா மலை வெடித்ததில் 35,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1858 - இலங்கை தொடருந்து சேவையை ஆளுநர் சேர் ஹென்றி வோர்ட் ஆரம்பித்து வைத்தார்.
- 1860 - நியூசிலாந்தில் இரண்டாவது மாவோரி போர் ஆரம்பமானது.
- 1914 - முதலாம் உலகப் போர்: ஜெர்மனி பிரான்சுடன் போர் தொடுத்தது.
- 1916 - ஐரிய தேசியவாதி சேர் ரொஜர் கேஸ்மெண்ட் ஈஸ்டர் எழுச்சியில் அவரின் பங்களிப்புகளுக்காக லண்டனில் தூக்கிலிடப்பட்டார்.
- 1934 - அடொல்ஃப் ஹிட்லர் ஜெர்மனியின் பெரும் தலைவரானார்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: இத்தாலி பிரித்தானிய சோமாலிலாந்து மீது போர் தொடுத்தது.
- 1949 - தேசிய கூடைப்பந்து சங்கம் ஐக்கிய அமெரிக்காவில் அமைக்கப்பட்டது.
- 1960 - நைஜர் பிரான்சிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1975 - மொரோக்கோவில் விமானம் ஒன்று மலை ஒன்றுடன் மோதியதில் 188 பேர் கொல்லப்பட்டனர்.
- 1976 - காந்தி கிராமம் கிராமியப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டது.
- 1990 - காத்தான்குடித் தாக்குதல் 1990: கிழக்கிலங்கையில் காத்தான்குடியில் முஸ்லிம் பள்ளிவாசலில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு நிகழ்வில் பெண்கள், குழந்தைகள் உட்பட 103 பேர் கொல்லப்பட்டனர்.
- 2005 - மவுரித்தேனியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் அதிபர் மாவோயா ஊல்ட் தாயா பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.
- 2006 - திருகோணமலை தோப்பூர் அல் நூராப் பாடசாலையில் தங்கியிருந்த அப்பாவிப் பொதுமக்கள் 12 பேர் எறிகணை வீச்சில் கொல்லப்பட்டனர்.

### பிறப்புக்கள

- 1924 - லியொன் யூரிஸ், அமெரிக்க நாவலாசிரியர். (இ. 2003)
- 1957 - மணி சங்கர், இந்திய திரைப்பட இயக்குனர்.


### இறப்புகள்

- 1977 - மக்காரியோஸ், சைப்பிரசின் முதலாவது ஜனாதிபதி. (பி. 1913)
- 1993 - சுவாமி சின்மயானந்தா, வேதாந்த தத்துவ த்தைப் பரப்பிய இந்திய ஆன்மீகவாதி. (பி. 1916)
- 2008 - அலெக்சாண்டர் சோல்செனிட்சின், நோபல் பரிசு பெற்ற ரஷ்ய எழுத்தாளர். (பி. 1918)

### சிறப்பு நாள்

- நைஜர் - விடுதலை நாள். (1960)
- வெனிசுவேலா - கொடி நாள.

## அலெக்சாண்டர் சோல்செனிட்சின்



அலெக்சாண்டர் இசாயெவிச் சோல்செனிட்சின் (Aleksandr Solzheni tsyn> ரஷ்ய மொழி: டிசம்பர் 11, 1918 - ஆகஸ்ட் 3, 2008) ஒரு ரஷ்ய எழுத்தாளர் ஆவார். இவரின் எழுத்துகளில் கூலாக் என்ற சோவியத் தொழில் முகாம்களை பற்றி எழுதி உலகுக்கு இதை பற்றி தெரியவந்தது. இதனால் 1970இல் இலக்கியத்துக்காக நோபல் பரிசு வென்றுள்ளார். 1974இல் சோவியத் ஒன்றியம் இவ்ரை நாடு கடத்தியது. 1994 வரை இவர் மேற்கு ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, ஐக்கிய அமெரிக்கா ஆகிய மேற்குலக நாடுகளில் வசித்தார். பனிப்போர் முடிவில் இவர் தனது மனைவியுடன் நாடு திரும்பி மாஸ்கோவில் வசித்து வந்தார். ஆகஸ்ட் 3, 2008 இவர் இறந்தார்.

# ஜனாதிபதியால் பொலிஸாருக்கு அச்சுறுத்தல்கள் எதுவும் இல்லை

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

இன்று பொலிஸாருக்கு அமைச்சர்களாலோ, ஜனாதிபதி மற்றும் பிரதமராலோ எவ்வித அச்சுறுத்தல்களும் இல்லை என்று பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொஸகொடயில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் தற்போது தனக்கு அரசியல்வாதிகளால் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளதாக வெளிவரும் செய்திகளில் உண்மையில்லை என்றும், அது தொடர்பில் கவலையடைவதாகவும் கூறியுள்ளார். தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இவ்வாறு வெளிவரும் பொய்யான செய்திகளுக்காக தான் பழிவாங்கும் செயல்களுக்கு செல்லமாட்டேன் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றின் விருப்பின் பேரில் பொலிஸ்மா அதிபராக தெரிவான தனக்கு ஜனாதிபதியினதும், பிரதமரினதும் ஆசீர்வாதங்கள் எப்போதும் இருப்பதாகவும் பொலிஸ்மா அதிபர் .பூஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அத்துடன் கடந்த காலங்களில் பொலிஸார் நிழலாக செயற்பட்ட நிலை தற்போது இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)



# மென்பானப் போத்தல்களின் மூடியின் நிறங்களில் மாற்றம்

(கொழும்பு)

குளிர்பான போத்தல்களில் அடங்கியுள்ள சீனியின் அளவு தொடர்பில் மக்களை தெளிவுபடுத்துவதற்காக குளிர்பானப் போத்தல்களின் மூடியின் நிறங்கள் மாற்றப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய 100 மில்லி லீற்றர் போத்தலுக்கு 11 கிராமிற்கு அதிகமாக சீனி கலக்கப்பட்டிருக்குமாயின், குறித்த குடிபான போத்தல்களின் மூடிகள் சிவப்பு நிறத்திலும், 2கிராமிற்கும் 11 கிராமிற்கும் இடையிலான குளிர்பான போத்தல்களுக்கு மஞ்சள் நிற மூடியும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் 2 கிராமிற்கு குறைவான சீனி அடங்கியுள்ள குளிர்பான போத்தல்களுக்காக பச்சை நிற மூடியும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7-10)

# வெளிநாட்டு மதுபானங்களால் அரசுக்கு ரூ.600கோடி நட்டம்!

வெளிநாட்டு மதுபான வகைகள் சட்டவிரோதமான முறையில் தருவிக்கப்படுவதனால் 600 கோடி ரூபா வரி இழப்பு ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெருமளவில் வெளிநாட்டு மதுபான வகைகள் சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டு வருவதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனால் நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தக் கூடிய குறிப்பிட்டளவு நிதி இழக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலைமையை முழுமையாகக் கட்டுப்படுத்தும்நோக்கில் வெளிநாட்டிலிருந்து சட்டவிரோதமான முறையில் தருவிக்கப்படுவதை தடுக்க விசேட தடுப்புப் பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவின பணிப்புரைக்கு அமைய இந்த பிரிவு நிறுவப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு மதுபான வகைகள் தருவிக்கப்படுவது பற்றிய விபரங்கள் இருந்தால் அது குறித்து 011 248 4500, 011 248 4600, 011 248 4700 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அறிவிக்க முடியும் என நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

எதிர்வரும் காலங்களில் வெளிநாடுகளிலிருந்து சட்டவிரோதமான முறையில் மதுபான வகைகள் தருவிக்கப்படுவதனைத் தடுக்க விசேட கவனம் செலுத்தப்படும் என நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-7-10)

# அன்றைக்கும் இன்றைக்கும் பாரியளவு வேறுபாடுள்ளது

## ராஜித விளக்கம்

(கொழும்பு)

மகிந்தவினால் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட பாதயாத்திரைக்கும் இன்று முன்னெடுக்கப்பட்டுள்ள பாதயாத்திரைக்கும் பாரிய வேறுபாடுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

தானும் பல பாதயாத்திரைகளில் கலந்து கொண்டுள்ளதாகவும் ஆனால் அவற்றுடன் இதை ஒப்பிடும் போது இது கேளிக்கையாக உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் மகிந்தவின் அனறைய பாதயாத்திரை ஜனநாயகத்திற்காகவும், மக்களின் உரிமைகளுக்காகவும் அமைந்திருந்ததாகவும், இன்று பாதயாத்திரையில் மகிந்தவின் முன்னால் செல்பவர்கள் குற்றவாளிகளும், பாதாளக் குழுவினரும் என்று அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இன்று மகிந்தவின் அரசியல் வாழ்க்கையானது ஆரம்பித்த இடத்திற்கே வந்துள்ளதாகவும் சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மகிந்த அணியின் அரசிற்கு எதிராக ஆரம்பித்த பாதயாத்திரை நேற்று முன்தினம் கொழும்பில் நிறைவடைந்த போதே ராஜித மேறகண்டவாறு தெரிவித்திருந்தார். (இ-7-10)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 798

Search for people, places and things Nagendram Home


அச்சு




சசி




அருமை




Biology டீச்சர் சொல்றாங்க "செல்"னா உயிரணு...
Physic டீச்சர் சொல்றாங்க "செல்"னா பற்றரி...
Maths டீச்சர் சொல்றாங்க "செல்"னா விற்பனை
History டீச்சர் சொல்றாங்க "செல்"னா ஜெயில்...
Tamil டீச்சர் சொல்றாங்க "செல்"னா போ...ன்னு...
ஐந்து பாடத்திலையும் ஐந்து விதமாக சொல்றாங்க ஒன்றும் புரியவில்லை....

ராஜ்ஜீவன்




தர்சி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் வீடு முற்றாக எரிந்து சாம்பல்

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களுதாவளையில் நேற்று அதிகாலை 3.45 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் வீடு ஒன்று முற்றாக தீக்கிரையாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

களுதாவளை வன்னியார் வீதியில் அமைந்துள்ள செல்லையா ஜீவரத்தினம் என்பவரின் வீட்டில் எரிவாயு சிலிணடர் வெடித்ததில் வீடு எரிந்து முற்றாக சாம்பலாகியுள்ளது.

இந்நிலையில் இவ்விடயமறிந்த களுவாஞ்சிக்குடி பொலிஸார், ஸ்தலத்திற்கு விரைந்து உயிர்ச்சேதம் ஏற்படாமல் காப்பாற்றியதாக களுவாஞ்சிக்குடி பதில் பொலிஸ் பொறுப்பதிகாரி என்.ரி.அபூபக்கர் தெரிவித்தார்.

வீட்டிலுள்ள முக்கிய ஆவணங்கள், தொலைக்காட்சிப்பெட்டி, குளிரூட்டி உட்பட அனைத்தும் எரிந்து சாம்பலாகியுள்ளதாகவும் இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார், கிராம சேவை உத்தியோகத்தர் ஆகியோருக்கு அறிவித்துள்ளதாகவும் வீட்டு உரிமையாளர் செல்லையா ஜீவரத்தினம் தெரிவித்தார்.(இ-7-10)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-02.07.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 144.09 | 147.73 |
| பிரிட்டன் | பவுண்ட் | 189.27 | 195.69 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 159.90 | 165.97 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 147.83 | 153.77 |
| கனடா | டொலர் | 108.99 | 113.33 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 107.58 | 112.42 |
| சிங்கப்பூர் | டொலர் | 106.78 | 110.73 |
| இந்தியா | ரூபா | 2.1826 | ------- |
| சீனா | யுவான் | 21.9217 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 386.1950 |
| குவைத் | டினார் | 483.2560 |
| ஓமான் | ரியால் | 378.5665 |
| கட்டார் | ரியால் | 40.0236 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.8641 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.6836 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சுன்னாகம் ரூபா | சாவச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா | மருதனார் மடம் ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 100 | 100 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 110 | 90 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 350 | 400 | 400 | 400 | 400 |
| தக்காளி | 80 | 80 | 100 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 100 | 100 | 80 | 120 |
| கோவா | 120 | 120 | 140 | 120 | 140 |
| கரட் | 150 | 160 | 160 | 160 | 160 |
| பூசணி | 80 | 80 | 90 | 80 | 100 |
| புடோல் | 60 | 60 | 60 | 60 | 70 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 120 | 80 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 140 | 250 | 200 | 300 | 300 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 60 | 60 | 80 |
| கருணைக்கிழங்கு | 100 | 200 | 120 | — | 180 |
| பயற்றங்காய் | 120 | 200 | 100 | 100 | 300 |
| லீக்ஸ் | 140 | 120 | 120 | 120 | 150 |
| பீற்றூட் | 80 | 80 | 100, | 100 | 150 |
| கறிமிளகாய் | 300 | 300 | 200 | 120 | 200 |
| முருங்கைக்காய் | 150 | 100 | 200 | 120 | 300 |
| போஞ்சி | 200 | 200 | 150 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 100 | 80 | 100 |
| கீரை - 1பிடி | 40 | 40 | 40 | 30 | 30 |
| தேசிக்காய் | 100 | 140 | 120 | 150 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 20 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 160 | — | — | — | 160 |
| வெங்காயப்பூ | 120 | 120 | 100 | 140 | 150 |
| முள்ளங்கி | 40 | 80 | 50 | 60 | 50 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 40 | 30 | 25 |
| வல்லாரை | 15 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 50 | 50 | 60 | 60 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## கண்ணிவெடியில் பாராளுமன்ற உறுப்பினர் கே.சிவநேசன் பரிதாபமாக பலியானார் 242

முல்லைத்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது இராணுவம் பீரங்கியால் சுட்டது. கொழும்பு நகரில் உள்ள புகையிரத நிலையத்தில் பெண் மனித வெடிகுண்டு நடத்திய தாக்குதலில் 11 பேர் உடல் சிதறி பலியானார்கள்.

60ஆவது சுதந்திர தின விழா 04.02.2008 அன்று கொண்டாடப்பட இருந்தது. இந்த நிலையில் அங்குள்ள மாத்தளை மாவட்டம் தம்புள்ள என்ற இடத்தில் 02.02. 2008 அன்று ஒரு பேருந்தில் சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் 20 பேர் இறந்தனர். மேலும் சுமார் 70 பேர் காயம் அடைந்தனர்.

சுதந்திர தினத்துக்காகப் பலத்த பாதுகாப்பு செய்யப்பட்டிருக்கும் நிலையில் கொழும்பு நகரில் 03.02.2008 அன்று 2 இடங்களில் குண்டு வெடிப்பு சம்பவங்கள் நிகழ்ந்தன. இதில் ஒரு சம்பவம் பரபரப்பு மிகுந்த கொழும்புக் கோட்டை புகையிரத நிலையத்தில் நிகழ்ந்தது.

### பெண் மனித வெடிகுண்டு

இந்த புகையிரத நிலையத்தில் உள்ள 3 ஆவது நடை பாதையில் பிற்பகல் 2 .10 மணிக்கு ஒரு பயணிகள் புகையிரதம் வந்து நின்றது. அதில் இருந்து பயணிகள் இறங்கிச் சென்று கொண்டிருந்தனர். அப்போது அந்த புகையிரதத்தின் அருகே நடை பாதையில் பயங்கர சத்தத்துடன் குண்டு வெடித்தது.

புகையிரதத்தில் இருந்து இறங்கிய பெண் மனித வெடிகுண்டு ஒருவர் தனது உடலில் கட்டியிருந்த் குண்டை வெடிக்கச் செய்ததாகக் கூறப்பட்டது.குண்டு வெடித்த இடம் தீப்பிளம்பாக காட்சியளித்தது. குண்டு வெடித்ததும் பயணிகள் அங்கும் இங்குமாகச் சிதறி ஓடினார்கள்.

### 11பேர் பலி

இந்தக் குண்டு வெடிப்பில் 11 பேர் உடல் சிதறிப் பலியானார்கள். மேலும் பெண்கள்,குழந்தைகள் உட்பட சுமார் 100 பேர் காயம் அடைந்தனர். கொல்லப்பட்டவர்களின் உடல்கள் ஆங்காங்கே சிதறிக்கிடந்தன.

ஒரு பெண்ணின் உடல் வயிற்றுப்பகுதியில் இருந்து துண்டாக்கி கிடந்தது. எனவே அவள் தான் மனித வெடிகுண்டாக இருக்கலாம் என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### மிருகக்காட்சிச்சாலை

இந்தச் சம்பவம் நடப்பதற்கு சில மணிநேரத்துக்கு முன் மற்றொரு குண்டு வெடிப்பு சம்பவம் நடந்தது. கொழும்பு நகரின் தெற்கு புறநகர் பகுதியில் தெஹிவளை என்ற இடத்தில் தேசிய மிருகக்காட்சிச்சாலை உள்ளது. 03.02.2008 அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் வழக்கத்தை விட கூட்டம் அதிகமாக இருந்தது.

அந்த மிருகக்காட்சிச் சாலையிலுள்ள பறவைகள் காட்சியகத்துக்கருகே காலை 10.30 மணியளவில் சக்தி வாய்ந்த குண்டு வெடித்தது. இதனால் பார்வையாளர்கள் அச்சத்தில் சிதறி ஓடினார்கள். அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததாகச் சிலரும் கைகுண்டு வீசப்பட்டதாகச் சிலரும் தெரிவித்தனர்.

### 7 பேர் காயம்

இந்தக் குண்டு வெடிப்பில் 2 சிறுவர்கள், ஒரு கர்ப்பிணி பெண் உட்பட 7 பேர் காயம் அடைந்தனர். அவர்கள் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்தை தொடர்ந்து மிருகக்காட்சிச்சாலை தற்காலிகமாக மூடப்பட்டது.

கொழும்பு நகரில் ஒரே நாளில் 2 இடங்களில் நடந்த குண்டு வெடிப்பு சம்பவம் அங்கு பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியது.

### கண்ணி வெடிக்கு தமிழ் எம்.பி. பலி

இந்த நிலையில் வன்னிப் பகுதியில் 06.03.2008 அன்று நடந்த கண்ணிவெடி தாக்குதலில் தமிழ் எம்.பி.ஒருவர் பலியானார். அந்தச் சம்பவம் பற்றி விபரம் வருமாறு,

யாழ்ப்பாண மாவட்ட தமிழ் எம்.பி. கே.சிவநேசன் (வயது- 51) .இவர் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பில் பாராளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

05.03.2008 அன்று கொழும்பில் பாராளுமன்றத்தில்





அவசர விவாதம் நடைபெற்றது. அதில் சிவநேசன் கலந்து கொண்டார். பின்னர் கிளிநொச்சியில் மல்லாவியிலுள்ள தனது வீட்டுக்கு காரில் புறப்பட்டு சென்றார். காரை மகேஸ்வரராஜா (வயது-27) என்பவர் ஓட்டினார்.

கார் 06.03.2008 அன்று வன்னிப்பகுதியில் வடக்கு யாழ்ப்பாணத்தை நாட்டின் மற்றைய பகுதிகளுடன் இணைக்கும் ஏ-9 நெடுஞ்சாலையில் சென்றது. அப்போது மாங்குளம் அருகே சாலையில் புதைத்து வைக்கப்பட்டு இருந்த கண்ணி வெடியில் கார் சிக்கியது.

உடனே கண்ணிவெடி பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியது. அடுத்தடுத்து 4 கண்ணிவெடிகள் வெடித்தன. இதில் கார் தூக்கி எறியப்பட்டு சின்னாபின்னமாக நொறுங்கியது.

இந்தக் குண்டு வெடிப்பில் காரில் சென்ற சிவநேசன் எம்.பி.படுகாயம் அடைந்தார். அவரை மாங்குளம் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். ஆனால் வழியிலேயே அவரது உயிர் பிரிந்து விட்டது. இத்தாக்குதலில் சாரதி மகேஸ்வவரராஜா சம்பவ இடத்திலேயே பலியானார். பிற்பகல் 1.20 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

### இராணுவம்தான் காரணம்

இந்தச் சம்பவத்தை தமிழ் தேசிய கூட்டமைப்பின் மற்றொரு எம்.பியான மாவை சேனாதிராஜா உறுதி செய்தார். இந்தத் தாக்குதலுக்கு இராணுவம் தான் காரணம் என்று அவர் கூறினார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் செய்தித்தொடர்பாளர் ராசையா இளந்திரையன் கூறுகையில், இராணுவத்தின் ஊடுருவி தாக்கும் சிறப்புப் படையினர் தான் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர். சிவநேசனின் கார் குறிவைத்து தாக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

ஆனால் இக்குற்றச்சாட்டை இராணுவம் மறுத்தது. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிளிநொச்சி பகுதியில்தான் அந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

(தொடரும்)

# காணாமற்போனோர் அலுவலகம் இலங்கைக்குப் பொருத்தமற்றது

## தயான் ஜயதிலக கூறுகிறார்



(கொழும்பு)

**இலங்கை அரசாங்கம் உருவாக்க உத்தேசித்துள்ள காணாமற்போனோர் தொடர்பான அலுவலகம் இலங்கைக்கு பொருத்தமற்றது என்று ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் முன்னாள் நிரந்தர பிரதிநிதி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.**

இந்த அலுவலகம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமது விமர்சனத்தை வெளியிட்டிருந்த நிலையில் அதற்கு வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர தமது பதிலை வழங்கியிருந்தார்.

இந்தநிலையிலேயேதயான் ஜயதிலக தமது கருத்தை வெளியிட்டுள்ளார்.

இந்த பொறிமுறையானது முன்னர் லத்தீன் அமெரிக்க நாடுகளில் இராணுவ ஆட்சியின்கீழ் காணாமல் போனோர் தொடர்பிலேயே அமைக்கப்பட்டன.

இதன்போது இராணுவ அரசாங்கத்துக்கும் போராளிகளுக்கும் இடையில் வெளியாருடைய மத்தியஸ்தமும், ஏற்பாடுகளும் இருந்தன.

எனினும் இலங்கையை பொறுத்தவரையில் இது முற்றிலும் வித்தியாசப்படுகிறது.

இலங்கை மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் அந்த அரசாங்கத்தின்கீழ் சட்டபூர்வமான படையினர், தமது எல்லைக்குள் பயங்கரவாத எதிரிகளுடன் போரிட்டு வெற்றியை பெற்றனர்.

எனவே இதற்கு காணாமற்போனோர் அலுவலகம் அவசியமற்றது என்று தயான் ஜயதிலக தெரிவித்தார்.

ஆசியாவில் இவ்வாறான அலுவலகங்கள் இதுவரை அமைக்கப்படவில்லை.

ஆசியாவுக்கு அப்பால் உள்நாட்டு போர் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம், ஸ்பெயின், நேட்டோ நாடுகள் எவற்றிலும் இவ்வாறான அலுவலகங்கள் அமைக்கப்படவில்லை.

அதன் மூலம் விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை. ஏற்கனவே ஐக்கிய நாடுகளின் பொதுச்செயலாளர் பான் கீ மூன் மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் கூட்டாக வெளியிட்ட அறிக்கையின் படியே பரணகம ஆணைக்குழு நியமிக்கப்பட்டு காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

எனினும் புதிய காணாமற்போனோர் தொடர்பான அலுவலகம்அமைப்பது தொடர்பாக அமைச்சர் மங்கள சமரவீர தரும் விளக்கம் ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும் தயான் ஜயதிலக தெரிவித்தார்.

எனவே இலங்கையின் வெளியுறவு அமைச்சரும் பிரதமரும் பொதுமக்களுக்கு பொய்களை கூறுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

பான் கீ மூனுடன் மகிந்த ராஜபக்ஷ, சர்வதேச விசாரணைகளுக்கு முதலில் உடன்பட்டாலும் பின்னர் 2009ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் யோசனைக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்தது என்றும் தயான் ஜயதிலக சுட்டிக்காட்டியுள்ளார்.


மகிந்த அரசாங்கம், தாம் உறுதியளித்தபடி, கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் காணாமற் போனோர் தொடர்பான ஆணைக்குழு என்பவற்றை அமைத்தது.

எனினும் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்தாமையே அந்த அரசாங்கத்தின் குறைபாடாகும் என்றும் தயான் ஜயதிலக குற்றம் சுமத்தியுள்ளார். (இ-7-10)

# 12 ஆவது உலக இஸ்லாமிய பொருளாதார மாநாடு ஆரம்பம்







( கொழும்பு)

பொருளாதார வளர்ச்சியை பரவலாக்குதல் எதிர்கால வர்த்தகத்தை மேம்படுத்தல் எனும் தொனிப் பொருளில் 12 ஆவது உலக இஸ்லாமிய பொருளாதார மாநாடு நேற்று இந்தோனேசிய தலைநகர் ஜகார்த்தா மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகியது.

இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விட்டுடு தலைமையில் ஆரம்பமாகியுள்ள இம்மாநாட்டின் அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க,பாரியார் மைத்திரி விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர் கபீர் ஹாசீம், இராஜாங்க அமைச்சர்களான ஏ.எச்.எம். பௌசி, சுஜீவ சேனசிங்க ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.

அத்துடன் மலேசிய பிரதமர் நஜீப் துன் அப்துல் ரஸாக் இ தஜிகிஸ்தான் ஜனாதிபதி எமோமாலி ரஹ்மொன், கென்ய ஜனாதிபதி அல்பா கொண்கொண்டி, ஜோர்தானின் பிரதி பிரதமர், தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமாவின் பிரதிநிதியாக மெயிட் நகோனா மஸ்க பானி, கட்டார் நாட்டு ஜனாதிபதி ஷேக் தமீம் பின் ஹமாட் அல் தானியின் பிரதிநிதியாக ஷேக் அஹமட் பின் ஜாசீம் அல் தானி, நைஜீரியாவின் கைத்தொழில் மற்றும் வர்த்தக துறை அமைச்சர் அபு பக்கர், அல்ஜீரியாவின் கைத்தொழில் அமைச்சர் அப்டீ செலீம் புஜ்சோரிப், வியட்நாம் ஜனாதிபதி சார்பாக விசேட பிரதிநிதி டு தங்ஹாய், தாய்லாந்து பிரதமர் சார்பில் விசேட பிரதிநிதி விநிச்சய் சீம்சியாங் ,இஸ்லாமிய பொருளாதார மன்றத்தின் சார்பில் அஹமட் மொஹமட் அலி உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டுள்ளனர். (இ-7-10)

# செய்தித்துளிகள்

## எயிட்ஸ் நோய் அதிகரித்து வரும் நாடுகளின் வரிசையில் இலங்கை

எயிட்ஸ் நோய் அதிகரித்து வரும் நாடுகளின் வரிசையில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. தேசிய எயிட்ஸ் நோய் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் சிசிர லியனகே நேற்று முன்தினம் கொழும்பு ஊடகமொன்றுக்கு இந்த தகவல்களை வழங்கியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,எதிர்வரும் காலங்களில் எயிட்ஸ் நோய் அதிகரிக்கக்கூடிய நாடுகளின் வரிசையில் இலங்கையும் பட்டியலிடப்பட்டுள்ளது. (இ-7-10)

## புகையிரதம் மோதி இளைஞன் மரணம்

கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கி சென்ற புகையிரதத்தில் மோதுண்டு 22 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளார். இந்த விபத்து மட்டக்களப்பில் நேற்று அதிகாலை 4 மணியளவில் நடந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மட்டக் களப்பு-புன்ன சோலையை சேர்ந்த இளைஞனே குறித்த விபத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர் . (இ-7-10)

## பல இலட்சம் பெறுமதியான சிகரெட்டுக்கள் பறிமுதல்

சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட சிகரெட்டுக்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் பெறுமதி 15 இலட்சம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் டுபாயிலிருந்து பெண் ஒருவரால் குறித்த சிகரெட் தொகை கடத்தி வரப்பட்டுள்ளதாகவும் விமான நிலையத்தின் பிரதி சுங்கப் பணிப்பாளர் பராக்கிரம பஸ்நாயக்க தெரிவித்துள்ளார். (இ-7-10)

## பரீட்சை நிலையங்களில் டெங்கு நுளம்பு அதிகரிப்பு

உயர்தரப்பரீட்சைகள் நடைபெறும் அநேக மத்திய நிலையங்களில் டெங்கு நுளம்புகள் அதிகம் காணப்படுவதாக தேசிய டெங்கு ஒழிப்பு நிலையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் குறித்த பாடசாலைகளின் அதிபர்களும் கல்வி அமைச்சும் அதிகம் கவனம் செலுத்த வேண்டும் என வைத்தியர் பிரசீலா சமரவீர தெரிவித்துள்ளார்.

மேலும் டெங்குவின் தாக்கம் அதிகம் உள்ள மத்தியநிலையங்களுக்கு பரீட்சைகள் ஆரம்பிப்பதற்கு முன்பு புகை விசிறப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை பாடசாலைகளுக்கு புகை விசிறும் நடவடிக்கையானது பாடசாலைகள் 3ஆம் தவணைக்காக ஆரம்பிப்பதற்கு முதல் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## மாணவர்களில் 20 வீதமானோர் நீரிழிவு நோயினால் பாதிப்பு

பாடசாலை மாணவர்களில் 20 வீதமானவர்கள் நீரிழிவு நோய் காரணமாக பாதிக்கப்படுகின்றார்கள் என அண்மையில் இடம் பெற்ற புள்ளிவிபர ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கண்டியில் பாடசாலை மாணவர்களுக்காக ஏற்பாடு செய்திருந்த யோகா பயிற்சித்திட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் அதனை தெரிவித்துள்ளார். (இ-7-10)

## இலங்கையர் மின்சாரம் தாக்கி பலி



சவுதியில் பணிபுரிந்து வந்த இலங்கையைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் மின்சாரம் தாக்கி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இன்ஜிஸ்ரி தோட்டம் பீரட் பிரிவைச் சேர்ந்த 33 வயதுடைய 5 வயதுடைய பிள்ளையின் தந்தையான அகஸ்டின் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவரின் சடலத்தை இலங்கைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.(இ-7-10)

# இலங்கையில் நடந்த போர் குறித்து நுணுக்கமாக ஆய்வு செய்யும் அமெரிக்கா

(நேற்றைய தொடர்ச்சி)

இலங்கைக்குப் பயணம் செய்துள்ள அமெரிக்காவின் இராணுவ அதிகாரிகள் இங்கு நடைபெற்ற யுத்தத்தின் தோற்றப்பாடு, நோக்கங்கள் மற்றும் அவை சார்ந்த கருத்துக்களை அதில் சம்பந்தப்பட்ட தமிழ்ப் புலிகளைச் சேர்ந்தவர்கள், அரசாங்கத் தரப்பினர் மற்றும் சமூக வலைத்தளங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்வார்கள்.

அமெரிக்க இராணுவ வீரர்களின் இலங்கைக்கான பயணமானது இங்கு இடம் பெற்ற யுத்தத்திற்கான ஒரு சாளரமாக அமையும் அதுடன இது ஒரு கண்ணாடியாகவும் அமையும். போர் என்பது தனிப்பட்ட ரீதியாக மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து அனுபவங்களைப் பெறுமபோது மட்டுமே அதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியும். போரியலை முழுமையாகப் புரிந்து கொள்வதற்கு ஒருவர் போரில் ஏற்பட்ட உயிரிழப்புக்களை நேரில் பார்த்திருக்க வேண்டும். இதற்கு இரக்கம் மற்றும் அனுதாபம் ஆகிய இரண்டும் தேவைப்படுகின்றன.

சிரியாவில் இடம்பெற்ற அணமைய யுத்தமானது வெடிபொருட்களின் மணம், மரஙகளின் எரிந்த மணம், மனித உடல்களின் துரநாற்றம், குப்பைகளிலிருந்து எழுந்த துர்நாற்றம், அச்சம் எனப் பல்வேறு மணங்களையும் உணர்வுகளையும் கொண்டிருந்ததாக அமெரிக்காவைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஜனீன டீ கியோ வன்னி குறிப்பிட்டிருந்தார்.

இவர் பெற்றுக்கொண்ட பல்வேறு உணர்வுகள் மற்றும் அனுபவங்களை இலங்கையின் முன்னாள் யுத்தகளத்தைத் தரிசிக்கும் அமெரிக்க இராணுவக் கல்லூரியின் நவீன போர் நிறுவகத்தைச் சேரந்த இளநிலை இராணுவ வீரர்களும் பெற்றுக் கொள்வார்கள். ஏனெனில் இவர்கள் புதிய பல யுத்தகளங்களில் பணியாற்றியுள்ளனர் என்ற வகையில் இவ்வாறான பல வகையான உணர்வுகளை இலங்கையின் யுத்த களத்திலிருந்தும் இந்த வீரர்கள் பெற்றுக் கொள்வார்கள்.

இலங்கையில் நடந்து முடிந்த யுத்தத்தின் அனுபவங் களை அமெரிக்க வீரர்கள் நேரடியாகப் பார்வையிடும் போது, தற்போதும் கொழுந்து விட்டெரியும் யுத்த வடுக்கள் தொடர்பில் அவர்களது பார்வையை நாங்கள் சரிசெய்யத் தவறினால், எதிர்காலத்தில் இந்த வீரர்கள் தமது



யாழ். படைகளின் கட்டளைத் தலைமையகத்தில் நடந்த சந்திப்புககுப் பின்னர் அமெரிக்க அதிகாரிகள் எடுத்துக் கொண்ட படம்.

சொந்த வாழ்வில் இவ்வாறானதொரு நிலையை எதிர் கொள்ளுழ் போது அவர்கள் பாரியதொரு ஆபத்தைச் சந்திப்பதற்கான வழியை நாமாகவே உருவாக்கியுள்ளோம் என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

மனிதாபிமானம் என்பது இவர்கள் தமது உயிரைப் பணயம வைத்துப் போராடத் தூண்டுகிறது. இராணுவத் தொழில் என்பது இவர்களைத தியாகிகள் ஆககுகின்றது. இவ்வாறானதொரு உயர்ந்த விலையைக் கொடுக்கும இராணுவ வீரர்கள் போதியள வான கல்வி அறிவைப் பெற்றவர்களாக இருக்க வேண்டும். நல் வாய்ப்பாக, வெஸ்ற் பொயின்ற் பழைய, சிறந்த வழிமுறையை நினைவுபடுத்துகிறது.

1919இல் வெஸ்ற் பொயினற்றிலிருந்து வெளியேறிய இளநிலை இராணுவ வீரர்கள் முதலாம் உலக யுத்தத்தின் அனுபவங்களைக் கற்றிருந்தனர்.

இதேபோன்று 2019இல் வெஸ்ற் பொயின்ற்றிலிருந்து வெளியேறும் அமெரிக்காவின் இளநிலை இராணுவ வீரர்கள் இலங்கையில் இடம் பெற்ற உள்நாட்டு யுத்தத்திலிருந்து பாடங்களைக்கற்று வெளியேறுவாரகள்.

1919இல் அமெரிக்க இராணுவப் பயிற்சிக் கல்லூரியிலிருந்து வெளியேறிய வீரர்களுள் ஒருவரான ஜெனரல் அல்பேட் சி.விடே மயர், 'இரண்டாம் உலக யுத்ததின்' 'வெற்றித் திட்டம்' என்கின்ற நூலின் பிரதம ஆசிரியராகப் பணியாறறியிருந்தார். சீனாவில் இடம் பெற்ற ஜப்பானியர்களுக்கு எதிரான யுத்தத்திற்கு கட்டளை வழங்கும் தளபதியாக இவர் நியமிக்கப்பட்டிருந்தார். இவரது இடத்திற்கு நியமிக்கப்பட்ட டக்ளஸ் மக் ஆர்தர் எழுதிய வடயங்கள் இன்றும் அமெரிக்க இராணுவத்திற்கு நல்லதொருபயனை அளிக்கின்றது.

அதாவது 'தற்கால யுத்த முனைகளை நேரடியாகத் தரிசித்து அவற்றை ஆராய்வதன மூலம் எதிர்கால்த்தில் வேறு களமுனைகளில் வெற்றி என்கின்ற பழஙகளைப் பெற றுக்கொள்வதற்கான வித்துக்களாக இருக்கும்' என்பதே டக்ளஸ் மக்ஆர்தரின் கருத்தாகும்.

1919இல், அவர்கள் நவீன யுதத்தை ஆராய்ந்தார்கள், அதன்மூலோபாயத்தை, சமூகங்களை நுணுக்கமாக ஆராய்ந்தார்கள்.

இவர்கள் இதனைத் தன்னாரவத்துடன் ஆராய்ந்தனர். இதனால் அவர்கள் தேவைப்பட்ட வேளைகளில் இவற்றைப் பயனபடுத்தி யுத்தத்தை வெற்றி கொண்டார்கள். 2019இல் அமெரிக்க இராணுவக் கல்லூரியிலிருந்து வெளியேறும் வீரர்களும் இதனையே செய்வார்கள்.

(முற்றும்)

வழிமூலம்: War on the rocks
ஆங்கிலத்தில்: MLCAVANAUGH
மொழியாக்கம் : நித்தியபாரதி

# தமிழ் சினிமா வரலாறு

## 'எம்.ஜி.ஆர். என்னை நேசித்தார்! நான் அவரை நேசித்தேன்!' —சிவாஜி

222

எம்.ஜி.ஆருடன் இருந்த நட்பு பற்றி சிவாஜிகணேசன் தன் சுயசரிதையில் மனம் விட்டு கூறியுள்ளார். அவர் கூறியிருப்பதாவது,

**நெருங்கிய நண்பர்கள்**

சின்னப்பிள்ளையில் இருந்தே எம்.ஜி.ஆரும் நானும் நெருங்கிய நண்பர்கள். என் வீட்டிற்கு அவர் வருவதும் அவர் வீட்டிற்கு நான் செல்வதும் என் தாயார் கையால் அவர் சாப்பிடுவதும் அவர் தாயார் கையால் நான் சாப்பிடுவதும் சகஜம். ஒரு கதை மாதிரி எங்கள் நட்பின் வரலாற்றைச் சொல்கிறேன்.

இரண்டாம் உலகப்போர் முடிந்த சமயம் 1943-44இல் நான் செண்டிரல் ஸ்டேசன் பக்கத்தில் உள்ள ஒற்றைவாடை தியேட்டர் அருகில் தான் குடியேறியிருந்தேன்.

லட்சுமிநாதன் நாடகமெல்லாம் நடத்தினோமே அந்த நேரத்தில் எனது வீட்டுக்கு பக்கத்தில் தான் எம்.ஜி .ஆர், அவரது தாயார், சகோதரர் எம்.ஜி. சக்கரபாணி ஆகியோர் குடியிருந்தனர். அப்போது தான் அவர்கள் சினிமாவில் நடிக்க ஆரம்பித்தார்கள்.

நானும் என்னுடைய நண்பர் காகா ராதா கிருஸ்ணனும் அவர் வீட்டிற்கு அடிக்கடி செல்வோம். அநேகமாக சாப்பாட்டு நேரத்தில் அங்கேயே இருப்போம். எம். ஜி.ஆர். பசிக்கிறது என்றாலும் இருப்பா! கணேசன் வரட்டும் என்பார்கள். அவருடைய அம்மா அந்த அளவுக்கு அவர்களுக்கு என்மேல் பாசம்.

எம்.ஜி.ஆர். அவர்கள் இரவு நேரத்தில் என்னையும் ராதா கிருஸ்ணனையும் ரவுனுக்கு பக்கத்தில் உள்ள தியேட்டருக்கு சினிமா பார்க்க கூட்டிச் செல்வார். திரும்பி வரும்போது சப்பாத்தி, பால் போன்றவற்றை சாப்பிடுவோம். எல்லோருக்கும் அவர் தான் செலவு செய்தார். அதுபோல நீண்ட நாட்கள் இருந்தோம். பிறகு நான் காஞ்சிபுரம் சென்று அண்ணாவுடன் சேர்ந்து விட்டேன்.

**பிரிவு**

அண்ணாவின் ''சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்'' என்ற நாடகத்தில் முதலில் எம். ஜி. ஆர். நடிப்பதாக இருந்தது. அவர் என்ன காரணத்தினாலோ நடிக்கவில்லை. அண்ணா என்னை தேர்ந்தெடுத்தார் நான் நடித்தேன். மறுபடியும் எங்களுக்குள் பிரிவு ஏற்பட்டது.

சில வருடங்கள் கழித்து நான் சினிமாவில் சேரும் போது எம்.ஜி.ஆரை சந்தித்தேன்.

ஒரே காலகட்டங்களில் இருவரும் திரைப்படங்களில் நடித்துத் கொண்டிருந்தோம் .அதே சமயம் இருவரும் அரசியலிலும் ஈடுபட்டிருந்தோம்.



ஒரே உறையில் இரண்டு கத்திகள் இருக்க முடியுமா? நாங்கள் இருவரும் ஒரே இடத்தில் இருந்தால் இருவருக்கும் ஒரே ரசிகர்கள் தான் இருப்பார்கள். நாங்கள் இருவரும் தனித்தனியே செயற்பட்டதால் அவருக்கு வேறு ரசிகர்கள் எனக்கு வேறு ரசிகர்கள் இருந்தார்கள்.

என்னை அவர் விமர்சிப்பார். அவரை நான் விமர்சிப்பேன். அது அரசியல் பற்றித்தான் பேர்சனலாக ஒன்றுமில்லை. பலர் இதை வைத்துக்கொண்டு இருவரும் விரோதிகள் என பேசிக் கொண்டார்கள். அதைப் பற்றி நாங்கள் இருவரும் கவலைப் படவில்லை.

பல வருடங்கள் சென்ற பின் அவர் முதலமைச்சரானார். அவர் பதவியில் இருந்த போது பலமுறை நான் சந்தித்து இருக்கிறேன். அவரும் பல சம்பவங்களுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் வந்திருக்கிறார். அவர் கையால் அவார்டுகள் வாங்கியிருக்கிறேன். எனக்கும் அவருக்கும் உள்ள நட்பு என்றும் மாறவில்லை.

**தாயார் சிலை**

எனக்கு சென்னையில் ஒரு தோட்டம் இருக்கிறது. அதுவும் எம்.ஜி.ஆரின் தோட்டத்திற்கு பக்கத்திலேயே இருக்கிறது. என் தாயார் மறைந்த பிறகு அவர் தாயார் உருவச் சிலையைத் திறப்பதற்கு வர வேண்டுமென்று எம்.ஜி.ஆருக்கு சொல்லி அனுப்பினேன்.

(தொடரும்...)

சிறிய விடயத்தில் நியாயம் தவறுபவன் பெரிய விடயத்திலும் தொடருவான்.

— யேசுநாதர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கருத்தறியும் செயலணிகள் மாயமான்களாகுமா?

இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து எத்தனையோ பேச்சுவார்த்தைகள் இந்த நாட்டில் நடந்தாயிற்று.

தந்தை செல்வா – பண்டா ஒப்பந்தம் முதல் இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தைகள் வரை அனைத்தும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கானது.

இருந்தும் அவை எதுவும் இன்று வரை சாத்தியப்படாமல் போயிற்று. தமிழ் மக்களுக்கு எதையும் கொடுத்துவிடக் கூடாது என்ற மனநிலையில் இருக்கக் கூடிய சிங்கள ஆட்சியாளர்களால் இன்றுவரை இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியவில்லை.

இனப்பிரச்சினைக்கு தீர்வு தாருங்கள் என்றால் தமிழனை அழி என்று படைகளுக்கு உத்தரவு விடுவதும் காலத்திற்குக் காலம் பேரினவாதிகளை ஏவிவிட்டு தமிழ் மக்களை தாயகத்தில் அழிப்பதுமே நடந்து வருகிறது.

இதன் உச்சக்கட்டமாக தமிழின அழிப்பை கடந்த ஆட்சியாளர் செய்து முடித்தனர். அவர்கள் செய்த இன அழிப்பு சர்வதேச நாடுகளினதும் மனித உரிமை அமைப்புகளினதும். கவனத்தை ஈர்த்தபோது, ஜெனிவாவுக்கு பதிலளிக்க வேண்டிய கட்டாயம் இலங்கை அரசிற்கு ஏற்பட்டது.

ஒரு நாட்டிற்குள் வாழ கூடிய ஒரு இனத்தை துவம்சம் செய்துவிட்டு ஜெனிவாவில் பதிலளிப்பது சாத்தியம் இல்லை என்றவுடன் தமிழ் அரசியல் தலைமைக்கு பதவியைக்கொடுத்து நடந்தது நடந்தாயிற்று இனி நடப்பதைப் பார்ப்போம் என்பது போல சொல்லிவைக்க, தமிழ் மக்கள் நம்பியிருந்த தமிழ் அரசியல் தலைமை தன்னினத்திற்கு மகா கொடுமைத்தனத்தை செய்யும் வகையில், போர்க்குற்றம் குறித்த சர்வதேச விசாரணையை வலியுறுத்தாமல் பேசாமல் விட்டுவிட்டது. இந்த அபத்தம் நடந்தபோதும் தமிழ் மக்கள் தங்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு நீதி கிடைக்க வேண்டும்.

அந்த நீதி கிடைப்பதாக இருந்தால் சர்வதேச நீதிபதிகள் விசாரணையை நடத்தவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தபோது இவற்றை திசை திருப்பி ஜெனிவாவில் சமாளிப்பு நாடகத்தை அரங்கேற்ற மக்களின் கருத்தறியும் செயலணிகளை இலங்கை ஆட்சியாளர்கள் வடபுலத்திற்கு ஏவிவிட்டுள்ளனர்.

இவ்வாறு ஏவப்பட்ட மக்கள் கருத்தறியும் குழுக்கள் தமிழ் மக்கள் வழங்கிய கருத்துக்களை திரிபுபடுத்தி அறிக்கையாக சமர்ப்பித்தால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. இது அவர்களின் கடமைகளில் ஒன்றாகக் கூட இருக்கலாம்.

இது தவிர இத்தகைய செயலணிகளில் இடம் பெறுபவர்கள் ஒரு பக்க சார்புடையவர்களாக இருப்பதையும் காணமுடிகின்றது.

தமிழ் பெயர்கொண்டவர்கள் இச் செயலணிகளில் இடம்பெற்றிருந்தாலும் அவர்களிடம் தமிழ் பற்று உள்ளதா? அவர்களுக்கு தமிழ் பேசத் தெரியுமா? தமிழர்களின் நிலைமைதான் தெரியுமா? என்ற கேள்விகளும் எழுகின்றன.

எது எப்படியாயினும் காணாமல் போனவர்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்த ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டபோது தமிழ் உறவுகள் அழுது அழுது வழங்கிய சாட்சியங்கள் இந்த அரசுக்கு போதாது என்றால், வடக்கிற்கு வரும் செயலணிகள் மாயமான்களாகவே இருக்கும் என்பதை தமிழ் மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

அதாவது தமக்கு சார்பானவர்களிடமிருந்து எடுக்கும் தகவல்களை ஜெனிவா சமாளிப்புக்குப் பயன்படுத்தும் பொருட்டே செயலணிகள் அனுப்பிவைக்கப்படுகின்றன என்று தீர்மானிப்பதில் எந்தத் தவறும் இருப்பதாக தெரியவில்லை.

# யாழில் தேநீருக்குப் பதிலாக மது யுத்தத்திற்குப் பின்னர் இந்நிலை

## உதவி மதுவரி ஆணையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் யுத்தத்துக்கு பின்னரான காலப் பகுதியில் தான் தேநீர் அருந்தும் செயலாக மது அருந்துவதைப் பழக்கமாக கொண்டுளளார்கள் என வடமாகாண உதவி மதுவரி ஆணையாளர் என்.சோதிநாதன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் தலைமையில் "போதையிலிருந்து விடுதலையான நாடு" எனும் தொனிப்பொருளில் யாழ். மாவட்டத்தில் நடைபெறவுள்ள மாவட்ட நிகழ்வுக்கான முன்னேற்பாட்டு கலந்துரையாடல் நேற்றைய தினம் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தென்னிந்தியாவில் இருந்து கேரள கஞ்சா என்ற பொருள் இலங்கைக்கு விசேடமாக யாழ்.மாவட்டத்தின் ஊடாகத்தான் கடத்தப்படுகிறது. கடல் மார்க்கமாக கொண்டு வரப்படுகின்ற இப் போதைப்பொருள் இலங்கையின் ஏனைய பிரதேசங்களுக்கும் யாழ்.மாவட்டத்தின ஊடாக தான் கொண்டு செல்லப்படுகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் யாழ். மாவட்டத்தில் உள்ளவர்கள் கேரள கஞ்சாவை அதிகளவாக பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக தகவல் கிடைத்துள்ளன. அதை முறியடிப்பதற்கு விசேடமாக முப்படையின் உதவியை எதிர்பார்த்துள்ளோம்.

இவ்வாறாக கடத்தப்படும் போதைப்பொருளை விசேடமாக மாணவர்களுக்கு வழங்கும் நிலைமை அதிகரித்து வருகிறது. எனவே இதைத் தடுப்பதற்கு கிராமம் மற்றும் பிரதேச மட்டத்தில் தெளிவூட்டல் அவசியமாகிறது.

மதுவரி திணைக்களத்தின் ஊடாக மது ஒழிப்பு குழுக்கள் உருவாக்கி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தியுள்ளோம். அதில் சிறந்த முறையில் பாடசாலைகளில் மேற்கொண்டுள்ளோம். மேலும் மதுபானசாலைகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பாக பரிசீலிக்கும் வேலைத்திட்டங்கள மேற்கொண்டுள்ளோம்.

யுத்தத்திற்ப்பின்னரான காலப்பகுதியில் பியர் அருந்துவது அதிகரித்து காணப்படுகிறது. தேநீர் அருந்துவது போன்று செயலாகவே மதுவை பருகுகிறார்கள். சர்வ சாதாரணமாக அனைவரும் பயன்படுத்தக்கூடிய பானம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களும் அதை அருந்துவதில் ஆர்வம் காட்டி வருகின்றார்கள். இந்த நிலைமையை குறைக்க வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் கேரள கஞ்சா அதிகம் இருந்தாலும் ஹெரோயின், கசிப்பு போன்றன இங்கு குறைவடைந்த நிலையில் உள்ளன.

ஆனால் கள் உற்பத்தி பிரதானமாகவுள்ளது. வெளி இடத்தில் இருந்து வருபவர்கள் அதை அருந்துவதில் ஆர்வமாகவுள்ளனர். இதை மேற்பார்வை செய்வது கடினமாகவுள்ளது. அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள மதுபானசாலைகளை மேற்பார்வை செய்வது எமது கடமையாக உள்ளது. அதை சிறந்த முறையில் மேற்கொண்டு வருகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம் )

யாழ்ப்பாணம் சின்மயா மிஷனின் புதிய நிரந்தர அமைவிட அங்குரார்ப்பணமும் சுவாமி சின்மயானந்தரின் சமாதி தின நிகழ்வும் இன்று இடம்பெறும்.

சின்மயா மிஷன் யாழ்ப்பாணத்தில் 2011 ஆம் ஆண்டு தைத்திருநாள் அன்று ஆரம்பிக்கப்பட்டு இல 9,செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர் எனும் முகவரியில் தற்காலிக அமைவிடத்தில் இயங்கி வந்தது.

நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்பக்கமாக பருத்தித்துறை வீதியில் யாழ். மாநகரசபை அலுவலகத்திற்கு சற்று முன்பாக சின்மயா மிஷனுக்கென நிரந்தர அமைவிடம் கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்த புதிய நிரந்தர அமைவிடத்தின் அங்குரார்ப்பண நிகழ்வானது பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் பிறந்த நூற்றாண்டில், அவரது சமாதி தினமான (குருபூசைத்தினம்) இன்று 3ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணி முதல் 10 மணி வரை இடம் பெறவுள்ளது.

அத்துடன் குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் சமாதிதினம் இன்று மாலை 5.30 மணிக்கு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன், சின்மய ஞானவேல் ஆச்சிரமத்தில் (இல 9,செட்டித்தெரு ஒழுங்கை ,நல்லூர்) வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா தலைமையில் இடம்பெற உள்ளது.

இந்நிகழ்வில் குரு பாதுகா பூஜை, பஜனை, சத்சங்கம் என்பன இடம்பெற உள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## உயர்தரப் பரீட்சையின் மேற்பார்வையாளர் நேற்று பணி நீக்கம்

நடைபெற்றுவரும் 2016 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை மேற்பார்வையாளர் ஒருவர் பணிநீக்கப்பட்டுள்ளார். பரீட்சை நேரத்திற்கு ஒரு மணித்தியாலம் தாமதமாகி வந்தமையினாலேயே அவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் பிரதி ஆணையாளர் எஸ்.பிரணுவராஜா தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

களனி ஹேனேகம மத்திய மகா வித்தியாலயத் தில் பரீட்சை நிலைய இலக்கம் 340 இற்கு பொறுப்பாகவிருந்த மேற்பார்வையாளர் நேற்று காலையில் பணிநீக்கம் செய்யப்பட்டார். பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்கள் சகலரும் 8 மணிக்கு சேவைக்கு வரவேண்டும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்திருந்தது.

இவ்வாறான நிலையில் குறித்த மேற்பார்வையாளர் ஒரு மணி நேரம் கால தாமதமாகி வருகை தந்தது மட்டுமல்லமால் 9.30 பின்னரேயே பரீட்சைக்கான ஏற்பாடுகளை செய்துள்ளார். அதனால் மாணவர்களின் பரீட்சை நேரத்தை ஒரு மணித்தியாலம் நீடிக்க பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்தது.

அதேநேரம் மேற்பார்வை யாளரும் நிரந்தரமாக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். (இ-7-10)

## சர்வ களைநாசினியினை இறக்குமதி செய்ய தடை

(யாழ்ப்பாணம்)

கிளைபொசேற் காபோபியூரான் காபரில் மற்றும் குளோர் பைறிபொஸ் என்பனவற்றை செயற்படு பொருளாகக் கொண்ட கிருமி நாசினிகளை விற்பனைக்காக வைத்திருத்தல், விற்பனை செய்தல் என்பன ஏற்கனவே தடை செய்யப்பட்டுள்ள செயற்பாடுகளாகும். இதற்கு மேலதிகமாக பீடை கொல்லிகள் பதிவாளரின் கடிதத்தின் பிரகாரம் குளுபோசினெட் அமோனியம் இனை செயற்படுபொருளாகக் கொண்ட பஸ்டா குளுபோசினெட் அமோனியம் மற்றும் லைப்லைன் குளுபோசினெட் அமோனியம் எனும் வர்த்தகப் பெயர் கொண்ட சர்வ களைநாசினியை இந்நாட்டிற்கு இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல், விற்பனைக்காக வைத்திருத்தல் மற்றும் உபயோகித்தல்என்பன உடன் நடைமுறைக்கு வரும் விதத்தில் தடை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு புறோபனைல் இனை செயற்படுபொருளாகக் கொண்ட கொம்புறோ. 60EC. போர்டி 500 EC. பவரின்என்பன வரையறுக்கப்பட்ட அளவில் பாவிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதனையும் தெரியப்படுத்துகிறேன் என யாழ். மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி க.கைலேஸ்வரன் அறிவித்துள்ளார். (இ)

## ஆடிப்பூரத் திருவிழா

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பீடத்தின் ஆடிப் பூரத் திருவிழா நாளை 4 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு சக்திக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். ஆடிப்பூரத் திருவிழா மறு நாள் 5 ஆம் திகதி வெள்ளிக் கிழமை நடைபெறும். இதில் வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு அன்னைக்கு பாலாபிஷேகமும் முற்பகல் 10 மணிக்கு சிறப்பு அபிஷேகமும் யாகமும் முற்பகல் 11.30 மணிக்கு கஞ்சி வரவேற்பும் இடம்பெற்று தொடர்ந்து பூசையும் பிற்பகல் ஒரு மணிக்கு அன்னதானமும் இடம் பெறும். (இ-7)

## தொடர் சொற்பொழிவு

காரைநகர், களபூமி அருள்மிகு ஸ்ரீகாளியம்பாள் தேவஸ்தானத்தின் அலங்கார உற்சவப் பெருவிழா கடந்த 27ஆம் திகதி புதன்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. இதில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆடிப்பூரம் விழா மிகச் சிறப்பாக நடைபெறும்.

இவ் உற்சவ காலங்களில் தினமும் 7 மணி முதல் 8 மணி வரை வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் சைவ வாழ்வியல் சிந்தனைகள் என்ற விடயத்தில் 10 நாட்களும் தெய்வீகப் பேருரையும் இடம் பெற்று வருகின்றன. (இ)

## மஹா சங்காபிஷேகம்

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகி ஆலய, கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய ஆடிப்பூர மஹா சங்காபிஷேக விஞ்ஞாபனம் நாளை மறுதினம் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம் பெறும். இதில் காலை 7 மணிக்கு சங்குப் பூஜை , விசேட ஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனையைத் தொடர்ந்து காலை 9.30 மணியளவில் பிரதான கும்பங்கள் வீதியுலாவைத் தொடர்ந்து சங்காபிஷேகம் நடைபெற்று முற்பகல் 11.30 மணிக்கு பூர்வ கர்ம ருது சாந்தி வைபவம் நடைபெறும். இரவு 7 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் திருவூஞ்சல் உற்சவமும் நடைபெற்று அதனைத் தொடர்ந்து சுவாமி பூந்தண்டிகையில் வீதியுலா வருதலும் இடம் பெறும். (இ-7)

# கூட்டுறவு சங்கங்களுக்கிடையிலான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி



ஊர்காவற்றுறை சம்பியன்

யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபை வருடாந்தம் அங்கத்துவ சங்கங்களுக்கிடையில் நடத்திய கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் தெல்லிப்பழை பனை தென்னை வள கூட்டுறவுச்சபை சம்பியனாகியது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்ற மேற்படி போட்டியில் ஊர்காவற்றுறை பல நோக்கு கூட்டுறவு சபை அணியை 25:13,25:16 என வெற்றி கொண்டது. (க)

## கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் அணி வெற்றி


யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 200ஆவது ஆண்டு நிறைவையொட்டி யாழ்.மாவட்ட பாடசாலைகளின் பழைய மாணவர்கள் அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட 10 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் அணி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில், கடந்த வாரயிறுதியில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்து பழைய மாணவர் அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி 10 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் எஸ்.மயூரன் 13 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் கொக்குவில் பழைய மாணவர் அணி சார்பாக ரி.சத்தியன், எஸ்.சாம்பவன், ஆர்.ஜனுதாஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர். 80 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கொக்குவில் அணி, 9 ஓவர்களில் 3 விக்கெட்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. வி.உத்தமக்குமரன் 44 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்துவீச்சில் யாழ்ப்பாணக் கல்லூரி சார்பாக திலீபன் 2 விக்கெட்களைக் கைப்பற்றினார். ஆட்டநாயகனாகவும், சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் கொக்குவில் அணியின் உத்தமகுமரன், தொடர் நாயகனாக யாழ்ப்பாணக் கல்லூரி அணியின் சிறிதரன், சிறந்த பந்துவீச்சாளராக அதே அணியின் திலீபன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (க)

## கரப்பந்தாட்ட முடிபுகள்

அரியாலை திருமகள் சனசமூக நிலைய 64 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நல்லையா சதீஸ்குமார் ஞாபகார்த்த கரப்பந்தாட்டப் போட்டியில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் புத்தூர் கலைமதி பி அணி புத்தூர் சரஸ்வதி அணியை 2:1 எனவும் அச்சுவேலி தோப்பு வாலிபர் நீர்வேலி காமாட்சி அம்பாள் அணியை 2:1 எனவும் வெற்றி பெற்றன. (க)

## ஸ்ரீமுருகன் வி.கழக மென்பந்து சுற்றுத்தொடர்



சிவன் வெற்றி

மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்திவரும் மென்பந்து சுற்றுத் தொடரில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் சாவகச்சேரி சிவன் விளையாட்டுக்ககத்தை எதிர்த்து குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய சிவன் வி.க.5.4 பந்துப் பரிமாற்ற முடிவில் சகல இலக்குகளையும் இழந்து 49 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய விக்னேஸ்வரா வி.க. 2.4 பந்துப் பரிமாற்ற நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 06 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

சிவன் வி.க.சார்பில் துடுப்பாட்டத்தில் 09 ஓட்டங்களையும் பந்துவீச்சில் ஹற்றிக் உள்ளடங்கலாக 4 இலக்குகளையும் கைப்பற்றிய அபல் ஆட்ட நாயகனாக தெரிவானார். (க)

## இன்றைய போட்டிகள்

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 6.45 மணிக்கு நடைபெறும் போட்டியில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து திருக்குமரன் விளையாட்டுக்கழகமும்

இரவு 8 மணிக்கு நடைபெறும் போட்டியில் மன்னார் கில்லறி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உருத்திரபுரம் அணியும் மோதவுள்ளது.(க)

● ● ● ● ● ● ● ● ● ●

பொலிகண்டி பாரதி விளையாட்டுக்கழகம் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்ட போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நக்கீரன் விளையாட்டுக்கழகமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் ஆதிசக்தி B அணியை எதிர்த்து நவாலி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகமும்மோதவுள்ளது.(க)

## மாவட்ட ரீதியிலான ஹொக்கிப் போட்டி யாழ்ப்பாண கல்லூரி அணி சம்பியன்




(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தப்பட்ட ஹொக்கி சுற்றுப்போட்டியில் வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் அணி சம்பியனாகியுள்ளது.

இச்சுற்றுப் போட்டியின் இறுதி நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி அணி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணிகள் மோதின.

இதன்போது இப்போட்டியில் இவ்விரு அணியினரும் தலா 3 கோல்களை பெற்று சமநிலையில் இருந்தனர்.

தொடர்ந்து வெற்றி வாய்ப்பினைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட மேலதிக பனால்டி உதைகளை பயன்படுத்தி வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி அணி 5:3 என்ற கோல்களை செலுத்தி தெல்லிப்பழை யூனியன் கல்லூரியை தோற்கடித்து சம்பியனாகியது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மீள்குடியேற்ற இந்து சமய அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் கலந்து கொண்டு வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களை வழங்கி வைத்தார். (க)

## வடமாகாண உதைபந்து; மன்னார் அணி சம்பியன்



வடமாகாண உதைபந்தாட்ட இறுதியாட்டத்தில் அண்மையில் புதுக்குடியிருப்பு ம.வி. மைதானத்தில் யாழ். மாவட்ட அணி மற்றும் மன்னார் மாவட்ட அணிகள் மோதின.

ஆட்ட நேர முடிவில் மன்னார் மாவட்ட அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று வடமாகாண சம்பியனானது. மன்னார் அணி சார்பில் ரஞ்சன் ஒரு கோலினை தனது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தார். (க)

## 1983களில் இடம்பெயர்ந்த
# கல்நாட்டினகுளம் மக்களை மீள்குடியேற்ற நடவடிக்கை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தின் தெற்கு எல்லையில் அமைந்துள்ள கல்நாட்டினகுளம் கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சரும், வவுனியா மாவட்ட மாகாண சபை உறுப்பினருமாகிய டாக்டர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அமைச்சரின் ஊடகப்பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஆசிகுளம் கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள கல்நாட்டினகுளம் மிகப்பழைய கிராமமாகும்.

இற்றைக்கு 300 வருடங்களுக்கு மேலாக தமிழ் மக்கள் வாழ்ந்து வந்த கிராமமாகும். வவுனியா மாவட்டத்தின் தெற்கு எல்லையில் இருக்கும் இந்த கிராமமானது நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக 1977 களிலும், அதனை தொடர்ந்து 1983 காலப்பகுதியிலும் பேரழிவுகளை சந்தித்த கிராமமாகும்.

விவசாயத்தை ஜீவனோபாயமாக கொண்டுள்ள இந்தக்கிராமத்தை சேர்ந்தவர்கள் 1983 காலப் பகுதியில் தமது கிராமத்தை விட்டு முற்றாக வெளியேறினர்.

அதன் பின்னர் அருகிலுள்ள வேப்பங்குளம் மற்றும் கல்நாட்டினகுளத்தின் உள்பகுதியில் குடியேறியுள்ளபோதும் எல்லைப் பகுதியிலுள்ள பாரம்பரிய பழைய கிராமத்தில் மக்கள் இதுவரை குடியேறவில்லை.

இந்தநிலையில் மேற்படி விடயம் தொடர்பாக மத்திய மீள்குடியேற்ற அமைச்சரின் கவனத்திற்கு இந்தவிடயம் வடக்கு சுகாதார அமைச்சரினால் கொண்டு செல்லப்பட்டது. அத்தோடு கடந்த மாதம் சிதம்புரநகர் நிகழ்வுக்கு வருகை தந்த மீள்குடியேற்ற அமைச்சரை மேற்படி கிராமத்திற்கு அழைத்து சென்று மக்களுடன் கலந்துரையாட ஏற்பாடு செய்யப்பட்டது.

இதில் மக்களால் தமது தேவைகள் தொடர்பில் கோரிக்கை மனு அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

தற்போது மீள்குடியேறவுள்ள மக்களின் அடிப்படை தேவைகள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு மீள்குடியேற்ற அமைச்சினால் மாவட்ட அரசாங்க அதிபர் கோரப்பட்டுள்ளார்.

அறிக்கை சமர்பிக்கப்பட்டதும் மககளை மீள்குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் மேலும தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-281)

# யாழ்.பல்கலை ஊழியர்களை இன்று ஒன்றுகூடுமாறு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களையும் இன்றையதினம் காலை 11.30 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக முன்றலில் ஒன்றுகூடுமாறு யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தலைவர் சி.தங்கராசா அறிவித்துள்ளார்.

பல்கலைக் கழகங்களின் தொழிற்சங்கங்களின் தொழிற்சங்கக கூட்டுக்குழுவினர் சில கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவருக்கு கடந்த ஜனவரி மாதம் 25 ஆம் திகதி கடிதம் ஒன்றை வழங்கியிருந்தனர்.

அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததன் காரணமாக நாடு முழுவதிலும் உள்ள பலகலைக்கழக மானய ஆணைக்குழு, பல்கலைகழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவணங்களில் உள்ள போதனை சாரா ஊழியர்கள் தொடரச்சியான கவனயீர்ப்பு போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

அதனடிப்படையில் தற்போது நாடுமுழுவதிலும் உள்ள பல்கலைக்கழக ஊழியர்கள் தொடர்சியான வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் இன்று கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள பல்கலைக்கழக ஊழியர்களின் சந்திப்பில் எடுக்கப்படும் முடிவுகளை தெரியப்படுத்துவதற்காக யாழ்.பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் கல்வி சாரா அனைத்து ஊழியர்களையும் இன்றைய தினம் பல்கலைக்கழக முன்றலில் ஒன்றுகூடுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-9)

# வணக்கஸ்தலங்களை புனரமைக்க அனுமதி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடந்தகால யுத்தத்தினால் சேதமடைந்த வணக்கஸ்தலங்களை புனரமைப்பு செய்வதற்கு, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில், அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான கயந்த கருணாதிலக இதனைத் தெரிவித்தார்.

வணக்கஸ்தலங்களை மறுசீரமைப்பு செய்வதன் தன்மை மற்றும் அதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்களில் இருந்து கிடைக்கும் நிதி ஆகியவற்றினை கருத்திற்கொண்டு, குறித்த மாவட்டங்களின் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களின் கண்காணிப்பின் கீழ் இதனை செயற்படுத்துவதற்கு, பிரதமர் ரணில் விக்ரமசிங்கவால் முன்வைக்கப்பட்ட யோசனைகளை அமைச்சரவை கவனததிற்கொண்டு அனுமதியளித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (செ-11)

## மகிந்த...

தமிழ் மக்களை அநியாயமாக படுகொலை செய்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு தூக்குத் தண்டனை வழங்க வேண்டும் என பூநகரி பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

போர்க்குற்ற விசாரணைக்கான பொறிமுறைகள் மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைகள் பற்றிய கலந்தாலோசனை செயலணி நேற்று செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி - பூநகரி பிரதேச செயலகத்தில் யாழ். மாவட்ட மனித உரிமை ஆணைக் குழுவின் கண்காணிப்பில் இடம் பெற்றுவருகின்றது.

இதில் கலந்துகொண்டு சாட்சியமளித்தபோதே மக்கள் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டில் இடம்பெற்ற இறுதியுத்தத்தில் பொது மக்கள் அநியாயமாக கொல்லப்படுவதற்கு காரணமாக இருந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு தகுதி, தராதரம் பாராது உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் மக்கள் கொல்லப்பட்டமைக்கு நியாயம் வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

அத்துடன் தமிழ் மக்களுக்காக போராடி உயிரிழந்த மாவீரர்களுக்கான வணக்க நிகழ்வை எந்தவொரு இடையூறுமின்றி அனுஷ்டிப்பதற்கு வழியேற்படுத்தி தர வேண்டும் எனவும், முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட மக்களை நினைவுகூர்வதற்கு இராணுவத்தின் தலையீடு இருக்கக்கூடாது எனவும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதேவேளை செயலணி நடைபெறும் குறித்த பகுதியில் நேற்றுக் காலை இராணுவத்தினரின் நடமாட்டம் காணப்பட்டதாகவும் எனினும் மனித உரிமை ஆணைக்குழுவனரின் வருகையை அடுத்து அவர்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளதாகவும் பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

போர்குற்ற விசாரணை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைகள் பற்றிய கலந்தாலோசனைக்கான மனோரி முத்தெட்டுகம தலைமையிலான விசேட செயலணி மக்களின் கருத்துக்களை அறியும் அமர்வை நடத்துகின்றது.

கடந்த ஜனவரி மாதம் 26 ஆம் திகதி தொடக்கம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் சிரேஷ்ட சட்டத்தரணி மனோரி முததெட்டுகம தலைமையில் 11 பேரைக் கொண்ட குறித்த செயலணி பொதுமக்களிடம் கருத்துக்களை அறிந்து வருகின்றது.

இதற்கமைய கடந்த வாரம் முதல் இந்த கருத்தறியும் செயற்றிட்டம் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு உள்ளிட்ட பல மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## மாணவன்...

தினம் திங்கட்கிழமை முதல் காணாமற்போயிருந்த நிலையிலேயே, நேற்று வெற்றுக் காணியிலுள்ள மரமொன்றிலிருந்து தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மாணவனின் மர்மமான இறப்பு தொடர்பில் உறவினர்கள் சந்தேகம் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்குச் சென்ற ஊர்காவற்றுறை நீதிவான் ஏ.எம்.எம்.றியால், விசாரணைகளை மேற்கொண்டார்.

சரவணை மேற்கு முதலாம் வட்டாரப் பகுதியிலுள்ள வேலணை மத்திய கல்லூரியில் உயர்தரத்தில் கல்வி கற்றுவரும் தவிசாலன் பானுசன் (வயது 17) என்ற மாணவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.

அத்துடன், தடய அறிவியல் பொலிஸார் வரவழைக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் நீதிவானின் உத்தரவுக்கமைய சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (செ-30)

## மனித புதை...

க்கலாம் என அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் தெரிவித்தனர். அகழ்வின் போது சில எலும்புத் துண்டுகள் மீட்கப்பட்டுள்ளன. (செ-11)

## கீரிமலையில் மீன்பிடிதுறை...

ஸ்வரன் தெரிவித்தார்.

ஆடி அமாவாசை தினத்தையொட்டி, கீரிமலையில் நடைபெற்ற பிதுர்கடன்வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இதனை அவர் தெரிவித்துள்ளார். இந்த வைபவத்தில் கல்வி ராஜாங்க அமைச்சர் வி.இராதாகிருஸ்ணனும் கலந்து கொண்டிருந்தார்.

இந் நிகழ்வில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் உரையாற்றுகையில்,

இலங்கையில் உள்ள ஐந்து ஈஸ்வரங்களில் ஒன்றான எங்கள் நகுலேஸ்வரம் அதன் புனிதம் கெடாது பாதுகாக்கப்படவேண்டிய ஒரு சைவசமய அடையாளச் சின்னமாகும்.

இத்தலத்தையும் இதனை சூழவுள்ள பகுதிகளையும் நாம் போற்றிப் பாதுகாப்பதற்கும் அதன் புனிதத்தை பேணுவதற்குத் தவறிய காரணத்தினாலேயே கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இப்பகுதிக்கு பொது மக்கள் ஒருவரும் வரமுடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருந்தது.

எனினும் ஒருசில புண்ணிய புருக்ஷர்களின் வழிபாடுகளாலும் எதிர்பார்ப்பாலும் இன்று இப்பகுதக்கு அடியவர்கள் வந்து செல்லக்கூடிய ஒரு பிரதேசமாக இது மாற்றப்பட்டிருக்கின்றது.

எனவே இந்த புண்ணிய பூமியை அதன் புனிதம்குன்றிவிடாது பாதுகாக்க வேண்டியது எம் அனைவரதும் தார்மீகப் பொறுப்பாகும்.

கீரிமலை புண்ணிய தீர்த்தத்தின் மகிமை பற்றியும் இப் பிரதேசத்தின் புனிதம் பற்றியும் நாம் பேசிக் கொண்டிருக்கின்ற இச் சந்தர்ப்பத்தில் எமது மத்திய அரசின் அரசியல் தலைமைகள் இங்கு ஒரு மீன்பிடித் துறைமுகத்தை அமைப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருவது எமக்கு சினத்தை ஏற்படுத்துகின்றது.

இலங்கையின் மிகப் பிரபல்யமானதும்இயற்கை துறை முகமுமாகிய மயிலிட்டிமீன்பிடித் துறைமுகத்தை தமது தேவைக்கும் இராணுவப் பயன்பாட்டிற்கும் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ளும் கபட நோக்கில் அப்பகுதியைச் சேர்ந்த மக்களை வேறிடத்தில் மீள்குடியேற்றம் செய்வதற்கும் அவர்களுக்கான வாழ்வாதார செயற்பாடான மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்குப் பெயரளவில் ஒரு துறைமுகம் அமைத்துக் கொடுக்க வேண்டியுமே மத்திய அரசு எதுவித கலந்துரையாடல்களோ அல்லது சமூகம சார் விழிப்புணர்வுகளோ அற்ற நிலையில் கீரிமலைப் பிரதேசத்தை மீன்பிடித் துறைமுகமாக மாற்ற முயன்றுள்ளது.

இச்செயல் ஒட்டுமொத்த இந்துக்களையும் ஏன் ஏனைய மதத்தவர்களைக் கூட வெறுப்பூட்டக்கூடிய ஒரு செயற்பாடாக அமைந்திருப்பது இங்கு பேசற்பாலது.

இந் நிலையில் எம்மவர்களில் சிலர் தொலைக்காட்சிகளினூடாக 'ஒப்புக்கு மாரடிக்க' முயல்வது வேதனைக்குரியது. "புனிதம் கினிதம் என பேசிக் கொண்டிருக்காதீர்கள். இப்பகுதியில் குடியேற்றப்பட்டிருக்கின்ற மக்களின் வாழ்வாதாரத்திற்கு ஒரு மீன்பிடித் துறைமுகம் அவசியம்.

எனவே கீரிமலை மீன்பிடித் துறைமுகம் எதுவித மறுதலிப்புக்களும் இன்றி அமைக்கப்பட வேண்டும்" என ஒரு மிகக் கீழ்த்தரமான அறைகூவல் ஒளிபரப்பு, இரண்டொரு நாட்களுக்கு முன் தொலைக்காட்சி வாயிலாக ஒளிபரப்பப்பட்டது என்று எனக்குக் கூறப்பட்டது. மக்களோடு மக்களாக வாழாதவர்கள் இப்பேர்ப்பட்ட பாரிய தவறுகளைச் செய்கின்றார்கள். சரித்திரம் அறியாதவர்கள் இப்பேர்ப்பட்ட தவறுகளை இழைக்கின்றார்கள். தனிப்பட்ட அல்லது அரசியல் காரணங்களுக்காகத் தமது மக்களையே விலை பேசத் துணிகின்றார்கள்.

இப்பேர்ப்பட்டவர்கள் இவ்வாறான கருத்துக்களைக் கூற முயல்வது எவ்வளவு எதிர்மறையான தாக்கங்களை மக்களிடையே ஏற்படுத்தும் என்பதைப்புரிந்துகொள்ள வேண்டும்.

ஒரு புனிதத் தலம் அல்லது புண்ணிய பூமி அதன் மகத்துவம் சிறிதும் குன்றாமல் பாதுகாக்கப்பட வேண்டியது எம் அனைவரதும் கூட்டுப் பொறுப்பாகும்.

இந்துசமய ஆலயங்களோ அல்லது புனித பூமிகளோ ஆயினும் சரி அல்லது கிறீஸ்தவ, பௌத்த சமயத் தலங்கள் ஆயினும் சரி அவற்றின் புனிதம் எச்சந்தர்ப்பத்திலும் குறைவடையாது பாதுகாக்கப் படல் வேண்டும்.

அந்த வகையில் கீரிமலை பிரதேசத்தில் மீன்பிடித் துறைமுகம் ஒன்றை அமைப்பதென்பது ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு செயற்பாடாகும்.

இதனை அரசு நன்கு புரிந்து கொண்டு மாற்றுத் திட்டங்களை முன்வைக்கும் என நம்புகின்றேன். ஒரு பக்கத்தால் மயிலிட்டியை நாம் விடுவிக்கப் போகின்றோம் என்று கூறிக் கொண்டு கீரிமலையில் மீனபிடித் துறைமுகம் அமைக்க எத்தனிப்பது கரவான கண்ணிய மற்ற செயலாகவே எனக்குப் படுகின்றது என முதலமைச்சர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார். (செ-9)

## மருத்துவ...

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டிருந்த அமைச்சரிடம் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வடக்கில் இடம்பெறும் நல்லிணக்க பொறிமுறை குறித்த கலந்துரையாடலில் கலந்து கொண்ட முன்னாள் போராளியொருவர் தமக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டபோது ஊசி போடப்பட்டதாகவும் இதனால் தான் தற்போது சக்தி இழந்து காணப்படுவதாகவும் கூறியிருந்தார்.

அத்துடன் முன்னாள் போராளிகளுக்கு சர்வதேச தரம்வாய்ந்த உடற்பரிசோதனை செய்யப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்பது தொடர்பில் அமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு அமைச்சர் ராஜித பதிலளிக்கையில்,

இது தொடர்பில் முறைப்பாடு முன்வைக்கப்பட்டால் முன்னாள் போராளிகளுக்கு உடற்பரிசோதனை செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். ஆனால் இது வரை எமக்கு அவ்வாறான எவவிதமான அறிக்கையும் கிடைக்கப் பெறவில்லை. முறைப்பாடு வந்தால் நாம் பரிசோதனை செய்வோம்.

இலங்கையில் சர்வதேச தரம் வாய்ந்த மருத்துவர்கள் இருப்பதாக சர்வதேசம் கூறியுள்ளது. எனவே இங்கு பரிசோதனை நடத்தலாம். ஆனால் கடந்த ஏழு வருடங்களாக இவர்கள் எங்கே இருந்தனர். ஏன் இதனை வெளியில் கூறவில்லை என்ற கேள்வி எழுகின்றது. தற்போதுதான் வெளியில் கூறுகின்றனர். அப்படியிருந்தும் நாங்கள் மருத்துவ பரிசோதனை நடத்துவோம் என்றார். (செ-11)

## பியசேனவின்...

கடந்த மாதம் 29ஆம் திகதி கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவரை அன்றைய தினமே கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போது, அவரை நேற்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், பியசேனவை நேற்று மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போதே, அவரின் விளக்கமறியல் எதிர்வரும் 5ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் போது பொருளாதார அமைச்சின் கீழ் பியசேனவுக்கு பிராடோ ஜீப் வண்டி ஒன்று வழங்கப்பட்டிருந்தது.

இந்த வாகனத்தை பியசேனவிடம் இருந்து மீண்டும் பெறுவதற்கு அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் பலனளிக்கவில்லை எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில், இந்த ஜீப் வண்டி கடந்த வியாழக்கிழமை கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டிருந்ததுடன், வாகனச் சாரதியும் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்தசம்பவம் தொடர்பில் கடந்த மாதம் 29ஆம் திகதி கொள்ளுபிட்டி பொலிஸ் நிலையத்துக்கு விசாரணைகளுக்கு அழைக்கப்பட்டிருந்த பியசேன பின்னர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்த்ர்.

2010ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட இவர், பின்னர் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்து கொண்டார்.

2015ஆம் ஆண்டு தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் மீண்டும் தேர்தலில் போட்டியிட்டு இவர் தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## அரசியல் கைதிகளின்...

போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டில் கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு முன்பாக இந்த கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் வடக்குக் கிழக்கு மாகாணங்களிலும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி போராட்டங்கள் இடம்பெறவுள்ளன.

இந்தப் போராட்டங்களின் போது, பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குமாறும், சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளுக்கு நீதி வழங்குமாறும் வலியுறுத்தப்படவுள்ளது.

இந்தப் போராட்டங்களில் மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்காக அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## வடக்கு தொண்டர்...

கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா, மடு, யாழ்ப்பாணம் உள்ளிட்ட கல்வி வலயங்களில் சுமார் 10 வருடங்களாக கடமையாற்றுகின்ற வடக்கு கல்வி அமைச்சினால் தெரிவுசெய்யப்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனத்தை வழங்குமாறு கோரி வடமாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் காலவரையறையற்ற உண்ணாவிரத போராட்டம் ஒன்றை ஆரம்பித்திருந்தனர்.

வடமாகாணத்தில் உள்ள அனைத்து வலயங்களிலும் இருந்து ஆயிரத்து 300 தொண்டர் ஆசிரியர்களின் பெயர்கள் தெரிவு செய்யப்பட்டு நேர்முகத்தேர்வு இடம்பெற்றது.

பின்னர் ஒவ்வொரு வலயங்களிலும் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் இதுவரையில் எமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. எனவே தாம் தொடர்ச்சியாக ஏமாற்றமடைந்த நிலையில் உள்ளதால் தமக்கு கால அவகாசம் தேவை இல்லை என தெரிவித்த அவர்கள் நிரந்தர நியமனம் எப்போது வழங்கப்படும் என எழுத்துமூலமாக உறுதிமொழி வழங்கும் வரை தொடர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடுவதாக தெரிவித்தனர்.

இரண்டாம் நாளாக உண்ணாவிரதத்தை தொடர்ந்த ஆசிரியர்களை நேற்றைய தினம் மாலை சந்தித்த வடமாகாண ஆளுநர் ரெயினோல்ட் கூரேயிடம் கருத்து தெரிவிக்கையில்,

தொண்டர் ஆசிரியர்கள் தொடர்பாக கல்வி அமைச்சரிடம் நேரடியாக அறிவித்துள்ளேன். அவர் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளார். பெயர்ப்பட்டியல் ஏற்கெனவே உள்ளதாகவும் தற்போதுள்ள பெயர்களும் பரிசீலிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நாளை 4ஆம் திகதி ஜனாதிபதியுடன் கலந்துரையாடவுள்ளேன். டிசம்பர் மாதத்துக்குள் இதற்குரிய தீர்வு கிடைக்கும் என நம்புகிறேன். கால அவகாசம் தர நான் விரும்பவில்லை ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் இதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தொண்டராசிரியர்களை நியமிக்க வேண்டாம் என்ற தீர்மானம் தற்போது இருக்கின்ற நிலையில் குறித்த விடயம் தொடர்பாக உன்னிப்பாக அணுகவேண்டும். எனவே உங்களது போராட்டத்தை கைவிட்டு நம்பிக்கையுடன் இருக்குமாறு தெரிவித்தார்.

ஆளுநரின் உறுதிமொழியை அடுத்து போராட்டத்தை கைவிடுவதாக தொண்டராசிரியர்கள் அறிவித்தனர். இதனைத்தொடர்ந்து ஆளுநர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டவர்களுக்கு தண்ணீர் வழங்கி உண்ணாவிரதத்தை நிறைவுசெய்து வைத்தார். (செ-9)

## நல்லூர் ஆலய...

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத் திருவிழா எதிர்வரும் 8 ஆம் திகதி கொடியேற்றத்துடன், ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாட்கள் நடைபெறவுள்ள நிலையில், திருவிழாவுக்கான மாநகர சபையின் ஏற்பாடுகளை ஊடகவியலாளர்களுக்கு தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு மாநகர சபை மண்டபத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். தொடர்ந்து அவர் கூறுகையில்,

நல்லூர் மஹோற்சவ காலத்தில் 'பிளாஸ்ரிக் அர்ச்சனைத் தட்டுக்களுக்கு பதிலாக பனையோலையில் தயாரிக்கப்பட்ட அர்ச்சனைத் தட்டுக்கள் விற்பனை செய்ய வேண்டும். அவற்றை மாவட்ட மகளிர் அமைப்புக்கள் ஊடாகவும், பனை சார் உற்பத்தியாளர்களிடமிருந்தும், குறைந்த விலைகளில் கடைக்காரர்கள் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனைவிட, 20 மைக்றோவுக்கு குறைவான பொலித்தீன் பாவனை மற்றும் உக்கலடையாத பொருட்களின் பாவனை என்பனவும் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

ஆலயத்துக்கு வருகை தரும் பக்தர்களும், கடமையில் ஈடுபடுபவர்களுக்கு கலாசார உடைகளை அணிய வேண்டும். ஆலய வெளி வீதியில் அங்கப் பிரதட்சனை செய்வதற்காக கொட்டப்பட்டுள்ள மணலை அசிங்கம் செய்யாமல், சுகாதாரம் பேணவேண்டும்.

ஆலய சூழலில் திருட்டு சம்பவங்களை தடுப்பதற்காக ஆங்காங்கே கண்காணிப்பு கமராக்கள் பொருத்தவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஆலயத் சுற்றாடலையொட்டி அமைக்கப்படும் வாகனப் பாதுகாப்பு நிலையங்களில் சைக்கிள்களுக்கு 5 ரூபாயும், மோட்டார் சைக்கிள்களுக்கு 10 ரூபாயும் மாத்திரம் அறிவிடப்படவேண்டும். மீறுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆலயத்தின் முக்கிய திருவிழாக் காலங்களில் ஆலயத்துக்குள் நுழையும் காவடிகள், வடக்கு வீதிப்பக்கமாக நுழைந்து, குபேர வாசலில் தங்கள் நேர்த்திக் கடனை முடித்த பின்னர்,

கோவில் வீதி வழியாக தெற்கு பக்கமாக வெளியேற வேண்டும். ஆலயத்தை சூழ அமைக்கப்படும் வீதித்தடைகள் எதிர்வரும் 7 ஆம் திகதி பிற்பகல் 2 மணியுடன் அமுலுக்கு வருகின்றது. ஆலயச் சூழலில் கடைகள் அமைத்தவர்கள் தங்கள் பொருட்களை இடமாற்றுவதற்காக மாத்திரம் மதியம் 12 மணி முதல் 2 மணிவரையில் பாதை திறக்கப்படும். மேலும், அப்பகுதியில் குடியிருப்பவர்கள், கடைகள் வைத்திருப்பவர்கள், அலுவலகங்களில் பணியாற்றுபவர்களுக்கு, சென்று வருவதற்கு விசேடமான அடையாள அட்டை வழங்கப்படும் என்றார். (செ-4)

## படை அதிகாரிகளை...

கட்டளையிடும் அதிகாரிகள் இதன்போது அவர்கள் குற்றமிழைத்திருப்பது உறுதியானால் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். அவர்களுக்குத் தண்டனைகள் பெற்றுக் கொடுக்கப்படவேண்டும்.

இவ்வாறு இலங்கை மனித உரிமைகள் அபிவிருத்தி நிலையத்தின் சட்ட ஆலோசகர் டொமினிக் தெரிவித்தார்.

நல்லிணக்கப் பொறிமுறை எவ்வாறு அமைய வேண்டும் மற்றும் காணாமற் போனோர் அலுவலகத்தை அமைப்பது என்பன தொடர்பில் வடக்கில் இடம்பெற்று வரும் மக்கள் கருத்தறியும் அமர்விலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "காணாமற்போதல் சம்பவங்கள் இடம்பெற்ற காலப்பகுதியில் எங்கு சுற்றிவளைப்புக்கள், தேடுதல்கள் இடம்பெற்றதோ, அந்தப் பகுதியில் கடமையில் இருந்த அனைத்து படைத்தரப்பினரையும் விசாரணைக்கு உட்படுத்த வேண்டும். அங்கு கட்டளை பிறப்பிக்கும் அதிகாரிகளாகச் செயற்பட்டவர்களையும் விசாரணை செய்ய வேண்டும்.

ஒருவர் கைது செய்யப்படுவதாக இருந்தால், அவர்களது உறவினர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும். சட்ட ரீதியற்ற கைதுகள் இப்போதைய ஆட்சியிலும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

இங்கு 1971ஆம் ஆண்டு தொடக்கம் காணாமற்போதல் சம்பவங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்குரிய தீர்வுகள் இதுவரை காணப்படவில்லை.

அரசியல் கைதிகள் பலர் விசாரணைகளின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். அவர்கள் தம்மை விடுவிக்குமாறு பல்வேறு போராட்டங்கள் நடத்தியுள்ளனர். இதுவரை அவர்கள் விடுவிக்கப்படவில்லை. அவர்களது குடும்பத்தினர் பல்வேறு துன்பங்களுக்கு முகம்கொடுத்து வந்திருக்கின்றனர். இராணுவத்தினர் வசமுள்ள காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். இராணுவப் பிரசன்னம் இல்லாமல் செய்யப்பட வேண்டும். இவை எல்லாம் ஒருங்கே நடந்தால் தான் நல்லிணக்கம் ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-4)

## சந்தேக நபரொருவர்...

ழுந்தவராவர்.

யாழ்.நீர்வேலி பகுதியை சேர்ந்த அச்சுதன வைகுந்தன் எனும் இளைஞர் கடந்த 2006 ஆம் ஆண்டு ஆயுத் தாரிகளால் கடத்தி செல்லப்பட்டுள்ளார். அதன் பின்னர் கடத்தப்பட்டவர் தொடர்பில் எந்த விதமான தகவலும் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் கடந்த 2013 ஆம் ஆண்டு கடத்தப்பட்ட இளைஞனின் வீட்டுக்கு கடிதம் ஒன்று வந்துள்ளது. அதில் குறித்த இளைஞர் வவுனியாவில் உயிருடன் இருப்பதாகவும் அவரை மீட்பதாக இருந்தால் குறித்த தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கிருஷ்ணனுடைய தொலைபேசி இலக்கம் குறிக்கப்பட்டிருந்தது.

அந்த தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொண்டு கடத்தப்பட்ட இளைஞரின் சகோதரனான செந்தில்குமரன் கதைத்த போது, கடத்தப்பட்டவர் உயிருடன் வவுனியா முகாமில் இருப்பதாக கூறி அவரை மீட்க 5 லட்சம் ரூபாய் பணம் தர வேண்டும் என கோரியுள்ளார். இதன்போது கடத்தப்பட்ட சகோதரனை மீக 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டது. அதன் பின்னர் எந்தவிதமான தொடர்பும் கிடைக்கவில்லை. இது தொடர்பாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டது.

இந்த நிலையில் 3 வருடங்களின் பின்னர நேற்று முன்தினம் கடத்தப்பட்ட இளைஞரின சகோதரன் யாழ்.நகர் பகுதிக்கு வந்த வேளை, தான் பணம் கொடுத்து ஏமார்ந்த நபரை கஸ்தூரியார் வீதியில் கண்டுள்ளார். உடனேயே அந்த நபரை மடக்கி பிடித்து யாழ்ப்பாண பொலிஸாரிடம் ஒப்படைத்து முறைப்பாடு செய திருந்தார். குறித்த சந்தேக நபரின் வழக்கு கோப்பாயல் உள்ள காரணத்தால் யாழ்ப்பாண பொலிஸில் இருந்து அவர் கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு மாற்றம் செய்யப்பட்டார்.

கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு கைது செய்யப்பட்ட நபரை கொண்டு சென்ற போது பொலிஸ் நிலையத்தில் சந்தேக நபர் கிருஷ்ணகுமார் தான் வைத்திருந்த கறுத்த பையினுள் உள்ள போத்தலில் இருந்ததிரவத்தை குடித்து விட்டு அப்போத்தலை உடைத்து செந்தில் குமரனை குத்துவதற்கு சென்றுள்ளார்.

எனினும் அம் முயற்சி பொலிஸாரால் தடுக்கப்பட்டிருந்த நிலையில், சந்தேக நபரின் உடலில் மாற்றங்கள் காணபபட்டதால், உடனடியாக யாழ்போதனா வைத்தியசாலையல் அனுமதிக்கப்பட்டார். எனினும் சிகிச்சை பலனின்றி குறிதத சந்தேக நபர் நேறறிரவு 8 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

இவர் சயனைட்க்கு பயன்படுத்தும் பொட்டாசியம் திரவத்தை குடித்துள்ளதாக பிரேத பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

குறித்த மரண விசாரணையை யாழ் போதனா வைத்திய சாலை திடீர்மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்ட பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-9)

அனைத்து நாடுகளுக்குமான விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

UK-550*/=Kg
DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)
மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
தொடர்புகளுக்கு: 0768226243
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி
• நெல்லியடி • வல்வெட்டித்துறை
V2 TRAVELS

28ஆவது வருட கல்விச் சேவையில்
3ம் தவணைக்கான வகுப்புக்கள்
தரம் 1 முதல் O/L வரை
ஆரம்பம்
எமது 'SUPER GRADE' ஆசிரியர் குழு
03.08.2016
புதன்கிழமை
பிற்பகல் 3.30 மணி
(C-5353)
புதிய அனுமதிகள் இம்மாதம் 15 வரை
புதிய நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.
T.P - 077 459 8440

நீங்கள் இம்முறை A/L பரீட்சைக்கு தோற்றுபவரா?
5 நட்சத்திர ஹொட்டேல்களில்
கவர்ச்சிகரமான சம்பளத்துடனான வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன் கூடிய
O/L உடன் Business & Hotel Management UK Certified
CERTIFICATE • DIPLOMA • DEGREE
With FREE English Course
3 மாத கால தொழில்துறைப் பயிற்சி
(பயிற்சி காலத்தில் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)
கற்கைநெறி நிறைவில் வேலைவாய்ப்பு ஏற்பாடு
(C-5360)
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு.
புதிய பிரிவு ஆரம்பம் Week & Weekend Batch
அனுமதிகளுக்கு: 077 3616 798
SIKARAM ACADEMY Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)

A/L 2017, 2018
கணக்கீடு
பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள்.
கொழும்புத்துறை, கந்தர்மடம்
0772168884
(5484)

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

(C-5357)
CNR World wide Express
No.401 Clock tower road, Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)
அழையுங்கள் - 077 29 31 062

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தரம்-5 மாணவர்களுக்கான
# புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-23

பகுதி-I ஆசிரியர் திரு.வே.அன்பழகன் நேரம்:- 45 நிமிடங்கள்

- 01ஆம், 02ஆம் வினாக்களுக்குத் தரப்பட்ட உருக்களில் வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க.

01. 1) 2) 3)




02. 1) 2) 3)



- 03ஆம், 04ஆம் வினாக்களுக்குச் சமனான உருக்கள் இரண்டினைக் கொண்ட விடையினைத் தெரிவு செய்க.

03.



A B C D

1) A யும் C யும் 2) B யும் D யும் 3) B யும் C யும்

04.



A B C D

1) A யும் B யும் 2) B யும் C யும் 3) C யும் D யும்

05.



A B C

ABC உருவங்களில் காணப்படும் பொருட்கள் மற்றும் தொடர்புகளுக்கு மிகவும் பொருத்தமான விடை எது?

1) உலோகங்கள் 2) வீட்டு உபகரணங்கள் 3) பெண்கள்

06.



1 2 3 4 5


1, 2, 3, 4, 5 உருக்களுடன் மிகவும் பொருத்தமானது

1) உடைகள் 2) ஆடை ஆபரணங்கள் 3) துணிமணி

● 07ஆம், 08ஆம் வினாக்களில் தரப்பட்ட உருவத்திற்குப் பொருத்தமான சொற்கூட்டத்தைத் தெரிவு செய்து கீறிடுங்கள்.

07. 

1) மாமிச உண்ணி, குட்டி ஈனும், பறக்கும்
2) முட்டை இடும், பறக்கும், இறகுடையது
3) உரோமம் உடையது, பறக்கும், குட்டி ஈனும்

08. 


1) கண்ணாடி, குளிர், வெளிச்சம்
2) வெப்பம், ஒளி, மின்
3) ஒளி, காந்தம், மின்

"?" வினாக்குறியிடப்பட்ட இடத்தில்வரவேண்டிய உருக்கோலத்தை ஒழுங்கில் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

09. !!ox!!?x!!ox!!o??
1) o!x    2) !ox    3) !xo    4) ox!


10. @<^>@?^>@<??
1) <^>    2) >^<    3) <^<    4) >^>

● அடுத்து வரும் உருவைத் தெரிவுசெய்க.

11. 




1)    2)    3)    4)    5)


12. 




1)    2)    3)    4)    5)

● வெற்றிடத்தில் வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.

13. 




1)    2)    3)    4)    5)

14. 



1)    2)    3)    4)    5)

15. 

அருகில் தரப்பட்டுள்ள உருவில் காணப்படும் சதுரங்களின் எண்ணிக்கை யாது?
1) 8    2) 9    3) 10

16. நபர் ஒருவருடைய குணாதிசயம் சம்பந்தமாக ஏற்றுக்கொள்ள முடியாத உவமானத்தைத் தெரிவு செய்க.
1) நரிபோல் தந்திரமுள்ளவன்    2) பசு போல் பொறாமையுள்ளவன்
3) சிங்கம் போல் வீரன்

17. கிராமங்களில் வசிப்போர் விருந்தோம்பும் நற்காரியத்தைச் செய்வதில் விருப்பமுள்ளவர். இதன்படி,
1) விருந்தோம்பும் நல்ல செயலை விரும்புவோர் கிராமத்தில் மட்டும் வசிப்போர்.
2) கிராமங்களில் வசிப்பவர்கள் விருந்தோம்பும் நற்செயலில் விருப்பமில்லாதவர்கள் அல்லர்.
3) விருந்தோம்பும் நற்செயலுக்கு விரும்பாதவர் எவரும் கிராமங்களில் இல்லை.

• பின்வரும் நிகழ்வுடன் தொடர்புடைய பழமொழியைத் தெரிவுசெய்க.


**18.** நிகழ்வு:- பணம் இல்லாது கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த எனக்கு நண்பன் ஒருவன் தன்னிடமிருந்த பணத்தில் ஒரு பகுதியைக் கொடுத்தான்.

1) ஆசை வெட்கம் அறியாது
2) உப்பிட்டவரை உள்ளளவும் நினை
3) அன்பான நண்பனை ஆபத்தில் அறி
4) உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்

**19.** மாலதி பணக்கார வீட்டுப் பிள்ளை. அவள் சிறுவர் சஞ்சிகைகள், சித்திரக்கதைகள் எனப் பலவற்றைப் பாடசாலைக்குக் கொண்டு வருவாள். அவற்றை ஏனைய மாணவர்களுக்குக் காட்டுவாள். ஆனாலும் யாருக்கும் வாசிக்கக் கொடுக்க மாட்டாள். அவளைப் பற்றிக் குறிப்பிடுவதற்குப் பொருத்தமானது,

1) பொதுநலவாதி
2) சுயநலவாதி
3) வள்ளல்
4) ஊதாரி

**20.** ஒரு பிள்ளை உருவாக்கிய 3 சக்கரங்களைக் கொண்ட பொறிமுறை ஒன்று அருகே காணப்படுகின்றது. இங்கு A இருக்கும் சக்கரம் அம்புக்குறியால் காட்டப்படும் திசைக்கு திருப்பப்படுகிறது. அப்பொழுது 3 சக்கரங்களினதும் செயற்பாட்டினை சரியாகக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.




1) ABC உள்ள சக்கரங்கள் மூன்றும் ஒரே திசைக்குத் திரும்பும்.
2) AC ஒரே திசைக்கும் B எதிர்த்திசைக்கும் திரும்பும்.
3) AB ஒரே திசைக்கும் C எதிர்த்திசைக்கும் திரும்பும்
4) BC ஒரே திசைக்கும் A எதிர்த்திசைக்கும் திரும்பும்.


**21.** இப்போது எனக்கு வயது 11 ஆண்டுகள் ஆகும். எனது தம்பியின் வயது 4 ஆண்டுகள் ஆகும். இன்னும் எத்தனை வருடங்களில் எனது வயது தம்பியின் வயதைவிட இரு மடங்காக இருக்கும்?

1) 3 வருடங்களில்
2) 4 வருடங்களில்
3) 8 வருடங்களில்

**22.** 'எமது விளையாட்டுக் குழுவில் உள்ள எல்லா வீரர்களும் உயரமானவர்கள். தயாபரன் உயரமானவன் எனில், தயாபரன் எமது விளையாட்டுக் குழுவைச் சேர்ந்தவன்' என்னும் கூற்று,

1) சரியானது
2) பிழையானது
3) சரியாகக் கூறப்பட முடியாது

**23.** பின்வரும் படங்கள் ஒரு கதையை அடிப்படையாகக் கொண்டது. அவை ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளது. அவை சரியாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள விடைத்தொகுதியைத் தெரிவுசெய்க.




1) அ, ஆ, ஈ, இ
2) அ, இ, ஈ, ஆ
3) ஈ, ஆ, அ, இ
4) அ, ஈ, ஆ, இ

• பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

மழைக் காற்றைத் தாங்கிடும்
வாழும் குஞ்சைக் காத்திடும்
வலிமையான கூடுதான்
வடிவம் கூட அழகுதான்

சின்னக் குருவி முயற்சியால்
சிறிய கூடு கட்டினால்
உன்னைப் போல சிறுவனால்
ஊரை வெல்ல முடியுமே!


**24.** இப்பாடலுக்குப் பொருத்தமான பழமொழி யாது?

1) காற்றுள்ள போதே தூற்றிக் கொள்
2) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
3) முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்

**25.** ஊரை வெல்ல முடிவது எப்படி?

1) சிறிய கூடு கட்டுவதால்
2) குருவி போல் முயற்சி செய்வதால்
3) வலிமையான கூடு கட்டுவதால்

**26.**




இங்கு காணப்படும் கூடுகளிலுள்ள உருக்களுக்கு ஏதாவது பெறுமானம் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. அவ் உருக்களின் கூட்டுத்தொகை குறுக்காகவும், கீழாகவும் காட்டப்பட்டு உள்ளன. பெறுமதி கொடுக்கப்படாத -?- குறியீடு மூலம் காட்டப்பட்ட இடத்தில் வரவேண்டிய எண் என்ன?

1) 10
2) 8
3) 9
4) 6

● ஒரு வட்டமான வீதியில், ஒரே இடத்திலிருந்து சண்முகம் ஒரு திசையில் ஓட, அச்சுதனும் அபயனும் எதிர்த் திசையில் ஓடுகிறார்கள். சண்முகம் பாதி வட்டம் ஓடுவதற்கு முன்னரே அபயனைச் சந்திக்கின்றான். சண்முகம் பாதி வட்டத்தைக் கடந்த பின்னர் அச்சுதனைச் சந்திக்கிறான். இதன்படி 27ஆம், 28ஆம் வினாக்களுக்குக்குரிய விடைகளைத் தெரிவு செய்க.

27. மிக மந்தமாக ஓடுபவர்கள்

1) அச்சுதன் 2) அபயன் 3) சண்முகம்

28. மிக வேகமாக ஓடுபவன்

1) அச்சுதன் 2) அபயன் 3) சண்முகம்

29. பாதை ஒன்றை அமைப்பதற்கு 6 மனிதர்களுக்கு 10 நாட்கள் தேவை எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதே வேலையை 4 மனிதர்களைப் பயன்படுத்தினால் எத்தனை நாட்களில் முடிப்பர்?


1) 15 நாட்கள் 2) 10 நாட்கள் 3) 20 நாட்கள்

30. இந்த மூன்று எண் கூற்றுக்களும் உண்மையானவை. அதற்கேற்ப தரப்பட்ட விடைகளில் எது சரியான கூற்று எனத் தெரிவு செய்க.

| ○ + □ = 13 | ○ + 1 = △ | ○ - □ = 3 |
|---|---|---|


1) △ + □ = 16 2) △ + 3 = 11 3) ○ + △ = 17

31. தரப்பட்ட பொருளினை உயரத்திலிருந்து நேராகப் பார்க்கும்போது எவ்வாறு தோன்றும் என்பதைத் தெரிவு செய்க.



1) 2) 3)

32.




இலக்கங்கள் உள்ள சில்லு நேர்கோடு வழியே முன்னோக்கி உருளும்போது சந்திக்கும் ? குறி இடப்பட்டுள்ள கூடுகளுக்குப் பொருத்தமான எண்கள் முறையே,

1) 2, 9 ஆகும்

2) 3, 2 ஆகும்

3) 3, 9 ஆகும்




**பின்வரும் இரு ஆங்கிலச் சொற்களிலும் A, B, F, O, T என்னும் ஐந்து ஆங்கில எழுத்துக்களுக்குப் பதிலாக 1, 2, 3, 4, 5 என்னும் இலக்கங்கள் (இதே ஒழுங்கிலன்றி) இடப்பட்டு, அவ்விலக்கங்கள் ஏறுவரிசையில் எழுதப்பட்டுள்ளன.**

**BOAT = 1235**
**FOOT = 1134**

33. எழுத்து O யிற்குப் பதிலாக இடப்பட்டுள்ள இலக்கம் யாது?

1) 1 2) 3 3) 5

34. எழுத்து T யிற்குப் பதிலாக இடப்பட்டுள்ள இலக்கம் யாது?

1) 1 2) 3 3) 5

35. தாயார் ஒருவர் தன்னிடத்தில் இருந்த பணத்தில் 1/2 ஐப் புத்தகங்கள் வாங்கச் செலவழித்தார். அதன் பின்னர் அவர் மீதிப் பணத்தை இரு சம பகுதிகளாகப் பிரித்து அவற்றில் ஒரு பகுதியை ஆடைகள் வாங்கச் செலவழித்தார். பின்னர் அவரிடம் எஞ்சியிருந்த பணம் ரூபாய் 50 எனின் அவர் புத்தகங்கள் வாங்கச் செலவழித்த பணம் யாது?

1) ரூபாய் 50 2) ரூபாய் 100 3) ரூபாய் 200

36. தற்போது கண்ணனின் வயது 12 வருடங்கள் ஆகும். அவனுடைய வயது சகோதரனின் வயதின் நான்கு மடங்காகும். கண்ணனின் வயது இன்னும் எத்தனை ஆண்டுகளில் சகோதரனின் வயதின் இரு மடங்காக இருக்கும்.

1) 6 2) 10 3) 24

37. பெட்டி ஒன்றில் மாம்பழம், தோடம்பழம், கொய்யாப்பழம் என்பன இருந்தன. மாம்பழத்திலும் பார்க்க கொய்யாப்பழம் 2 மடங்கு இருந்தன. கொய்யாப்பழத்திலும் 3 மடங்கு தோடம்பழம் இருந்தன. எல்லாமாக பெட்டியினுள் 36 பழங்கள் இருந்தால் கொய்யாப்பழங்களின் எண்ணிக்கை யாது?

1) 8 2) 12 3) 10

38. சதுர வடிவமான மரக்கறித்தோட்டம் ஒன்றின் ஒரு பக்கத்தின் நீளம் 12 மீற்றர் ஆகும். அதன் எல்லை வழியே 3 மீற்றர் இடைத்தூரங்களில் கம்பித் தூண்கள் உள்ளன. அவ்வாறு உள்ள கம்பித் தூண்களின் எண்ணிக்கை யாது?

1) 20 2) 16 3) 12

39. பிழையான கோவையைத் தெரிவு செய்க.

1) $6 \times 6 - 6 = 30$ 2) $5 \times 5 + 5 = 30$ 3) $33 - 33 - 3 = 30$

40. 2 குவளையின் கனவளவு = 1 கோப்பையின் கனவளவு.

3 கோப்பையின் கனவளவு = 1 போத்தலின் கனவளவு.

எனின் 3 1/2 போத்தல்களின் கனவளவு எத்தனை குவளைகளின் கனவளவுக்குச் சமன்.?

1) 21 குவளைகள் 2) 15 குவளைகள் 3) 12 குவளைகள் 4) 10 1/2 குவளைகள்

**இவ் வினாக்களுக்குரிய விடைகள் நாளை வியாழக்கிழமை (04.08.2016) வலம்புரி பத்திரிகையில் பிரசுரமாகும்.**

• • •